# அறிவும் அறியாமையும்

*பாவலரேறு*

**பெருஞ்சித்திரனார்**

**பஃறுளி பதிப்பகம்**

சென்னை-600 100

## நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **அறிவும் அறியாமையும்** |
| ஆசிரியர் | : | ***பாவலரேறு* பெருஞ்சித்திரனார்** |
| பதிப்பாளர் | : | திரு.மா. பிறைநுதல் |
| பதிப்பாண்டு | : | தி.ஆ. 2040 (2009) |
| தாள் | : | 16. அ.சீ (கி.கி.)<br>வெள்ளை படமக்கல் (மேப்லித்தோ) |
| அளவு | : | மடி(Demy) 1/8 |
| எழுத்தளவு | : | 11.5 புள்ளி |
| பக்கம் | : | **112** |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதா) |
| படிகள் | : | 1200 |
| விலை | : | உரு. 70.00 |
| கணினி | : | யாழ் கணினியகம், மேடவாக்கம். |
| வெளியீடு | : | **பஃறுளி பதிப்பகம்**<br>1/1150, பாவலரேறு தெரு,<br>பாவாணர் நகர்,<br>மேடவாக்கம்,<br>சென்னை – 600 100.<br>தொ.பே. : 99414 92701<br>98416 68320 |
| அச்சாக்கம் | : | வெங்கடேசுவர அச்சகம்<br>சென்னை – 600 014. |

# பதிப்புரை

நம் தமிழ் முன்னோர் பெற்றிருந்த உயிரியல் அறிவை நமக்குக் கிட்டியுள்ள தொன்மை இலக்கண நூலாம் தொல்காப்பியம்,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிபடுத் தினரே!"

(தொல். பொருள். 571)

என்று புலப்படுத்துகிறது. உடம்பினால் வெப்பம், தட்பம், வன்மை, மென்மை முதலியனவற்றையும் நாக்கினால் அறுசுவைகளையும் மூக்கினால் நன்னாற்றம், தீய நாற்றத்தையும் கண்ணினால் புறக்காட்சிகள் அனைத்தையும் செவியினால் ஓசை வகைகளையும் அறிந்து கொள்ளும் ஐவகை அறிவுகளுடன் ஆறாம் வகை அறிவு மனத்தினால் அறியப்படுவதாகும் என்றுரைக்கும் தொல்காப்பியம் அவ்வவ் அறிவுக்குரிய உயிர்களைப் பற்றி கூறுமிடத்து,

"மக்கள்தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(தொல். பொருள். நூற்பா எண். 577)

என்று நம்மை ஆறறிவு உயிரியாகச் சுட்டுகின்றது.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்த குடி" யாக உள்ள நம் இனம் பல்லாயிரம் ஆண்டுமுன் கண்டுணர்ந்த இவ் வுயிரியல் உண்மைகளை உலகமுழுதும் ஏற்றுக் கொண்டிருப்பதை "சிந்திக்கும் ஆற்றலை ஆறாம் அறிவு" என்றும் "மாந்தனை ஆறறிவுயிரி" என்றும் உலகத்தார் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

ஞால முதன்மொழிக்குரிய மூத்த தமிழ்க்குடி உலகுக்கு வழி காட்டக்கூடிய அறிவை இப்படிப் பல் துறைகளிலும் பெற்றிருந்ததை நம் இலக்கிய, இலக்கண நூல்களாலும் அகழ்வாய்வுகளாலும் கல்லணை, தஞ்சை பெரியகோயில் முதலான வரலாற்றுச் சின்னங்களாலும் பிற நாட்டார் குறிப்புகளாலும் இன்ன பிறவற்றாலும் அறிந்து கொள்ளலாம். ஆனால் இன்றைக்கு மற்றக் குடிகளுள் பல அறிவில் சிறந்தோங்கி வளர்ந்து வர நம் தமிழ்க்குடியோ அறிவாண்மையில் பின்தங்கியுள்ளதைக் காண்கிறோம்.

இழந்த நம் பெருமைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் பாடுபட்ட கொள்கை உரவோர் பலராவர். அவர்களுள் ஒருவரான பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் நாளைய தலைவர்களான இன்றைய இளைய தலைமுறையினர்க்கு விழிப்புணர்வூட்டுகின்ற வகையில் தகுந்த அறிவுரைகளைப் பல்வேறு தலைப்புகளில் தாம் நடத்தி வந்த 'தமிழ்ச்சிட்டு' இதழில் எழுதி வந்தார். அவை சிறியவர்க்கு மட்டுமின்றிப் பெரியவர்க்கும் தேவைப்படுவனவாய் இருக்கின்றன. அவ்வாறு அவர் எழுதியவற்றுள் அறிவைப் பற்றியும் அறியாமையைப் பற்றியுமான அவர்தம் சிந்தனை முத்துகளில் சிலவற்றை எடுத்து இந்நூலில் சேர்த்துள்ளோம்.

மற்ற உயிரிகளுக்கு இல்லாத ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு மாந்தனுக்கு இருந்தாலும் அஃது எல்லார்க்கும் ஒரே அளவினதாக ஒரே தன்மையினதாக அமைந்திருக்கவில்லை. வெவ்வேறு அளவினதாக வெவ்வேறு தன்மையினதாக உள்ளதை அறிவோம். அறிவு எவ்வாறெல்லாம் எழுகின்றது, வகைபடுகின்றது, அதற்கான கரணியங்கள் என்னென்ன என்றெல்லாம் அவர் பலவற்றைத் தக்க எடுத்துக் காட்டுகளுடன் விளக்கமாக எடுத்துரைப்பதையும் அவ்வாறே அறியாமை பற்றியும் இயம்பியுள்ளதையும் இந்நூலில் படித்து அறிந்துகொள்ளலாம்.

தமிழ்க் குமுகாயம் இவர்போலும் அறிஞர்தம் கருத்துகளைப் படித்து மானமுள்ள- அறிவுள்ள குமுகாயமாக விளங்க வேண்டும் என்பதே எம்பேரவா. நூல் உருவாக்கத்திற்குப் பெரிதும் துணைநின்ற யாழ் கணினி திரு.ஆ.செம்பரிதி அவர்களுக்கும் அச்சகத்தார்க்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகள்.

-பதிப்பாளர்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிவு வேளாண்மை | 7 |
| 2. | அறிவின் மூன்று நிலைகள் | 11 |
| 3. | 'அறிவு' எங்கே இருக்கின்றது? | 15 |
| 4. | 'அறியாமை' எங்குளது? | 18 |
| 5. | அறியாமைக் களிம்பு! | 21 |
| 6. | ஒள்ளறிவும் காரறிவும்! | 24 |
| 7. | பொக்கும் பதரும்! | 34 |
| 8. | அன்பும் அறிவும் | 38 |
| 9. | கலையுணர்வும் அறிவுணர்வும்! | 64 |
| 10. | உடன்பாடும் முரண்பாடும் | 68 |
| 11. | உங்களுக்குப் பேசத் தெரியுமா? | 87 |
| 12. | நம் அளவில் நாம்! | 92 |
| 13. | நாணம் - வெட்கம்! | 97 |
| 14. | எதிர்காலம் | 104 |
| 15. | தெரிந்து தெளிதல்! | 110 |

# 1. அறிவு வேளாண்மை

உங்களுக்கு வேளாண்மை என்றால் என்ன வென்று தெரியுமா? உழவுக்குப் பயன்படாத நிலத்தில் உள்ள பெருங்கற்கள், சிறிய கற்கள் முதலியவற்றை எல்லாம் ஒன்று விடாமல் பொறுக்கி அப்புறப்படுத்தி விட்டு, அதை நன்றாக உழுது, புழுதியை நன்றாக வெயிலிற் காயவிட்டு, அதற்கு வேண்டிய எருவிட்டு, நீர் பாய்ச்சி, பழுதில்லாத நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்து, அந்நிலத்தில் ஊன்றி, அது விளைந்து வருங்கால் அப்பயிரை ஆடு, மாடுகள் மேய்ந்து விடாமல் காவல் இருந்து, பயிர்களுக்கிடையில் முளைத்துவரும் களைகளை அறவே பிடுங்கி எறிந்து, அதனை வளரச் செய்து, அப்பயிர் முற்றிக் கதிர்கள் விட்டு முதிர்ந்தபின், அவற்றை அறுவடை செய்து, அதன் விளைவை நமக்கும் பிறருக்கும் பயன்படும்படி செய்வதே வேளாண்மை ஆகும்.

இனி, அறிவு வேளாண்மை என்றால் என்ன தெரியுமா? விளைவுக்குத் தகுதியான நிலம் போன்ற நம் மன வயலில் நம்மையறியாமல் முன்பே வந்து கிடக்கும் செருக்கு, அடங்காமை முதலிய சிறியனவும், பெரியனவுமான கற்களை அறவே பொறுக்கி எறிந்துவிட்டு, அவ்வறிவு நிலத்தை உணர்வு என்ற ஏரால் உழுது பதப்படுத்தி, வேட்கை என்ற வெயிலில் காயவிட்டு, அதன் பின் எண்ணங்கள் (சிந்தனை) என்ற எருவிட்டு, ஒழுக்கம் என்ற நீரைப் பாய்ச்சிப், பழுதற்ற கல்வி என்ற விதைகளைத் தூவி, அது தழைத்து வருங்கால், சோம்பல், தூக்கம் என்ற களைகளை அறவே அகற்றி, அக் கல்விப் பயிரைத் துன்பம், சூழ்நிலைகள் என்ற ஆடுமாடுகள் மேய்ந்து விடாமல், ஊக்கம், நம்பிக்கை, முயற்சி என்ற வேலிகள் இட்டுக் காத்து வந்தால், அறிவு என்ற பயிர் நன்றாகத் தழைத்து, வளர்ந்து, முதிர்ந்து விளைவு தரும்.

அதன்பின் அவ்வறிவுக் கதிர்களை அடித்து, அதனின்று வெளிவரும் அறிவு மணிகளைக் கூட்டி எடுத்து, அவற்றை நம் உயிர் வளர்ச்சிக்காகவும் நம்போல் அறிவு உழவு செய்யத் தெரியாத பிறரின் உயிர் வளர்ச்சிக்காகவும் பயன்படும்படி செய்வதே அறிவு வேளாண்மை ஆகும்.

பயிர் வேளாண்மை நம் உடல்களை வளர்ப்பது. அறிவு வேளாண்மையே நம் உயிரை வளர்ப்பது. எனவே பயிர் வேளாண்மை நம் உடலுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை நம் உயிர் வளர்ச்சிக்குத் தேவையான அறிவு வேளாண்மையும்.

இவ்வுலகில் உள்ள மக்கள் எல்லாரும் அறிவு வேளாண்மை செய்யத் தகுதி பெற்றிருந்தாலும், பெரும்பாலார் அதைப்பற்றிக் கவலைப்படாமல், உடல் வளர்ச்சிக்கு வேண்டிய முயற்சிகளையே செய்து வருகின்றனர். காரணம் அவர்கள் அறிவு வளர்ச்சியைவிட, உடல் வளர்ச்சியையே மிகத் தேவையாகக் கருதுவதுதான்.

அவர்கள் உடல் தேவையே முதல் தேவை என்று கருதுவதற்கு வேறொரு காரணமும் உண்டு. உடல் வளர்ச்சிக்கும், ஊட்டத்திற்கும் வேண்டிய உணவுப் பொருள்களை நாம் உண்ணாத பொழுது, உடல் வலுக்குன்றி, சோர்வடைந்து போகின்றது. அப்படி வலுக்குன்றிய உடலைப் பலவகையான நோய்களும் வந்து பற்றி வருத்துகின்றன. எனவேதான், மக்கள் அவ்வுடல் வருத்தத்தையும், நோய்த் துன்பத்தையும் பொறுக்க முடியாமல், இவ்வுடல் அவ்வகையான தொல்லை களைப் படாமல் இருக்கும் பொருட்டுப், பலவகையான உணவுப் பொருள்களையும் மருந்துகளையும் அரும்பாடுபட்டுத் தேடி, உண்டு, உடல் ஊட்டமும், நோய் நீக்கமும் பெறுகின்றனர்.

உடலைக் காவாததால் ஏற்படும் துன்பம் அவர்கள் அறியக்கூடும் வகையில் வெளிப்படையாகத் தென்படுவதால் அவர்கள் அவ்வகைத் துன்பங்களையே பெரிதென்று கருதி, அவற்றைப் போக்கிக் கொள்வதிலேயே தங்கள் வாழ்நாள் முழுவதையும் வீணே கழிக்கின்றனர்.

பயிர் வேளாண்மை செய்யாமற் போனால் எப்படி உடல் ஊட்டம் குறைந்தும், நோய் மிகுந்தும் போகுமோ, அப்படியே அறிவு வேளாண்மை செய்யாமற் போனால் உயிர் அல்லது மனமும் ஊட்டம் குறைந்தும், நோய் மிகுந்தும் பலவகையான துன்பங்களை அடைகின்றது. இந்த நோயும் அதனால் வரும் துன்பங்களும் அவர்களுக்கு வெளிப்படையாகத் தெரியா. ஆதலால்தான், அவர்கள் அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளைப் பற்றிக் கவலைப்படாதவர்களாக இருக்கின்றனர்.

மனநோய் வந்தவர்களைப் பற்றியும், திருட்டு, தீயொழுக்கம், கொலை, புன்செயல்கள் முதலியவற்றைச் செய்பவர்கள் பற்றியும் கேள்விப் பட்டிருக்கின்றீர்கள் இல்லையா? இவைதாம் மனம் என்னும் நிலத்தை வேளாண்மை செய்யாமல் வெறுமனே போட்டு விடுவதால் வரும் நோய்கள், கேடுகள், துன்பங்கள். ஆனால் இந்நோய்களால் வரும் துன்பங்களோ, கேடுகளோ வந்து அவர்களை வருத்தும் பொழுது, அவர்கள் இன்ன இன்ன காரணங்களால்தாம் அவை வந்தன என்பதை அறியாமல் போகின்றனர். எனவேதான் அவர்கள் அறிவு வேளாண்மையைப் பற்றிக் கவலைப் படாமல் உள்ளனர்.

பார்வையற்றவன் விளக்கைப் பற்றிக் கவலைப்படுவானா? அதுபோலவே மனக் குருடனும் அறிவு விளக்கைப் பற்றிக் கவலைப்படமாட்டான். இப்படியெல்லாம் நாம் இருத்தல் கூடாது.

நாம் அறிவுக் குருடரும் அல்லர்; அறிவு வேளாண்மை செய்யாமல் காலத்தை வீண் போக்கும் சோம்பேறிகளும் அல்லர். இன்னும் சொன்னால் நாம் அவ்வாறு வேளாண்மை செய்ய முடியாத கிழவரும் அல்லர். நல்ல இளமையானவர்கள்; உடல் வளம் உள்ளவர்கள். உடல்வளம் மட்டும் இருந்து மனவளம் இல்லாமற் போனால் எவ்வெவ்வகையான நோய்கள் நம்மை வந்து பற்றும், அவை நம்மை எப்படி எப்படி ஆட்டி வைக்கும், எவ்வளவு துன்பங்களை நமக்குத் தரும் என்பன பற்றியெல்லாம் ஓரளவு உணர்ந்தவர்கள்.

எனவேதான், நமக்கு வேளாண்மைக்குரிய காலம் இருக்கிறது; முயற்சி இருக்கிறது; தேவைகளும் தெரிந்து இருக்கின்றன. இனி, நாம் செய்ய வேண்டுவதெல்லாம் அறிவைப் பயிர் செய்ய வேண்டியதுதான்.

அறிவைப் பயிர் செய்யக் கல்வி விதையைத் தேடி, அல்லது விலைகொடுத்து வாங்கி உங்கள் மனவயலில் இப்பொழுதிருந்தே பயிர் செய்யுங்கள். அதற்கு முன், உங்கள் மன வயலை எப்படி எப்படித் தூய்மை செய்து, துப்புரவாக்கி, உழவுக்குத் தகுதியுடையதாகச் செய்து கொள்ளவேண்டும் என்பதை மீண்டும் ஒருமுறை நன்றாகத் திருப்பிப் படித்துக் கொள்ளுங்கள். அதன்படி செய்து வாருங்கள். இடையில் விழும் பூச்சி, புழுக்களைப் பற்றியும் பிற சேதங்களைப் பற்றியும் அவற்றை எப்படி ஒழிப்பது என்பதைப் பற்றியும் அறிவோம்.

# 2. அறிவின் மூன்று நிலைகள்

ஒரு விதை நிலத்தில் விழுந்து தக்க சூழ்நிலை வாய்த்தவுடன் முளைக்கிறது. விதை முளைத்தால்தான் அதை விதை என்கிறோம். இல்லெனில் அதைப் பதர் என்கிறோம். பதரை எவரும் பாராட்டமாட்டார்கள்; பேணி வைக்க விரும்பமாட்டார்கள். குப்பை என்று ஒதுக்கி, மண்ணோடு மண்ணாக மட்கச் செய்து விடுவார்கள். முளைக்கும் தகுதி உள்ள விதையை அனைவரும் பேணிப் பாதுகாப்பதும் அதைக் கொண்டு மேலும் பல விளைவுகளை உண்டாக்கிக் கொள்வதும் அனைவரும் விரும்பும் செய்கை.

### உயிர் வெளிப்படுதல்

இனி, ஒரு நல்ல விதை முளைத்துக் கிளைத்துச் செடியாகவோ மரமாகவோ அதன் தன்மைக்கு ஏற்ப வளர்கிறது. அவ்வகைக்குப் பொருத்தமாக இயற்கை அதற்கு எத்தனையோ ஆற்றல்களைக் கொடுத்திருக்கிறது. அது தனக்கு மாறான சுற்றுப்புறச் சூழ்நிலைகளினின்றும் தனக்குள்ள இயற்கையாற்றலைப் பெருக்கிக் கொண்டு வளர்தல்வேண்டும்.

அவ்வாறு வளர்கையில் அதனை ஒத்தோ, அல்லது அதற்கு மாறுபட்டோ தனக்கு அருகில் உள்ள தன் இனச்செடிகளையும் மரங்களையும் எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. கிடைக்கக் கூடிய நீரையோ, எருவையோ, வெயிலையோ போட்டி போட்டுக் கொண்டு, தன் வளர்ச்சிக் கென்று பயன்படுத்திக் கொள்ள முந்துகிறது.

### காத்துக்கொள்ளுதல்

தன்னைக் காத்துக் கொள்ளும் இம் முயற்சியை இது செய்யாமற்போனால், பிற செடிகளாலும் மரங்களாலும் அஃது

அழிந்துபோக வேண்டியிருக்கும். இதற்கு வேண்டிய உணவையும் ஊட்டங்களையும் அவையே உறிஞ்சிக் கொண்டு, இதனை இறக்கச் செய்துவிடுகிறது. எனவே இவ் வியற்கைப் போட்டியிலிருந்து ஒரு விதை செடியானபின் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இக் காத்துக்கொள்ளும் முயற்சி பறவைகள், விலங்குகள், மக்கள் ஆகிய அத்தனை உயிரினங்களுக்கும் பொதுவானது.

*நிலைப்படுதல்*

இனி, தன்னைக் காத்துக்கொள்ளும், செடியோ, பறவையோ, மாந்தனோ தன்னின்று வெளிப்பட்ட அவ்வவ் ஆற்றலைத் தம் தம் பின்வரும் உயிரினங்களுக்குப் பயன்படுமாறு நிலைப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட வேண்டியுள்ளது. முழுமையாக வளர்ந்த செடியோ மரமோ மீண்டும் தன்போலும் விதைகளை உண்டாக்கப் பூத்துக் காய்த்துக் கனிகிறது. பறவையோ முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துத் தன் இனத்தை நிலைப்படுத்தல் செய்கிறது. மாந்தனும் தன் வழியாகத் தன் இன நிலைப்பாட்டுக்கு வழிசெய்து கொள்ளுகின்றான்.

இவ்வாறு உலகில் உள்ள ஒவ்வோர் உயிர்ப்பொருளும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும், தன் வாழ்நாள்வரை தன்னைக் காத்துக் கொள்ளவும், தன் வாழ்நாளைக்குப்பின் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இம் மூன்று கடமைகளையும் எந்த ஓர் உயிர்ப்பொருள் செய்யத் தவறினாலும், அதுவும் அதன் இனமும் உலகினின்று அழிந்து மறைந்து போகும். உடல் நிலைக்குப் பொருத்தமான இப் பருப்பொருள் உண்மை போலவே அறிவு நிலைக்குப் பொருத்தமான நுண்பொருள் உண்மையும் அமைந்திருக்கின்றது.

எனவே, அறிவுக்கும் இம் மூன்று படிநிலைகள் உள்ளன. அறிவு நுண்பொருளாகையால் ஓர் உயிர் வழியாகவே நின்று, ஆற்றலாக அது வெளிப்படுதல் வேண்டும். அறிவு தனியாக ஒரு காய் போலவோ ஒரு கல் போலவோ இருப்பதில்லை. நுண்ணிய ஆற்றலான அது மூளை வழியாகவே வெளிப்படுகிறது.

நிலைத்திணைகளாகிய செடி, கொடி, மரங்களுக்கு அவற்றின் விதைகளிலுள்ள முளை எவ்வாறு அவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குகிறதோ, அப்படியே

பறவை, விலங்கு, மக்கள் ஆகிய இயங்குதிணை உயிர்களுக்கு மூளை விளங்குகிறது.

இனி, மூளைவழியாக அறிவு வெளிப்படுவதாலும் மூளை பரு உடலின் ஓர் உறுப்பாதலாலும், அம் மூளையோ அது பெற்ற உடலோ நோயின்றி நல்ல நிலையில் இருந்தால்தான், அதனின்று வெளிப்படுத்தப் பெறும் அறிவும் நல்லறிவாகவும் சிறந்த அறிவாகவும் இருத்தல் முடியும்.

## அறிவை வெளிப்படுத்துதல்

அவ்வாறு தோன்றும் அறிவு முதலில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஓர் ஓவியன் ஓர் ஓவியம் எழுதியும் ஒரு பாவலன் ஒரு பா எழுதியும் தம் தம் ஆற்றலைப் புறத்தில் உள்ளவர்களுக்குக் காட்டுவது இவ் வெளிப்படுத்தல் முயற்சியே என்க. எப்படி, தோண்டியவுடன் நல்ல நீர் கிடைத்துவிடாதோ, அப்படியே வரைந்தவுடன், அல்லது எழுதியவுடன் ஒரு நல்ல ஓவியமோ பாட்டோ வந்துவிடாது.

ஆழமாகவும் அகலமாகவும் தோண்டத் தோண்டவும், தெளியும் வரை காத்திருக்கவும் செய்த பின்னரே, ஊற்றிலிருந்து நல்ல நீர் பெற முடிகிறது. அறிவு முயற்சிகளும் அப்படித்தான். தோண்டிய உடன் கலங்கலாக வரும் நீரே குடிப்பதற்கேற்ற நன்னீர் ஆகாது. அடுத்தடுத்த முயற்சியில் கிடைக்கும் நீரே படிப்படியாகக் குடித்தற்குரிய சிறப்புடைய நீராக ஆகிறது. எனவே முயற்சி, காலம், உக்கம் இவற்றைப் பொறுத்து அறிவு சிறப்பு எய்துகிறது.

இதைத்தான் திருவள்ளுவப் பெருந்தகை

> 'தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி, மாந்தர்க்குக்
> கற்றனைத்(து) ஊறும் அறிவு' (குறள் எண். 396)

என்பார். மாந்தர் என்று சிறப்பித்துச் சொல்வதால், பறவைகளும், விலங்குகளும் கற்று அறிவுபெற முடியாத நிலையினையும், மக்களினமே கற்று அறிவை வளர்த்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ள நிலையினையும், எனவே மக்களாய்ப் பிறந்தவர் அனைவரும் கற்கவேண்டும் என்பதையும்

அப்பெருந்தகை உள்ளக் குறிப்பாகக் குறித்துள்ளார். 'விலங்கொடு மக்கள் அனையர்; இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்' என்ற குறளும் அவர் கருத்தை உறுதிப்படுத்தும்.

## அறிவைக்காத்தல்

இனி, வெளிப்படுத்தப் பெற்ற அறிவு, அதை வெளிப்படுத்தியவனால் தன் வாழ்நாள்வரை காக்கப் பெறுதல் வேண்டும். இல்லெனில், அஃது உலகோர்க்குப் பயன்படும் முன்னரே பிறரால் சிதைக்கப்பட்டோ அழிக்கப்பட்டோ விடும். தன் அறிவைப் பிறர் காத்தல் இயலாது. ஏனெனில் அவரவர்கட்கு வேறு வேறு அறிவு வெளிப்பாட்டு நிலைகளும் அவற்றைக் காத்தல் கடமைகளும் உண்டு. எனவே, தன்னின்று வெளிப்பட்ட அறிவைத் தானே காத்து மக்களைப் பயன்பெறுமாறு செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் அந்த வேலை சரிவர இயங்கும்.

தாம் அரும்பாடுபட்டுத் தேடிய செல்வத்தின் ஒரு கூறையும், காப்பதற்கென இன்னொருவரிடம் ஒருவர் ஒப்படைக்க மாட்டார். இனி உலகின் உயர்ந்த செல்வமாகிய அறிவை மட்டும் எப்படிப் பிறரிடம் ஒப்படைக்க முடியும்? அவ்வாறு ஏதோ சில தவிர்க்க வியலாச் சூழ்நிலைகளில் ஒப்படைப்பினும் அந்த அறிவின் சிறப்பியல்புகளில் பல கூறுகள் சிதைந்தோ மறைந்தோ போகலாம். எனவே ஒருவர் வெளிப்படுத்திய அறிவு அவராலேயே அவர் வாழ்நாள்வரை காக்கப் பெறுதல் வேண்டும்.

## அறிவை நிலைப்படுத்தல்

இனி, அவர் வாழ்நாள்வரை காக்கப்பெற்ற அவ்வறிவு அவர் வாழ்நாளைக்குப் பின்னும் மக்கள் அமைப்புக்கு என்றென்றும் பயன்படும்படி, அவர் நிலைப்படுத்தி வைத்துவிட்டுப் போகவேண்டும். இல்லெனில் அரும்பாடுபட்டு வெளிப்படுத்தியதும், காக்கப் பெற்றதுமான அவ்வறிவு அழிந்து மறைந்து போகும். எனவே, இயற்கையின் எல்லா உயிர்க் கூறுகளையும் போலவே அறிவுக்கூறும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும், காத்தல் செய்து கொள்ளவும், நிலைப்படுத்திக் கொள்ளவும் தவறுமானால் அவ்வறிவால் இம்மக்களினம் எவ்வகைப் பயனும் பெறுவதில்லை.

## ३. 'அறிவு' எங்கே இருக்கின்றது?

'அறிவு' என்பது இவ்வுலகத்தில் ஒரு தனிப் பொருளாகக் கிடைக்கவில்லை. அஃது இங்குள்ள மரஞ்செடி கொடிகளோடு பின்னிப்பிணைந்து கிடக்கின்றது; கடல் நீரோடு கரைந்திருக்கின்றது; மண்ணிலும் மலையிலும் புதையுண்டு கிடக்கின்றது; காற்றோடு காற்றாய்க் கலந்து வீசுகின்றது; ஒளியோடு ஒளியாக மின்னிக் கதிரவனின் வெப்பச் சுடரிலும், நிலவின் குளிர்ந்த ஒளியிலும், விண்மீன்களின் மினுக்கொளியிலும் பொருந்தி இருக்கின்றது.

சிறிதாகவும் பெரிதாகவும், மணந்தும் மணவாமலும், இருக்கின்ற உலகத்துப் பூக்களிலெல்லாம் அறிவு சிரித்துக் கிடக்கின்றது. இலைகளிலும் தழைகளிலும் அது பொதிந்து இருக்கின்றது. ஊர்ந்து செல்கின்ற நத்தையின் கூடுகள், உயர்ந்து நிற்கும் எறுப்புப் புற்றுகள், மற்றும் நிலத்தின் சந்து பொந்துகள் யாவிலும் 'அறிவு' உட்புகுந்து கொண்டுள்ளது. கடல் நீரில் நீந்தித் திரியும் பன்னூறாயிரங் கோடி மீன்கள் அந்நீருக் கடியில் படிந்திருக்கும் பவளப் பாறைகள், முத்துச் சிப்பிகள் இவற்றிலெல்லாம் அறிவு குடிகொண்டுள்ளது.

குழந்தையின் கண்களும் அதன் காதுத் தொளைகளும், பால் மணக்கும் அதன் வாயும் நாக்கும் அறிவின் உருவங்களே! நம்முடைய உடல் தசைகள், எலும்புகள், நாடி நரம்புகள், குருதித்துளிகள் யாவற்றிலும் அறிவு இரண்டறக் கலந்துள்ளது. துளிர்க்கும் வியர்வையிலும், துப்பும் எச்சிலிலும் அறிவு கரைந்துள்ளது. நம் முப்பத்திரண்டு பற்களிலும் அறிவு பளிச்சென்று சிரிக்கின்றது.

வானொடு வானாய் நிலைத்து நின்றும், முகிலொடு முகிலாய் உலவித் திரிந்தும், இயற்கைத் தாயின் கைவண்ணத்தால் ஒளிரும் அத்துணைப் பொருள்களிலும் அது அதுவாய் உருப்பெற்றும் அறிவு இவ்வுலக மக்களின் கைகளுக்கு மிக எட்டக்கூடிய பொருளாய் எங்கும் நிறைந்திருக்கின்றது.

பறவையும், விலங்கும் அறிவே! பட்டுப்பூச்சியும் ஈ எறும்புகளும் அறிவே! கிளியின் பசுமை நிறத்திலும் அதன் மூக்கிலுள்ள செந்நிறத்திலும், காக்கையின் கருமையிலும் அறிவு தன் கைவண்ணத்தைக் காட்டி விளையாடுகின்றது. எத்துணையாயிரம் வண்ண வேறுபாடுகள்! ஒளிச் சிதறல்கள்! உருவ வெளிப்பாடுகள்! இவை யாவிலும் அறிவு கூத்திடுகின்றது; நகைக்கின்றது; கை கொட்டி ஆரவாரிக்கின்றது.

இப்பரந்த உலகின் கண் பார்க்கப்பெறும் பொருள்களெல்லாம் அறிவே! கேட்கப்பெறும் ஒலிகளெல்லாம் அறிவே! உண்ணப் பெறும் சுவைகளில் எல்லாம் அறிவு நுண்ணியதாக உருமாறி நம்மில் ஒட்டி உறவாடிக் கிடக்கின்றது. நாம் நின்றாலும் நடந்தாலும் ஓடினாலும் அறிவு நம் கூடவே நிற்கின்றது; நடக்கின்றது; ஓடி வருகின்றது. நம்மை விட்டு என்றும் அது விலகி நிற்பதில்லை. நம் நிழலோடு நிழலாக ஒட்டிக் கிடக்கின்றது. நம் உருவத்துள் உருவமாய் இரண்டறக் கலந்து வாழ்கின்றது.

நாம் படிக்கின்ற நூல்களில் மட்டும் அறிவு கொட்டி வைக்கப் பெறவில்லை. நாம் பார்க்கின்ற இடங்களில் எல்லாம் கொட்டி வைக்கப் பெற்றுள்ளது.

மூடர்களிடமும் அறிவு குடிகொண்டுள்ளது. அவர்களின் கைகளுக்கும் அஃது எட்டுகின்றது. காற்றைப்போல் அவர்களின் மேல் உரசி விளையாடுகின்றது; கதிரவன் ஒளியைப் போல் அவர்களின் மேல் பட்டு உரைக்கின்றது. ஆனால் அவர்களுக்கு அது புலப்படுவதில்லை. கோழிக்குஞ்சுகளைப் போலவும் மீன் குஞ்சுகளைப் போலவும் அறிவு மூடர்களின் கைகளில் விளையாடுவதைப் பலமுறை நான் பார்த்திருக்கின்றேன். ஆனால் ஒருபோதும் அவர்கள் அதை திரும்பிப்பார்த்ததே இல்லை. இருளில் புதையுண்ட நிழலைப் போல் அவர்களின்

*உள்ளங்களில் கருமை படர்ந்திருக்கின்றது. அவர்களின் கண்களிலும் முகவாய்ப் புறங்களிலும் முதுகுப்புறங்களிலும் மொய்த்துக் கிடக்கும் சுள்ளான்கள், கொசுக்கள், ஈக்களை அவர்கள் எப்படிப் பொருட்படுத்துவது இல்லையோ, அப்படி அறிவை அவர்கள் பொருட்படுத்துவது இல்லை. வேறு பிரித்து உணர்வதில்லை.*

*அறிஞர்களே அறிவை மதிக்கிறார்கள்! அவர்களே அதன் மாணவர்கள்; ஆசிரியர்கள்; பிள்ளைகள்; பெற்றோர்கள்; அஃது அவர்களின் பேச்சுகள், நடையுடைத் தோற்றங்கள் யாவிலும் தெறித்துச் சிதர்கின்றது. அவர்களின் கைகள் பட்டவுடன் அறிவு உயிர் பெறுகின்றது. அவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிகின்றது; ஏவல் செய்கின்றது. அவர்களோடு எப்பொழுதும் ஒட்டி உறவாடிக் கொண்டு அவர்களின் கண்களில் ஒளியேற்றுகின்றது; சொல்லில் மெருகேற்றுகின்றது; அவர்தம் நடையில் ஒரு மிடுக்கையும், அவர்தம் போக்கில் ஒரு பெருமிதத்தையும் அவர்களின் வாழ்க்கைக்குப் பெரும்புகழையும் உண்டாக்கிக் கொடுக்கின்றது. அவர்களை அஃது என்றும் அழிய விடுவதில்லை. அவர்களோடு அதுவும் அழிவதில்லை.*

# 4. ‘அறியாமை’ எங்குளது?

‘அறிவு’ குடி கொண்டிருக்கும் இடத்தில் எல்லாம் ‘அறியாமை’ அதன் நிழல் போல் படிந்திருக்கின்றது. ஒளிக்கு நேர் எதிர்ப்புறத்தில் ஒவ்வொரு பொருளின் பக்கவாட்டிலும் ‘அறியாமை’ தலை சாய்த்துப் படுத்திருக்கின்றது. பூக்களைச் சுற்றியுள்ள இலைகள் போலும், மூளையைச் சுற்றியுள்ள கனத்த மண்டையோட்டினைப் போலும், அதன்மேல் அடர்ந்து வளர்ந்து கிடக்கும் மயிர்த்திரட்சியைப் போலும், அறியாமை இவ்வுலகப் பொருள்களை அடைகாத்துக் கொண்டுள்ளது.

அறியாமை அறிவுக்கு முதுகு! அதை மூடி மூடித் திறந்து காட்டும் இமை! அறியாமையை மூடிப் புதைக்கும் பொழுது, அறிவு உயிர் பெற்று எழுகின்றது! அறிவு விழிக்கையில் அது தூங்கப் போகின்றது. தேங்காயின் ஓடு போலவும் அதைச் சுற்றி இறுகிப் பொதிந்து கிடக்கும் நார்போலவும் முந்திரிப் பருப்பை மூடிய வலிந்த கொட்டை போலும் அறிவை மூடிப் பொதிந்து காக்கின்றது அறியாமை!

‘அறியாமை’ இல்லாத இடம் இல்லை! அதன் கை படாத பொருளுமில்லை. எல்லா உயிர்களின் கருப்பைகளிலேயே அதுவும் கருக் கொள்கின்றது. அவ்வுயிர்கள் பிறக்கும்போது அதுவும் கூடவே இணைந்து பிறக்கின்றது. அவை வளர வளர அதுவும் வளர்கிறது; அவற்றின் மடிவு வரை அதுவும் மடிவதில்லை. அவற்றின் உடல் மட்கி மண்ணாகும் பொழுது, அதுவும் மண்ணாகி, மீண்டும் உருக்கொண்டு உயிர்களைச் சேர்கின்றது. அறிவு அழியாதது; அறியாமையும் அழிவற்றது.

ஒளிக்குள் ஒளியாயும் நிழலுக்குள் நிழலாயும் அது வடிவங்கொள்கின்றது. அறிவு நாடகத்திற்கு அறியாமைதான்

முன்னுரை சாற்றுகின்றது; பின் முடிவுரை சாற்றி அந் நாடகத்தைத் திரையிட்டு மூடுகின்றது. அறிவு சக்கரமாகிச் சுழலும் பொழுது, அறியாமை அதன் ஆரக்கால்களாக விருந்து அதைச் சுற்றுகின்றது. கடல்நீர் மேலெழும்பிச் சுருண்டு அலைகளாக உருள்கையில் அறியாமை அவற்றின் உட்புகுந்து புரள்கின்றது.

அறியாமைக்கும் அறிவுக்கும் இடையில் நடையிட்டுத் திரிவதே மனம்! மனத்தை அறிவு கவ்வும் பொழுது, அறியாமை மூளையைக் கவ்வுகின்றது! அறிவு மூளைக்குக் குடியேறும் பொழுது, அறியாமை தன் குடும்பத்துடன் மன வீட்டில் குடி புகுகின்றது. எப்படியும் எங்கும் அறியாமை, அறிவு வாழும் வீட்டின் எதிர்வீட்டில் தன்னைக் குடியமர்த்திக் கொள்கின்றது. அறிவுக்கு எதிராய் நின்று அது செயல்படுகின்றது. அறிவுப் பேச்சின் ஒவ்வொரு சொல்லுக்கும் முன்னும் பின்னும் அறியாமை இடைவெளியாகி நிற்கின்றது. ஒவ்வொரு சொல்தொடருக்கும் நடுவிலும் முடிவிலும், அறியாமை காற்புள்ளியாகவும், அரைபுள்ளியாகவும், முக்காற் புள்ளியாகவும் முற்றுப்புள்ளியாகவும் அறிவை இடைமறிக்கின்றது. அறிவு வரையும் ஒவ்வோர் எழுத்தின் கோடுகளின் பக்கவாட்டிலும், சுழிகளின் உட்புறத்திலும் புள்ளிகளைச் சுற்றியும் அறியாமை வெற்றிடத்தைப் பரப்பி வைக்கின்றது. விசும்பினிடையில் ஆங்காங்கே சிதர்ந்து ஊடாடிக் கிடக்கும் கோள்களுக்கும், உடுக்களுக்கும் இடையில் உள்ள வெற்றிடங்களை அறியாமை முழுவதும் கட்டியாள்கின்றது.

அறிவுக்குக் கரைகளாக அறியாமை அமைந்து, அதன் ஆட்சியை எல்லைமீறாமல் கட்டுப்படுத்துகின்றது. அறிவு தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் பொழுது அறியாமை அதற்குத் தூக்குக் கயிறாக இருந்து அதன் கழுத்தை இறுக்குகின்றது. அறியாமை அறிவுக்கு முன்பிறந்து, அதற்குப் பின்னே இறக்கின்றது. உடன் பிறப்பில் அறிவுக்கு அண்ணன் அறியாமை!

'எல்லாவற்றையும் அறிந்துள்ளேன்' என்பவனின் விலாப் புறத்தில் நின்று அறியாமை சிரிக்கின்றது. அறிவு தோலாகி நின்றால் அறியாமை அதன் உட்பொதிந்து நுண்ணுறுப்பாக அமைந்து கிடக்கின்றது. இயற்கை யென்னும் தாய்க்கு

ஒட்டிப்பிறந்த இரட்டைப் பிள்ளைகளே அறியாமையும் அறிவும்! அவற்றை வேறு வேறாக்க முடிவதில்லை.

அறிவு பண்ணாக நின்று இசையாக எழுச்சி பெறுகையில், அறியாமை தாளமாகி நின்று அதற்குக் கவர்ச்சியை உண்டாக்குகின்றது. அறிவு ஒருவனை சாக்கிடங்குக்கு அழைத்துச் செல்கையில், அறியாமை அவனுக்குக் குழி பறிக்கின்றது. அறிவு ஒருவனை மணவறைக்கு இட்டுச் செல்கையில், அறியாமை அவன் புலன்களோடு ஒட்டி உள்ளே சென்று, அவனுக்குப் படுக்கை விரிக்கின்றது. அறிவு ஒருவனைப் புகழ் மேடைக்குத் தூக்கிப் போகையில், அறியாமை அவனுக்கு மாலையாக வந்து கழுத்தில் விழுகின்றது. அவன் அங்கு நின்று பேச முற்படுகையில், உணர்ச்சியாக வந்து அவன் தொண்டைக் குழியை அடைக்கின்றது.

அறிவை அறிய விரும்பாதவர்களிடத்தில் அது தொடங்கி, அதை அறிந்தவர்களிடத்தில் அஃது ஊடுருவி, அதைக் கடந்தவர்களிடத்தில் அது முற்றுப் பெறுகின்றது. அறியாமை, அறிஞர்களின் விரும்பத் தகாத பிள்ளை! மூடர்களின் செல்லப் பிள்ளை!

# 5. அறியாமைக் களிம்பு!

இராமாயணமும் மகாபாரதமும் நம்நாட்டில் வழங்கும் இரண்டு பழங்கதைகள். இக்கதைகளுக்குள் நூற்றுக்கணக்கான கிளைக் கதைகள் உள்ளன. இவையும், இவற்றை உள்ளடக்கிக் கொண்டுள்ள அந்த இராமாயண மகாபாரதக் கதைகளும் கட்டுக் கதைகளே! அவற்றில் வரும் கதைத் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒருபோதும் இவ்வுலகில் வாழ்ந்ததில்லை. ஆனால் அவர்களைப் போல பலர் இங்கு வாழ்ந்திருக்கலாம். பெரும்பாலும் கதைகள் என்றாலே அவற்றில் வரும் உறுப்பினர்கள், உயிருள்ள மக்களுக்கிருக்கும் குண நலன்களைக் கொண்டுதான் படைக்கப் பெறுவார்கள். எனவே அவர்கள் உண்மையானவர்கள் என்றோ, அவர்களைப் பற்றிய நிகழ்ச்சிகள் உண்மையாகவே நடந்தவை என்றோ நினைத்துக் கொள்ளக்கூடாது. உண்மையான நிகழ்ச்சிகள் வரலாறு ஆகும். எனவே இராமாயணமும் மகாபாரதமும் வரலாறுகள் அல்ல. அவற்றை இதிகாசங்கள் என்று சொல்லுவார்கள். இதிகாசங்கள் என்றால் அறங்களைப் பற்றிய பழங்கதைகள் என்று பொருள்.

இவ்விரு கதைகளும் கட்டுக் கதைகள் என்றால் இவற்றில் வரும் கதைத் தலைவர்களும் அவர்களைப் பற்றிய நிகழ்ச்சிகளும் கற்பனைகளே! ஆனால் இன்றைக்கு மக்கள், அக் கதைகளில் வரும் கதைத் தலைவர்களாகிய, இராமனையும், இலக்குவன், அநுமன் போன்றவர்களையும், தருமனையும், கண்ணன் போன்றவர்களையும், கடவுள்களாக வணங்குகின்றார்கள். இச் செயல்கள் மூட நம்பிக்கையின்பால் பட்டனவாகும். இராமனும், இலக்குவனும், கண்ணனும் கடவுளர் அல்லர். அவர்கள் மாந்தர்களே! அதிலும் கற்பனைப் படைப்புகளே! அவர்கள் கடவுள்கள் என்றால், இன்றைக்குத் திரைப்படங்களில்

வரும் நல்லவர்கள் அனைவரும் கடவுள்கள் தாம் என்று சொல்வதில் தவறு இல்லை.

நல்லவராக உள்ள ஒருவரைப் போற்றுவதிலும், அவரைப் பின்பற்றி நடப்பதிலும் தவறு இல்லை. நாம் புத்தரைப் போலும், ஏசுவைப் போலும், அன்புள்ளவர் களாகவும், அருள் படைத்தவராகவும், உண்மை உள்ளவராகவும் வாழவேண்டும் என்பதில் தவறு இல்லை. அதேபோல் இராமாயண மகாபாரதத்தில் உள்ள இராமனைப் போலும், தருமனைப்போலும் இருக்க வேண்டும் என்றாலும் தவறு இல்லை. அதற்காக இராமனையும் தருமனையும் கடவுள்களாகத்தான் வணங்கவேண்டும் என்பது பெருத்த மூட நம்பிகையே! இப்படி நாம், நாட்டிலுள்ள கதைத் தலைவர்களில் பல பெயர்களைக் கடவுள்களாக வணங்கிவருகின்றோம்.

இதனால் நம் அறிவு வளர்ச்சி தடைப்படுகின்றது. மூட நம்பிக்கைகள் நம்முடைய உலக முயற்சிகளைத் தடுத்து நிறுத்திவிடும். முயற்சிகள் நின்று போனால் நமக்குரிய தேவைகளை நாமே தேடிக் கொள்ளவேண்டும் என்கின்ற அக்கறையும் ஆர்வமும் குறைந்துபோய் விளைவுகள் இல்லாமற் போகும். விளைவுகள் இல்லாமற் போனால் உலகில் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடும். பஞ்சமும் பட்டினியும் உள்ள ஒரு நாட்டில் கொள்ளையும் கொலையும் எப்பொழுதுமே இருக்கும். மக்களும் அவற்றுக்குத் தக்கபடி கெட்டவர்களாகவும், ஒழுக்கமற்றவர்களாகவும் இருப்பார்கள். எனவே நாம் கண்ட கண்ட பெயர்களையெல்லாம் கடவுள்களாக எண்ணி வணங்குகின்ற மூடநம்பிக்கைகளிலிருந்து அறவே விடுபடவேண்டும்.

புத்தர் ஓர் அரசர், அவர் மக்கள் துன்பத்தைக் கண்டு வருந்தி நாட்டை விட்டுக் காட்டுக்குப் போய்த் துறவியாகித் தவம் செய்தார். அதற்காக அவரைக் கடவுள் என்று ஏன் கொண்டாட வேண்டும்? அவர் போலவே ஏசுநாதர் மக்களுக்காக எவ்வளவோ துன்பப்பட்டு, மக்களின் பொருட்டாகவே சாகடிக்கப்பட்டார். அவரையும் கடவுள் என்று வணங்குகின்றோம். நம் காலத்தில் வாழ்ந்த காந்தியாரைக் கூட

நாம் கடவுளாக வணங்குகின்றோம். அண்மையில் நம் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்து மறைந்த அண்ணாவைக் கூட இன்று சிலர் கடவுளாக வணங்க முற்பட்டிருக்கின்றனர். இவற்றால் யாருக்கு என்ன பயன்?

நாம் மக்களுக்கு நன்மை செய்த பெரியோர்களை நினைவு கூர்தல் நல்லதே! அப்படி நினைவு கூர்கின்றபொழுது, அவர்கள் நமக்காகச் சொல்லிச் சென்ற பல நல்ல செய்திகளையும், அறிவுரைகளையும் நாம் கடைப்பிடிக்க முயற்சி செய்தல்வேண்டும். அவ்வாறு செய்யாமல் அவர்களைக் கடவுள்கள் என்று கும்பிடுவதால், நாம் அவர்களின் அறிவுரைகளை இழிவு படுத்தவே செய்கின்றோம். நாம் நிலத்தை உழுது, விதைத்துப் பயிர் செய்வதற்கு மாறாக, அந்த நிலத்தை வணங்கிக் கொண்டிருந்தால், அந்த நிலத்தில் நமக்குத் தேவையான பயிர்கள் தாமே விளையுமா? விளையாது. அதுபோல் எந்தப் பயனை நாம் பெறவேண்டுமோ அதற்குரிய முயற்சிகளைச் செய்தால்தான் அந்தப் பயனை நாம் பெறமுடியும்.

நமக்குப் படிப்பு வரவேண்டும் என்பதற்காகப் பொத்தகங்களுக்கு நாள்தோறும் காலையிலும் மாலையிலும் கற்பூரம், மணப்புகை கொளுத்தியும் காட்டியும் வணங்கி வந்தால், படிப்பு தானே வந்துவிடுமோ? முயற்சி செய்து படிக்கவேண்டும். நாள்தோறும் படித்தவற்றை மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்து மனத்தில் இறுத்திக் கொள்ளுதல் வேண்டும், அப்பொழுதுதான் படிப்பு வரும்.

இதுபோல்தான் உலகில் உள்ள செயல்கள் அனைத்துக்கும் மாந்த முயற்சி வேண்டும். அதற்கு மேல் சில இயற்கையான நிகழ்ச்சிகள் உண்டு. மழை பெய்வதும் பெய்யாததும் இயற்கை. அவற்றைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. கவலைப்பட்டு மழையை வருவிக்கவும் முடியாது; மழையை நிறுத்தவும் முடியாது. அஃது இயற்கை. இயற்கை நிகழ்ச்சிகளைக்கூட முயற்சியால் மாற்றிவிட முடியும் என்கிறார் திருவள்ளுவர்.

'தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்'

என்பது அவர் கருத்து.

ஆனால், இவற்றிற்கு நேர் மாறாக, நம் பெரியவர்களில் சிலர், நமக்கு உள்ள மூட நம்பிக்கையால், இராமாயண, மகாபாரதக் கதைகளைச் சொல்லி, அக் கதைகளில் வரும் இராமனையும் கண்ணனையும் வணங்குவதால் பல நன்மைகள் விளையும் என்று சொல்வார்கள். அவர்கள் அறியாமையால் அவ்வாறு சொல்கின்றார்கள் என்றே எண்ணிக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் இராமனையும் கண்ணனையும் வணங்குபவர்கள் ஏராளமானவர்கள். பிறகு ஏன் நம் நாட்டில் பஞ்சமும், பட்டினியும் தலைவிரித்தாடுகின்றன? மேல் நாடுகளில் இராமனையும் கண்ணனையும் வணங்குபவர்கள் இல்லை. பின் ஏன் அவர்கள் நமக்குக் கொடுத்து உதவும்படி மிகுந்த வளமும் வல்லமையும் படைத்தவர்களாக இருக்கிறார்கள்? அவர்கள் உழைக்கின்றார்கள்; முயற்சி செய்கின்றார்கள். எனவே நன்றாக வாழ்கின்றார்கள். நாம் மூட நம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்கின்றோம். மழை பெய்யாததற்கும், நிலம் விளையாததற்கும் இராமனையும் கண்ணனையும் ந;மபிக் கொண்டுள்ளோம்; முயற்சி செய்யாமல் வாளா இருக்கின்றோம். எனவே விளைவு இல்லாமல் போகின்றது. ஆகவே துன்பப்படுகின்றோம்.

இங்குள்ளவர்கள் எதற்காகப் பின்னர் இராமனையும் கண்ணனையும் பற்றி அளவிறந்து புகழ்கின்றார்கள்; பாராட்டுகின்றார்கள்; வணங்குகிறார்கள்; வாழ்த்துகின்றார்கள்? - என்று கேட்டால், அவர்கள் எல்லாரும் நம்மை ஏமாற்றிப் பிழைப்பதற்காகத்தான் என்று எண்ணவேண்டியுள்ளது. அல்லாவிடில் அவர்கள் உடல் உழைப்பில்லாமலேயே வாழ விரும்புகின்றார்கள் என்று கருத வேண்டியுள்ளது. அதுவும் இல்லாவிடில், அவர்கள் மூளையில் அறியாமைக் களிம்பு அளவுக்கு மீறி, ஏறியிருக்கின்றது என்றே சொல்லுதல் வேண்டும்.

# 6. ஒள்ளறிவும் காரறிவும்!

*திருவள்ளுவப் பேராசான் வெளிப்படுத்திய எத்தனையோ நுண்பொருள் உண்மைகளுள், அவரால் கண்டு காட்டப் பெற்ற அறிவு வகைகள் பெரிதும் வியக்கத்தக்கனவாகும்; சுருக்கமாகச் சொல்வதானால் மாந்தனின் மனத்தையும் நோக்கத்தையும் உயர்த்துகின்ற - மேலோங்கச் செய்கின்ற ஒவ்வோருணர்வும் ஒவ்வோர் அறிவே! அவனைத் தாழ்த்துகின்ற - கீழிறங்கச் செய்கின்ற ஒவ்வோருணர்வும் ஒவ்வோர் அறியாமையே!*

*அறிவு, அதனைப் பெற்றவனுக்கும் அவனைச் சூழ்ந்திருப்பவர்களுக்கும் விழிப்புணர்வைத் தந்து, அவனை மகிழ்வாகவும் நிறைவாகவும் இருக்கும்படி செய்யும்.*

*அறியாமை, அதனைக் கொண்டவனுக்கும் அவனைச் சூழ்ந்திருப்பவர்களுக்கும் அழிவுணர்வைத் தந்து, அவனைத் துன்பத்திலும்; நிறைவற்ற தன்மையிலும் இருக்கும்படி செய்யும்.*

*அறிவு, அதனைப் பெற்றவனுக்கும், அவனைச் சுற்றியிருப்பவர்க்கும் நன்மையைத் தரும்.*

*அறியாமை, அதனைக் கொண்டவனுக்கும், அவனைச் சுற்றியிருப்பவர்க்கும் தீமையைத் தரும்.*

*அறிவு, ஒருவனை உயர்த்தும்; அறியாமை ஒருவனைத் தாழ்த்தும்.*

*இவ்வுண்மைகளையெல்லாம் ஆழமாகவும் அகலமாகவும் திருவள்ளுவப் பேராசான், தம் அரிய நூலாகிய திருக்குறளில் மிக விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கின்றார்.*

*அறிவு வாலறிவை (மெய்யறிவை) உணர்த்தும். (குறள் எண்.2)*

*அறிவினாலேயே மனவுணர்வின் நடுவு நிலையை உணரமுடியும் (குறள் எண்.116)*

*அறிவே அடக்கத்தைக் கொடுக்கும் (குறள் எண்.123*

*அதுவே உலகத்தோடு இயைபு கொண்டு வாழ்வதைக் கற்பிக்கும் (குறள் எண்.140)*

*அறிவே பேராசையைக் கட்டுப்படுத்தும் (குறள் எண்.175)*

*அறிவுடையார் ப்பொழுதும் பயனற்ற சொற்களைச் சொல்லார் (குறள் எண்.198)*

*அவர் எப்பொழுதும் தம் பகைவர்களுக்கும் தீமையைச் செய்யார் (குறள் எண்.203)*

*அறிவுள்ளவர் தம் தேவையைப் போல், மற்றவர் தேவைகளையும் உணர்வார் (குறள் எண்.214)*

*அறிவுடையார் கைகளில் கிடைத்த பொருள், ஊர்க்கிணறு நிறைந்ததைப் போல், அனைவர்க்கும் பயன்படும் (குறள் எண்.215)*

*அறிவுள்ளவர் உயிர் குலத்துக்கே பயனுடையவராக இருப்பர் (குறள் எண்.68)*

*அன்னவர்கள் ஒருவருடன் இணைகின்ற பொழுது மகிழ்வாயிருக்கும்; பிரியும் போது துன்பமாக இருக்கும் (குறள் எண்.394)*

*அறிவுள்ளவர் கற்கும் பொழுது ஆசிரியரிடம் பணிந்திருந்து கற்றுக் கொள்வர். (குறள் எண்.395)*

*அவர்கள் பிறர் மகிழ்வதைக் கண்டு தாமும் மகிழ்வர் (குறள் எண்.399)*

*தாம் கற்கும் கல்வியையே பிற செல்வங்கள் யாவினும் உயர்வாகக் கருதுவர் (குறள் எண்.400)*

*நாச்சுவையைவிட அறிவுச் சுவையையே மிகுதியாக விரும்புவர் (குறள் எண்.412)*

*அவர்கள் எப்பொழுதும் மிகுதியாகப் பேச மாட்டார்கள் (குறள் எண்.419)*

*அவர்கள் பிறர் செய்யும் கோடுகளிலிருந்து தம்மை என்றும் காத்துக் கொள்வர்; அதனால் எதிரிகளுக்கும்கூட இவர்களை அழிப்பது கடினம் (குறள் எண்.421)*

*அவர் எப்பொழுதும் தீமைகளை நாடாமல் நல்லவற்றையே நாடுவர் (422).*

*எந்தப் பொருளையும் பேச்சையும் அப்படி அப்படியே பார்க்காமல், கேட்காமல், அவற்றை ஆய்ந்து பார்த்து உண்மையறியவே அறிவுள்ளவர்கள் விரும்புவர் (குறள் எண்.422, 355)*

*அத்தகையவர்கள் பேசும்பொழுது எளியவர்களுக்கும் விளங்குமாறு பேசுவார்கள்; பிறர் கூறுவது தெளிவில்லாமல் இருந்தாலும் எளிதில் விளங்கிக் கொள்ளவும் செய்வார்கள் (குறள் எண்.424)*

*அவர்கள் எப்பொழுதும் உலகத்தைத் தழுவியே நடந்து கொள்வார்கள்; எதற்கும் எளிதே உணர்வு வயப்படவும் மாட்டார்கள்; சோம்பி அமர்ந்துவிடவும் மாட்டார்கள் (குறள் எண்.425)*

*உலகம் எப்படி இருக்கின்றதோ அதற்குத் தக்கபடி இணைந்து இருக்கக் கற்றவர்கள், அவர்கள் (குறள் எண்.426)*

*இவர்கள் எப்பொழுதும் எதிர்காலத்தில் வரும் விளைவுகளை முன் கூட்டியே உணர்ந்து கொள்வார்கள். (குறள் எண்.427)*

*அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சுவார்கள், இவர்கள் (குறள் எண்.428)*

*ஒரு செயலால், அல்லது சொல்லால் பின்னர் என்னென்ன விளைவு வரும் என்பதை, அறிவுள்ளவர்கள் முன் கூட்டியே அறிந்து கொள்வார்கள். ஆகையால், பின்னர் வரும் எதனாலும் அவர்கள் துன்பப்படுவது இல்லை. (குறள் எண்.429)*

*இவர்கள் தம் அறிவாற்றலால் எதையும் விளைவித்துக் கொள்வார்கள் (குறள் எண்.430)*

*பின்னர் வரும் ஊதியத்தைக் கருதி, இக்கால் கையில் உள்ள முதலை, அறிவுள்ளவர்கள் இழந்துவிடும் செயலைச் செய்ய ஊக்கம் தர மாட்டார்கள். (குறள் எண்.463)*

*வெள்ளம் போல் பெருகி வரும் துன்பம் கூட அறிவுடையவர்கள் தம் உள்ளத்தால் எண்ணியமட்டிலேயே இல்லாமற் போய் விடும் (குறள் எண்.622)*

*அறிவுள்ளவருடைய நட்பு வளர்பிறை போல் வளருந் தன்மையது. (குறள் எண்.782)*

*- என்பன போன்ற மிக நுட்பமான உண்மைகளை அறிவுக்கும் அறிவுள்ளவர்க்கும் இயைபாகக் கூறியுள்ளார், நம் திருவள்ளுவப் பேராசான்.*

*அதே போல், அறியாமைக்கும் அவ்வறியாமை உள்ளவர்க்கும் அவர் தரும் விளக்கக் கருத்துகள் அறிவு வேட்கை கொண்ட இளைஞர்களால் நன்கு கவனிக்கப் பெறுதலும் உள்ளத்தில் பதிக்கப்பெறுதலும் வேண்டும். அவை வருமாறு.*

*அறிவில்லாதவர்களுக்கு வெட்கம் இராது; அறிவு பெறவேண்டும் என்னும் நாட்டம் இராது; பிறர்மேல் உண்மை அன்பு இராது; தம் பெருமை நலன்களைப் பேணிக் கொள்ளவேண்டும் என்னும் எண்ணம் இராது. (குறள் எண்.833)*

*அவர்கள் துன்பங்களையும் இழப்புகளையும் ஏற்றுக் கொண்டு, இன்பங்களையும் ஊதியங்களையும் தவறவிட்டு விடுவார்கள் (குறள் எண்.831)*

*அவர்கள் சில நேரங்களில் கல்வி கற்றிருந்தாலும், அதைப் பிறர்க்கு எடுத்துச் சொல்பவர்களாக இருந்தாலும், அவற்றின்படி தாம் நடக்கமாட்டார்கள். (குறள் எண்.834)*

*அவர்கள் ஏதாவது ஒரு செயலைச் செய்தாலும் அதில் பொய்ம்மை இருக்கும்; போலியான ஆரவாரமும் இருக்கும்; அதை எவ்வாறு செய்து முடிப்பது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. (குறள் எண்.836)*

*அவர்களிடத்தில் ஏதோ ஒரு வகையில் ஏதோ ஓர் அளவில் பொருள் வந்து சேரின் ஏற்கெனவே பித்துப் பிடித்த ஒருவன் கள் குடித்தது போல் தலைகால் தெரியாமல் ஆட்டம் போடுவார்கள். (குறள் எண்.838)*

அவர்களின் நட்பு ஒரு வகையில் நல்லது; ஏனெனில் உண்மையான நண்பர்கள் பிரியும் பொழுது வருந்துவதைப் போல், அவர்களின் பிரிவு வருத்தத்தைத் தருவதில்லை (குறள் எண்.839)

அறிவில்லாதவர்கள் விருந்தோம்புதலை விரும்ப மாட்டார்கள். (குறள் எண்.89)

இவர்கள் உலகில் நிலையில்லாத பொருள்களை நிலையானவையே என்று எண்ணிச் செயல்படுவார்கள் (குறள் எண்.331)

தேவையான நூல்களைப் படிக்காமலேயே, இவர்கள், நிறைய அவைபற்றிப் பேசுவார்கள் (குறள் எண்.401)

அதேபோல், இவர்கள் கல்லாதவரின் அறிவற்ற சொற்களையே விரும்பிக் கேட்பார்கள் (குறள் எண்.402)

இவர்கள், இருக்கிறார்கள் என்று சொல்லும்படி இருப்பார்களே தவிர, இவர்களால் பிறர்க்கு ஒரு பயனுமிராது; எந்த விளைச்சலும் இல்லாத களர் நிலத்தைப் போன்றவர்கள் (குறள் எண்.406)

அறிவுக்கூர்மை இல்லாத இவர்கள் அழகான பொம்மையைப் போல் உலா வருவார்கள் (குறள் எண்.407)

இவர்கள் விலங்கினங்களைப் போன்றவர்கள் (குறள் எண்.410)

அடங்கிய வாயுடையவர்களாக இல்லாமல், எப்பொழுதும் சலசல என்று பேசிக் கொண்டே இருப்பார்கள் (குறள் எண்.419).

எந்த ஒன்றைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து கொள்ளமாட்டார்கள், இவர்கள். எதிர்வரும் ஒன்றைப்பற்றி இவர்களால் முன்கூட்டியே அறிய முடியாது. (குறள் எண்.427)

அஞ்ச வேண்டுவதற்குக்கூட அஞ்சாத குருட்டுத் துணிவுடையவர்கள், இவர்கள் (குறள் எண்.428)

எதிர்காலத்தில் வருகின்ற விளைவுகளை இவர்கள் அறியமாட்டார்களாகையால், அவற்றால் வரும் துன்பங்களை இவர்களால் தவிர்த்துக் கொள்ள இயலாது. (குறள் எண்.429)

இவர்கள் அறிவில்லாதவர்கள் என்பதால் என்ன நிலைகளை உடையவர்களாக இருப்பினும், இவர்கள் இல்லாதவர்களைப் போன்றவர்களே ஆவார்கள். (குறள் எண்.430)

இவர்களுடைய நட்பு தேய்பிறையைப் போன்றது (குறள் எண்.782)

அறிவில்லாத தன்மையைத்தான் உலகம் இல்லாமை என்று சொல்லும்; பிற பொருள்கள் இல்லாமையை இல்லாமை என்று சொல்லாது. (குறள் எண்.841)

அறிவில்லாதவர்கள் சில நேரம் பிறர்க்கு மன மகிழ்ச்சியோடு கொடுக்கின்ற கொடையையும், அதைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு வந்து சேர வேண்டிய வரவாகவே கருதிக் கொள்ளவேண்டும் (குறள் எண்.842).

மேலும், அறிவில்லாதவர்கள் தங்களின் அறியாமையால் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் துன்பம், அவர்களின் எதிரிகளாலும் செய்வதற்கு அரியதாக இருக்கும். (குறள் எண்.843)

அறியாமை என்று சொல்லப் பெறுவதற்கு முதல் அடையாளமான தன்மை என்னவென்றால், தாம் சிறந்த அறிவுடையவராக இருக்கின்றோம் என்று எண்ணிக் கொள்ளும் செருக்குடைய எண்ணமே. (குறள் எண்.844)

அறியாதவர்கள், பிறரிடம் வெளிப்படுத்த வேண்டாத மறைவான கமுக்கச் செய்திகளை வெளிப்படுத்தி விட்டு, அதனால் தங்களுக்குப் பெருத்த துன்பங்களை வருவித்துக் கொள்ளுவார்கள். (குறள் எண்.847)

அவர்கள் நல்லனவற்றைப் பிறர் ஏவினாலும் அவற்றிற்கு உடன்பட்டுச் செய்ய மாட்டார்கள்; தாங்களும் அவற்றைச் செய்ய வேண்டுவனவாகக் கருதிச் செய்யவும் மாட்டார்கள்; எனவே, அவர்களே அவர்களுக்கு இறுதிவரை ஒரு நோயாக இருந்து, துன்பப் பட்டுக் கொண்டே இருப்பார்கள். (குறள் எண்.848)

அறிவில்லாதவர்களால் உண்மையைக் காண முடியாது; பிறர் கண்டு சொன்னாலும், அதை உணர முடியாமல், தங்களுக்கு எந்த அளவில் அல்லது வடிவில் உண்மை தெரியுமோ, அந்த

அளவையே அல்லது வடிவத்தையே முழுஉண்மை என்று எண்ணிக் கொண்டு இருப்பார்கள். (குறள் எண்.849)

அறிவற்றவர்களின் பகைவர்கள், இவர்களின் இயல்பான அஞ்சுதல் தன்மையினாலும், அதனால் இவர்களால் எந்தத் துன்பமும் உடனே வரும் வாய்ப்பின்மையாலும், இறுதிவரை மகிழ்வாகவே அச்சமின்றி இருப்பர்.

அறிவில்லாதவர்கள் தொடர்பு எப்பொழுதுமே கேடு தருவது. (குறள் எண்.797)

அறிஞர்களைப் போற்றிப் புரந்து கொள்ள வேண்டும் என்னும் உணர்வு அறிவில்லாதவர்களிடம் இருப்பதில்லை. (குறள் எண்.976)

அறிவற்றவர்கள் என்றும், எப்பொழுதும், யாருக்கும் பணிவாக நடந்து கொள்ளாமல், தங்களையே பெரியவர்களாக நினைத்து வியந்து கொள்வார்கள். (குறள் எண்.978)

அறிவற்றவர்கள் எப்பொழுதும் செருக்குப் பிடித்தவர்களாகவே இருப்பர். (குறள் எண்.979)

அறிவற்ற சிறுமைப் பண்பு கொண்டவர்கள், பிறருடைய குற்றங்களையே பெரிதாக எண்ணி, எல்லாரிடமும் அவற்றைக் கூறி மகிழ்வார்கள். (980).

காரறிவு

இனி, அறியாதவர்களின் தன்மைகள் வேறு. அறிந்தும் அந்த அறிவை நல்ல செயல்களான ஆக்கத்திற்குப் பயன்படுத்தாமல், பிறரை வஞ்சித்து ஏமாற்றுவதற்கும், அதால் ஊதியம் பெறுவதற்கும் பயன்படுத்தும் தன்மைகள் வேறு.

அறிந்தவர்களின் தன்மை அறிவு; அறியாதவர்களின் தன்மை அறியாமை. ஆனால் அறிவுள்ளவர்கள் அவ்வறிவைத் தங்களின் தந்நல வேட்கையால், பிறரை வஞ்சித்து ஏமாற்றிப் பணம் பறிக்கும் தன்மையே காரறிவு என்பது.

பிறரை ஏய்க்கின்றவன், தான் நல்ல செயல்களையே செய்வது போல் தோன்றும்படி, அதனால் பிறர் தன்னை

மதிக்கும்படி செய்து, தன் உள்நோக்கமாகிய பொருள் திரட்டும் தன்மையை நிறைவு படுத்திக் கொள்கிறான். இவனின் அறிவு அறிவுள்ளவர்களின் தன்மை போலவே இருக்கும். ஆனால் அவ்வறிவு தந்நலம் நிரம்பியதாகவே இருப்பதால் அதைக் காரறிவு என்பார் திருவள்ளுவர். எனவே காரறிவு என்பது அறிவுக்கும் அறியாமைக்கும் இடைப்பட்ட அறிவுப் போலியான ஒரு தன்மையாகும்.

அறிவுப் போலியே காரறிவு. இதைக் கண்டு கொள்வது கடினம். பலர் இதை அறிவென்றே மயங்கி ஆதரவும் தருவர். ஆனாலும் அது போலியறிவே.

அறிவுள்ளவனின் அறிவுச் செயலும், அறியாதவனின் அறியாமைச் செயலும் பிறர்க்குப் பளிச்சென்று விளங்குபவை; நன்றாக அடையாளம் கண்டு கொள்ளும் தன்மைகள் வாய்ந்தவை; ஆனால் காரறிவும் காரறிவுச் செயலும், பிறர் கண்டு கொள்வதற்குக் கடினம் வாய்ந்தது; பிறரால் கண்டு கொள்ள இயலாதது.

அதனாலேயே காரறிவாளர் பலர் பேரறிவாளர்களாகவும், பெருந் தொண்டர்களாகவும் உலகப் புறநிலைகளால் இயங்குபவர்களாகவும், ஆனால் அதே பொழுதில், வஞ்சகத்தால் திரட்டிய பெருஞ் செல்வர்களாக அகநிலைகளால் இயங்குபவர்களாகவும் இருப்பர். இதற்கு ஒரே புற அடையாளம் நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், ஆண்டுக்கு ஆண்டு, அவர்கள் முன்னைவிடப் பெருஞ் செல்வர்களாக முன்னேறிக் கொண்டிருப்பதுதான்.

ஏனெனில் உண்மையான, நேர்மையான, அறிவுணர்வு உள்ளவர்களால் அந்த அளவில் செல்வநிலையில் வளர்ச்சி பெற முடியாது. காரணம் செல்வநிலையில் மேம்படுவதற்கான அளவில் அவர்களால் உலகியலில் ஈடுபட இயலாமல் போகும். அதற்கு அவர்களுக்கு மனமும் இல்லை; நேரமும் இல்லை. அந்த அளவில் அவர்கள் பிறர் நலம் கருதும் அறிவாக்கத்திலும், செயலாக்கத்திலுமே ஈடுபட்டு அழுந்திக்கிடப்பர் என்க.

இனி, திருக்குறளில் மட்டுமே காரறிவு என்பது பேசப் பெறுகிறது. அதற்கு விளக்கமும் கூறப் பெறுகிறது.

*களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்*
*ஆற்றல் புரிந்தார்கண் இல் (287)*

- என்பது அக் குறள்.

காரறிவு என்பது திருட்டைச் செய்யும். திருட்டு என்பது பிறர் பொருளை வஞ்சகத்தால், ஏமாற்றால் அவர் அறியாத நேரத்தில், இடத்தில், முறையில் கைக் கொள்ளுவதாகும். அவ்வழியில் ஒருவன் நல்லவனைப் போல் நடப்பது, நடிப்பது, கள்ளமாகப் பிறர் பொருளைத் தன் வயப்படுத்துவது, அதைச் சரி செய்யக் கள்ளக் கணக்கு எழுதுவது, அது கண்டுபிடிக்கப் பெற்றால், அதை வேறு வேறு வகைகளால் மூடி மறைப்பது போன்ற அனைத்து நிலைகளும் காரறிவால் நிகழ்வனவே.

இவ்வகையான திருட்டுகள் மிகத் திறமையாகச் செய்யப்படும் ஆதலால் காரறிவு என வெறுமையாகக் குறிக்காமல் காரறிவாண்மை என்று ஆள் திறனையும் இணைத்துக் கூறுவார் திருவள்ளுவர். இக் களவு, எதையும் எண்ணி, ஆராய்ந்து, காலம், இடம், பொருள், நன்மை, தீமை, தன்மை, பிறன்மை முதலியவற்றை அளவிட்டுச் செய்யும் ஆற்றல் உள்ளவர்களிடம் துளியும் இருப்பதில்லை, என்பார் அவர்.

பிறன் பொருளைத் திறம்படத் தன் வயப்படுத்துபவர்க்குத் திறமையான அறிவும், செயலும் தேவைப்படுகின்றன. இவை பிறர்க்கு இழப்பையும் தமக்கு ஆக்கத்தையும் தருதலால், உண்மையான, ஒளி பொருந்தியதான அறிவு என்று கூறாமல், பொய்யானதான, போலியான, வஞ்சகமான அறிவு என்று கூறுதற்குக் காரறிவு என்று விளக்கிக் காட்டுவர் திருவள்ளுவர் பெருமான். எனவே, உண்மையறிவு, ஒளியறிவு படைத்த ஒள்ளியரைப் போல் இயங்கும், ஏமாற்றும், வஞ்சிக்கும் கருமனத்தைக் கொண்ட காரறிவு படைத்த காரறிவாளரிடம் நாம் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். ஏனெனில் ஒள்ளியரைப் போலவே இகள்ளரும் சிற்சில வகைகளில், சிற்சில நிலைகளில் இயங்குவர் ஆதலின் என்க.

*களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து*
*ஆவது போலக் கெடும். (283)*

## 7. பொக்கும் பதரும்!

தவச (தானிய) விளைச்சல் தன்மையைக் குறிக்கையில் பொக்கு, பதர் என இரண்டு சொற்கள் தமிழில் பயன்படுத்தப் பெறுகின்றன. பொக்கு என்பது உள்ளீடு முற்றாதது என்றும், பதர் உள்ளீடு அற்றது என்றும் பொருள்படும்.

மக்களினத்திலும் இந்த இருவகைத் தன்மையர் உள்ளன. அறிவு முதிர்ச்சியற்றவர்களைப் பொக்கு என்னும் சொல்லாலும், அறிவே அற்றவர்களைப் பதர் என்னும் சொல்லாலும் அறிஞர் அடையாளம் காட்டுவர்.

திருவள்ளுவப் பேராசான் புறஞ்சொல்லுபவர்களைக் குறிக்கையில் இந்த இருசொற்களையம் குறிப்பாகவும், சிறப்பாகவும், பயன்படுத்தி இருவேறுபட்ட மனநிலை யுள்ளவர்களின் தன்மைகளையும் தெளிவாக உணர்த்திக் காட்டுவார்.

புறங்கூறுதல் என்னும் குற்றத்திற்கு ஆளாகுபவர் இருவர். ஒருவர் புறங்கூறுபவர்; மற்றவர் அதைக் கேட்பவர். முதலாமவர் ஒருவரைப் பற்றிய தன்மைகளைப் பிறரிடம் குறையாகவும் குற்றமாகவும் வடிவமைத்துக் கூறுகிறார்.

ஒருவர் அப்படிக் கூறும்பொழுது, அவர் முழு அறிவு பெறாத தன்மையில், பலவகையான தன்மைகளைக் கற்பனையாகவும், பொய்யாகப் புனைந்தும், கேட்பவர் நம்பும் வகையிலும், கவர்ச்சியாகவும், ஆளுக்குத் தக்கபடி சுவடித்துக் கூறும் மனவெழுச்சி உடையவராகவும் இருப்பார். அவர் உள்ளத்தில், தாம் புறங்கூறப்படுபவரைப் பற்றிய பெறாமையும், அவரை எவ்வாறேனும் குற்றப்படுத்திப் பிறர் நம்பாதபடி செய்ய வேண்டும் என்னும் மனக்கிளர்ச்சியும் எப்பொழுதும், சுரந்து

கொண்டேயிருக்கும். அதனால் அவர் பொய்யையே துணையாகக் கொண்டு வாழ்கிறார்.

பிறரைப் பற்றிப் பொய்யுரையாகச் சொல்லுவதும், மற்றவர் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் மதிப்பையும் அழித்துக் கொள்ளும்படி கூறுவதும் அவர் வழக்கமாகப் போய் விடுகிறது. இவ்வாறு சொல்லும் பொழுது, அதைக் கேட்பாரிடம், மனக்கிளர்ச்சி கொண்டு கூறுவதும், தாம் புறங்கூறுபவரைக் கண்டவிடத்துப் பொய்யாக நகைத்து உறவாடுவதும் அவர் தன்மைகளாக இருக்கும்.

இதைத்தான் திருவள்ளுவர், 'புறனழீஇப் பொய்த்து நகை', என்னும் தொடராலும், 'புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தல்' (183) என்னும் தொடராலும், புலப்படுத்துகிறார்.

"இத்தகையவர்க்கு அறத்தின் மேல் நம்பிக்கையிராது; அவர் உள்ளத்தில் உலக இயற்கையின் பேரொழுங்காகிய அறவுணர்வு இராது" என்கிறார். ஒருவர் உள்ளத்தில் அறவுணர்வு இல்லாத தன்மையை, அவர் கூறுகின்ற புறங்கூறுதலின் புன்மை உரைகளைக் கொண்டு உணர்ந்துவிடலாம் என்கிறார் திருவள்ளுவப் பெருந்தகை.

> "அறஞ் சொல்லும் நெஞ்சத்தான் அண்மை புறஞ்சொல்லும்
> புன்மையாற் காணப் படும்" **(குறள் : 185)**

என்பது அவர் திருவாயுரை.

அப்படிப்பட்டவர்களுக்குத், தம்மால் புறங்கூறப் பெறுபவரிடம் நேருக்கு நேராக, கண்ணுக்குக் கண்ணாக நின்று அவரிடத்துத் தாம் காணும் அல்லது கண்ட அல்லது இருப்பனவாகக் கருதிக் கொள்ளும் குறைகளை, அல்லது குற்றங்களை, நேரிடையாக எடுத்துக் கூறவோ, அல்லது கண்டிக்கவோ துணிவிருக்காது. அவர்கள், தாம் புறங்கூறப் படுபவரிடம் நெருங்கிப் பழகியிருந்து, இக்கால் ஏதோ ஒரு மனக்கோட்டத்தால் வெறுப்புற்று, மனந்திரிந்து அவருடன் அவர் மேல் வைத்த அன்பாலும், மதிப்பாலும், நம்பிக்கையாலும், பழகிக் கொண்டு வரும் நண்பர்களிடம், அவர்கள் அவர்மேல் வெறுப்புக் கொண்டு பிரிந்து போகுமாறு, நகை கலந்த சொற்களுடன் புறங்கூறி, உண்மையான நட்பின் பெருமையைப் பாராட்டி உணராமல் இகழ்கிறார்.

தாம் பழகியிருந்த தம் முன்னாளைய நண்பர் போல் இவர் இதுவரை நெருங்கிப் பழகியிராதவர்களிடம் எல்லாம், அவர் மேல் புறங்கூறுவதன் வழி நட்பு கொள்வதுபோல் நடிக்கிறார். இதுவரை அவர்களிடம் அவர் அவ்வாறு நெருங்கிப் பழகியிருந்தவராக இல்லை; இப்பொழுதோ அவர் மேல் புறங்கூறுவதற்காகவே நட்பாடத் தொடங்குவார். இந்த உண்மைகளைத் திருவள்ளுவப் பெருந்தகை கீழ்வரும் மெய்யுரைகளால் விளக்குவர்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல். (குறள் : 184)

பகச்சொல்லிக் கேளிரிப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். (குறள் : 187)

அரையறிவு

இவ்வாறு பழகிய நண்பர்களைப் பற்றியே புறங்கூறும் பொய்யையே மரபாகிக் கொண்டொழுகும் - உள்ளத்தார், மற்றவர்களைப் பற்றி என்னதான் கூறமாட்டார்? எனவே எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும் என்பார்.

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. (குறள் : 188)

என்னும் நல்லுரை அதனை விளக்குகிறது. இவ்வாறான தீப்பண்பினர் தம் குற்றங்களை ஒருபோதும் காண்பதில்லை. இத்தன்மையினார் உலகியல் அறமுணராத நெஞ்சும், அறிவும் அற்றவர்கள். இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் தம்மைப் பற்றியும், பிறர் இவரை விட இன்னும் ஆழமாக ஆராய்ந்து சொல்லுபவர்கள்,

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். (குறள் : 186)

என்பதை அறியாமல் போவதால் அரையறிவு அஃதாவது நன்றாக விளையாத அறிவுணர்வு உடையவர்கள் - பொக்கர்கள் - பொக்குத்தன்மை உடையவர்களாக இருக்கின்ற வர்கள் ஆவார்கள்.

## அறிவு என்னும் நெற்று

இனி, இத்தகையவர்கள் கூறுகின்ற உரைகள் எந்த வகையான உலகியல் நன்மையும் தராத பயனற்ற சொற்களாகவே இருக்கும். எனவே, இவற்றைப் பிரித்துணர மாட்டாமல், தம் எதிர்ப்பாடு ஒன்றையே எதிர்பார்த்து, மறித்து நிறுத்தி, தம்மிடம் மிகுந்த மனக்கிளர்வுடனும், சுவையாகவும், சுவடித்துக்கூறும் வெற்றுரைகளை, நீண்ட நேரம் செவி தந்து, கூறக் கேட்பவர்களே, அறிவு என்னும் நெற்றற்ற - உள்ளீடற்ற - மாந்தப் பதர்கள் என்பது திருவள்ளுவர் கருத்து. அவர்கள் அவ்வாறு கேட்காவிடில் இவர்கள் இவ்வாறு புறங்கூறி வீணாய்ப் போகார்களே என்பதால் வெகுண்டு, இத்தகையவர்களால் உலகியல் நலங்கெடுவதைப் பொறுக்காமல், இவர்கள் மக்களில் பதர்கள் என்பார்.

> பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
> மக்கட் பதடி எனல். **(குறள் : 196)**

என்பது அக் குறள். எனவே, ஒருவனைப் பற்றி, அவனிடம் சொல்லாமல், அவனையறிந்த அல்லது அறியாத பிறரிடம் புறங்கூறுவானைப் ‘பொக்கு’ அல்லது ‘பொக்கன்’ என்றும், அவனிடம் அவ்வுரைகளைக் கேட்டுக் கொண்டிருப்பவனைப் ‘பதர் அல்லது பதடி’ என்றும் அறிந்துகொள்க.

# 8. அன்பும் அறிவும்

*ஒரு தன்மையின் இருகூறுகள்:*

உயிர்களுக்கிருக்கும் தன்மைகளுள் அன்பும் அறிவுமே மிகவும் உயர்ந்த தன்மைகளாகும். எறும்பு முதல் யானை வரை உள்ள எல்லா உயிர்களுக்கும் மாந்த உயிர்களைப் போலவே அன்பும் அறிவும் இருக்கின்றன.

அன்பு உயிர்களை மலர்ச்சியுறச் செய்வதும் அறிவு அவற்றை வளர்ச்சியுறச் செய்வதுமாகும். இவ்விரண்டு தன்மைகள் உயிரியக்கத்திற்கே அடிப்படைகளாகும். இவை தனித்தனித் தன்மைகள் போல் தோன்றினாலும், இரண்டும் ஒரு தன்மையின் இரு கூறுபாடுகளே! அன்பு இல்லாமல் அறிவு இல்லை; அறிவு இல்லாமல் அன்பு இல்லை.

ஓர் உயிரிடத்தில் அன்பு தோன்றியவுடனேயே, அதுபோல் இன்னோர் உயிரைத் தேடிக் கண்டு பிடிக்கும் அறிவும் உடனே தோன்றி விடுகின்றது. அந்த அறிவால் அவ்வுயிரின் இருப்பிடத்தை அறிந்து கொண்டவுடன் அதனொடு உறவாடுதற்குரிய அன்பு மேலும் ஒருபடி தோன்றுகின்றது. அவ்வாறு உறவாடுங்ககால் மற்றோர் உயிரின் இயக்க நிலைப்பாடுகளில் அறிவு ஊன்றி மேலும் விரிவா அவற்றை அறியத் துடிக்கின்றது. இந்நிலையில் அறிவு மேலும் ஒருபடி விளங்கித் தோன்றுகிறது. இவ்வாறே அன்பும் அறிவும் மாறி மாறி வளர்கின்றன.

ஒரு குறிப்பிட்ட அளவில் அன்பு தன் வளர்ச்சியை நிலைநிறுத்திக் கொண்டால் அறிவும் தன் வளர்ச்சியை நிலைநிறுத்திக் கொள்கின்றது. இன்னுஞ் சொன்னால் அன்பே ஒருவகை அறிவும், அறிவே ஒருவகை அன்புமாகும்.

அன்புக் கடவுளும் அறிவுக் கடவுளும்:

இவ்விரண்டு தன்மைகளும் தனித்தும் ஒன்றியும் இவ்வுலக மலர்ச்சிக்கே அடிப்படையாக இருப்பதால்தான் அன்பே இறைவன், அறிவே இறைவன் என்ற கோட்பாடுகள் மக்களிடத்து எழுந்தன. இக்கோட்பாடுகள் எழுந்தவுடன் அன்பு பெண்மைக்குரியதென்றும், அறிவு ஆண்மைக்குரியதென்றும் கண்டு, பெண் தெய்வமாகவும் ஆண்தெய்வமாகவும் அவற்றை மாந்தர் உருவகித்துக் கொண்டனர். பின் அவற்றை அகவுணர்வால் அறியும் தன்மை போய், புறவுணர்வால் அறிகின்ற விருப்பம் கொண்டு, அன்பைக் குளிர்ச்சி என்றும் அறிவைச் சூடு என்றும் உணரச் செய்தனர். குளிர்ச்சிக்குத் தண்ணீரையும், சூட்டிற்கு நெருப்பையும் கருவிப் பொருள்களாகக் கொண்டு, அவையிரண்டையும் தெய்வ வடிவங்களாகக் கருதி வணங்கத் தொடங்கினர். இவ்வெண்ணம் மேலும் மேலும் வலிவுறவே அவற்றிற்கு நிறத்தையும் வடிவையும் கற்பித்தனர். நிறத்தால் அவை நீலமாகவும் சிவப்பாகவும் இருப்பதைக் கண்டு, அவற்றிற்கு இருப்பிடமாகக் கடலையும், கதிரவனையும் மூலத்தெய்வங்களாக வகுத்தனர். நீலவண்ணத்தை மால் (நீலம், கறுப்பு) என்றும், செவ்வண்ணத்தைச் சிவம் (செம்மை) என்றும் அழைக்காலயினர். சிலர் நீல வண்ணத்தை விண்ணாகவும், கொண்டு விண்ணு, விட்ணு ஆகிய பெயர்களால் மாலை விளித்தனர்.

இவற்றின் அடிப்படையில் பல விரிந்த கோட்பாடுகளைக் கொண்டு உருவான சமயங்களே மாலியமும், சிவனியமும் ஆகும். தொடக்கத்தில் மால் என்பது பெண் தெய்வமே. திருமால், பெருமாள் என்பவை திருமான், பெருமான் என்னும் ஆண்பாற் சொல்வடிவங்களுக்குரிய பெண்பாற் சொல்வடிவங்களே. இருவணக்கங்களும் ஆக்கலும் (சக்தி) அழிவும் (சிவம்) ஆகிய இரு பேராற்றலுக்குரியவையாகக் கொள்ளப்பெற்று, இரு வழிபாடுகளாக மாறிய பின், மாலியத்தார் தாம் வழிபடும் தெய்வத்தைப் பெண்ணென்று கொள்ளாது ஆணென்றே கொண்டனர். ஆனாலும் நிறத்தை மாற்ற அவர்கள் விரும்பாமற் போனமையால், திருமால் நீலவண்ணத்தராகவும், சிவன் செவ்வண்ணத்தராகவுமே இருந்தனர். இவ்விரு சமயங்களின் தோற்றத்திற்கு முன் தெய்வ வணக்கங்கள் வேறு வகையாக இருந்தன. அவற்றின் தோற்றமும் வரலாறும் விரிக்கில் பெருகும்.

அன்பு, உயிர்களைப் பின்னிப் பிணைக்கும் தன்மைவாய்ந்த மனவுணர்வாகும். அறிவு, உயிர்களையும் அவை தொடர்பான இயக்க நிலைகளையும் விளங்கவைக்கும் மனவுணர்வாகும். இவை ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிராக உள்ள மாந்தன் ஈறாக அனைத்து உயிர்க்கும் அவ்வவ் அளவில் நின்று விளங்கித் தோன்றும் என தொடக்கத்து மெய்யறிவியலும் அண்மைத்து அறிவியலும் கூறும். உள்ள உணர்ச்சிகள் நிலைத்திணை உட்பட எல்லா உயிர்களுக்கும் இருப்பதை அண்மையில் அமெரிக்க அறிவியற் பேரறிஞர் கிளீவ் பாச்சுடர் என்பவர் தாம் கண்டுபிடித்த 'பாலிகிராஃப்' என்னும் கருவியைக் கொண்டு மெய்ப்பித்துள்ளார்.

இவ்விரண்டு தன்மைகளிலும் உயர்வு, சிறப்பு என்பவை எந்த ஒரு தனித்தன்மைக்கும் இல்லை. இரண்டும் உயர்வான தன்மைகளே; சிறந்த தன்மைகளே! ஒன்று இருந்து மற்றொன்றிறு இல்லாவிடில் அந்நிலை துன்ப நிலையேயாகும். உயிரியக்கம் அதால் தடைப்பட்டுப் போகும். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றையே சிறந்தது என்பார் அறியாதவரே! இரண்டும் சமநிலைப்பட்டு வளரும் பொழுதுதான் உயிரியக்கம் சிறப்புறுகின்றது.

அன்பிருந்து அறிவில்லையானால் உயிர் மந்தப்பட்டுப் போகும். அதுபோலவே அறிவிருந்து அன்பில்லையானால் உயிர் சிதறுண்டு, தட்டுக்கெட்டுத் தடுமாறும். இவ்விரண்டு நிலைகளிலும் இவ்வுலக நடத்தலுக்குரிய உயிரியக்கம் தடைப்பட்டு அழிவுற்றுச் சிதையும். அக்கால் உலகமும் அழிவுறும்.

பொதுவாக அன்பும் அறிவும் உலக உயிர்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படை உணர்வுகளாக இருப்பினும், சிறப்பாக அன்பு பெண்பால் உயிர்களிடத்தும், அறிவு ஆண்பால் உயிர்களிடத்தும் மிகுந்து விளங்கித் தோன்றுவதைக் கூர்ந்து நோக்கி உணரலாம். பெண்பால் உயிர்களுக்கு உயிர்களைத் தாங்கிப் பிறப்பிக்கும் தாய்மைத் தன்மையும், அவற்றைப் புரந்து, பேணுந்தன்மையும் இயற்கையாகவே அமைந்திருப்பதால், அத் தன்மைகளுக்கேற்ப அவற்றிற்கு உடலும் உள்ளமும் அமையவேண்டுவதாயின. இல்லெனின் தோற்றப்பெறும் உயிர்கள் பேணுதலும் காப்பும் இன்றி இளமையிலே

அழிந்துபோகும். அதன்பின் உலகில் உயிர்களின் உயிர்ப்பு குறைந்துபோய், விரைவில் உலகம் வெறும் பாலைநிலமாகப் போய்விடும்.

உயிர்கள் தோன்றுவதற்கும், அவற்றைப் பேணுவதற்கும் அன்பு போல் அறிவு அவ்வளவாகத் தேவைப்படுவதில்லை. எனினும் அறிவு அளவே இன்றி உயிர்த் தோற்றமே நிகழாதாகையால், எல்லா உயிர்களுக்கும் அன்பைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கேனும் அறிவு தேவைப்படுகின்றது. அந்த அளவு அறிவு பெண்பால் உயிர்களிடமே அமைந்து கிடக்கின்றது.

உயிர்கள் இளமைப் பருவம் கழிந்தபின், தாங்களாகவே தங்களைப் புரந்து காத்துக்கொள்ளும் அறிவு பெறுகின்றன. ஆகையால் அவற்றிற்கு மேலும் புரத்தல் துணை தேவைப்படுவதில்லை. எனவே கீழ்நிலை உயிர்களுக்கு-தாய்த்தன்மைக்கு மேலும் அறிவை ஊக்கப் பெறும் தந்தைத் தன்மை வேண்டாதாயிற்று. ஆனால் அறிவு சிறப்பாக வளர்ச்சியுற்ற மேனிலை உயிர்களாகிய மாந்த இனத்தில், உயிர்ப் பேணுதல் போலவே அறிவுப் பேணுதலும் இன்றியமையாத ஓர் உயிரூக்கமாக விரிவடைந்து விட்டதால், அதற்குத் தாய்த் தன்மை போலவே தந்தைத் தன்மையும் வேண்டுவதாயிற்று. தந்தைமையே ஆண்மைத் தன்மையாகும். அறிவூக்கம் மிக மிக-உயிர்களுக்கு ஆண்மைத் தன்மையே சிறப்புற விளங்கும். ஆண்மைத் தன்மைக்கு அஃதாவது அறிவுணர்வுக்கு அடங்கா நிலை இயற்கையாகும். அறிவுணர்வு அடங்குவதானால் அது வளர்ச்சியுறாது.

ஒரு நிலையில் அடங்கிவிடாது, மேலும் மேலும் அறிவு வளர்ச்சியுற வேண்டியிருப்பதால், அறிவுணர்வு எப்போதும் எம்பிக் கொண்டேயிருக்கின்றது. அன்புணர்வு அவ்வாறின்றி ஒருநிலையில் அடங்கி விடுவதால் அறிவு வளர்ச்சிக்கு அது சிறக்கவேண்டுவது அவ்வளவு இன்றியமையாததாக உயிர்களிடத்து அமையவில்லை. மேலும் அறிவு வளர்ச்சிக்கு அன்புணர்வு பெண்மையாகவும் அறிவுணர்வு ஆண்மையாகவும் மலர்ச்சியுற்றுத் தனித்தனியே வளரத்தொடங்குகின்றன.

அன்புணர்வுக்கு அடக்கம் இயல்புத் தன்மையாகவும், அறிவுணர்வுக்கு அடங்காத எழுச்சி இயல்புத் தன்மையாகவும்

இருப்பதால் அன்புணர்வை அகம் (உள்ளம்) என்றும், அறிவுணர்வைப் புறம் (வெளியே) என்றும் பண்டைத் தமிழர் பாகுபாடு செய்தனர்.

அறிவு அடங்காத எழுச்சி பெற்றதாயின் அதற்குத் துணிவும் வீரமும் காவல்களாயின. அன்பு அடங்கிய அமைவு பெற்றதாயின் அதைப் பணிவும், பண்பும் காத்து நின்றன. துணிவையும் வீரத்தையும் மறம் என்றனர் பண்டைத் தமிழ்ச் சான்றோர். பணிவையும் பண்பையும் அறம் என்றனர். இவ்வகையில் அறம் பெண்மைப் பண்பும் மறம் ஆண்மைப் பண்பு மாகும்.

இனி, அறம் பெண்மைப் பண்பாக இருப்பினும் அஃது ஆண்மையை அஃதாவது மறத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்றும், மறம் ஆண்மைப் பண்பாக இருப்பினும் அது பெண்மையை அஃதாவது அறத்தைப் புறக்கணிக்கக் கூடாதென்றும் இயற்கைத் தன்மைக்கேற்பச் செந்தமிழ் முனிவோர் வகுத்துரைத்தனர். இவ்விரண்டும் அறிவால் இணையாமற் போயினும் அன்பால் பிணைந்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். “அறத்திற்கே அன்பு சார்பு என்ப: அறியார், மறத்திற்கும் அஃதே துணை” என்பது திருவள்ளுவப்பயன். அவ்வாறு அவர்கள் கட்டுரைத்தமைக்கு வேறொரு கரணியமும் உண்டு.

அன்பு ஒன்றினோடொன்று இணையும் இயல்புணர்ச்சி உடையது. அறிவு ஒன்றினின்று ஒன்று பிரியும் இயல்புணர்ச்சி வாய்ந்தது. அன்பை இருந்து உணர வேண்டும். அறிவை, இயங்கி உணர வேண்டும். அன்பு வளர வளர இரண்டு உயிர்கள் ஒன்றோடொன்று இணைந்து கூடிக் குலவி மகிழும் தன்மையனவாக இருக்கும். அறிவு வளர வளர இரண்டு உயிர்களும் ஒன்றினோடு ஒன்று பிணங்கிப் பிரிந்து, அறிந்து, மகிழும் தன்மையனவாக இருக்கும். அன்பை உணர்தலும் அறிவை அறிதலும் இன்பமாகும். அன்பு அறிவை உணர்ந்தும் வியக்கும்; உணராமலும் வியக்கும். அதுபோலவே அறிவு அன்பை உணர்ந்தும் வியக்கும்; உணராமலும் வியக்கும்.

அன்புணர்வும் அறிவுணர்வும் தொடக்க நிலையில் ஒன்று பொருந்தியிருப்பினும் வளர்ச்சியுறும் பொழுதில் ஒன்றுக்கொன்று பொருந்துவதில்லை. இரண்டும் இரண்டு முனைகள். இரண்டும் இருவேறு திசைகள் நோக்கி வளர்வன.

பின், ஓரளவு நல்ல வளர்ச்சியுற்ற நிலையிலேயே அவை ஒன்றையொன்று விரும்பிப் பொருந்துகின்றன. ஒருவனுக்கு இருக்கும் இவ்விரு வேறு தன்மைகளையும் ஒருசேர நாம் உணர்ந்து மகிழ வேண்டுமானால் நமக்கும் அவை ஒருசேர வளர்ச்சிபெற்று இருத்தல் வேண்டும். அக்கால் அன்பை அறிவும், அறிவை அன்பும் ஈர்க்கும், வளர்ந்த நிலைகளில் இரண்டுமே ஒன்று தான். இவ்விரண்டு தன்மைகளின் தொடக்க, வளர்ச்சி, முடிவுகளை ஓர் உவமையால் விளக்கலாம்.

ஒரு வட்டப்பாதையில் ஒரேயிடத்தில் புறப்பட்ட இரண்டு குழந்தைகள் தொடக்கத்தில் இணைந்திருந்து, பின் பிரிந்து, இடமாகவும் வலமாகவும் சுற்றத் தொடங்குகையில் அவர்களுக்கு இடையிலுள்ள வெளி மேலும் அகன்று போவதும், மீண்டும் இணைந்து கூடுகையில் ஒன்றாவதும் போலவே, அன்புணர்வும் அறிவுணர்வும் இருவேறு நிலைகளில் வளர்ந்து சென்று ஒன்றாகத் தலைக்கூடுகின்றன. இவ்வளர்ச்சி வட்டத்தைத் தனிப்பட இயங்கும் ஒருவர் நிலையிலும் வேறுபட இயங்கும் இருவர் நிலையிலும் வைத்துப் பொருத்திப் பார்ப்போம்.

ஒரு வட்டப் பாதையில் தனிப்பட இயங்கும் ஒருவர் அன்பையும் அறிவையும் எதிர் எதிராகவே ஓடவிடுதல் இயலும். குழந்தைத் தன்மையிலேயே அவை இரண்டும் ஒன்றாகப் பொருந்தியிருக்க முடியும். அன்புடன் விளையாடும் குழந்தையை ஓர் ஒலியோ, மணியோசையோ நன்றாகப் பளிச்சென்று கண்களைக் கவருமாறு வண்ணம் பூசப் பெற்ற ஒரு பொம்மையோ அதன் கவனத்தை ஈர்க்குமாறு செய்யலாம். அக்கால் அக்குழந்தை அறிவு நிலையைப் பற்றுகின்றது என்று சொல்லலாம். அவ்வாறு அவற்றில் ஈடுபடும் குழந்தையை அதன் அன்னையோ, அதனிடம் மிக ஈடுபாடு கொள்ளும் பிறரோ அன்புடன் அழைத்துச் சிரித்துப் பேசிக் கைகளை நீட்டுவார்களானால், அதுவும் அவ் விளையாட்டுப் பொருள்களை விட்டு விட்டு அவ் வன்புக் கைகளில் ஓடோடி வந்து விழுந்து மகிழ்கின்றது. அக்கால் அதன் அறிவுணர்வு மாறி, அன்பு நிலையை அது பற்றுவதாகக் கொள்ளலாம்.

இவ்வாறு குழந்தைமைப் பருவத்தில் ஒருவர்க்கு இருக்கும் அன்புணர்வும் அறிவுணர்வும் ஒரே படித்தாய் இயங்கி, அது மேன்மேலும் வளர்ந்து வருகையில் அறிவுணர்வு,

அன்புணர்வினின்று சிறிது மாறுபட்டு வளருவதையும் தெளிவாக உணர முடியும்.

பத்தாண்டு அல்லது பதினைந்தாண்டு வளர்ந்த பையனையோ பிள்ளையையோ, தாயோ பிறரோ அழைக்கையில், அவர்களின் அறிவுணர்வின்பாற் பட்டவிளையாட்டுக் கவனத்தையோ, கல்வியில் செலுத்தும் கருத்தையோ, எளிதில் விட முடியாதவர்களாய் "இதோ வருகின்றேன்" என்று விடை பகருவதும், அல்லது "இன்னுங் கொஞ்ச நேரம் கழித்து வருகின்றேன்" என்பதும், அல்லது "வர மாட்டேன் போங்கள்" என்று மறுத்துரைப்பதும் இல்லையா? அக்கால் அவர்களின் அறிவுணர்ச்சி அன்புணர்ச்சியினின்றும் வேறுபட்டு அல்லது மாறுபட்டு இயங்குவதாக உணர்ந்து கொள்க!

இனி, மிக வளர்ந்து பெரியோனாகிய ஒருவன் அல்லது ஒருத்தி, அன்பு ஈடுபாட்டினின்று மிக வேறுபட்டு அறிவு ஈடுபாடு கொள்ளுவதையும், வேறு சிலர் அறிவுணர்ச்சியினின்று மாறுபட்டு அன்பு ஈடுபாடு கொள்ளுவதையும் பொதுவாகப் பார்க்கலாம். அக்கால் அவர்களிடம் அன்பும் அறிவும் நேர் எதிரிடையாக வளரும் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிய வேண்டும். அத்தகையவர்கள் தொடர்ந்து ஒரே நிலையில் ஈடுபடுவது கடினம். ஒன்றில் ஈடுபடுகையில் மற்றொன்றில் அவர்கள் கவனம் செலுத்துவதே இல்லை. அக்கால் அவர்களின் பெரும் பகுதியான கவனமும் ஏதாவது ஒன்றின் வழியாகவே செல்லுகின்றது. ஒருகால் அவர்களுக்கிருக்கும் அன்பு மெதுவாகவும், அறிவு விரைவாகவும் வட்டச் சூழற்சியில் ஈடுபடலாம். அதுவுமல்லாது, இரண்டும் ஒரே வேக அமைப்பில் அவ்வட்டச் சுழற்சியில் ஈடுபடலாம்.

ஆணைப் பெண் விரும்புவதும், பெண்ணை ஆண் விரும்புவதும், இணைந்து குடும்பம் செய்வதும், பல்வேறு வாழ்க்கை நிலைகளில் ஏதாவதொன்றில் ஈடுபடுவதும் போன்ற செயல்கள் அக் கால நிலைகளில் நிகழ்கின்றன. அன்பும் அறிவும் மாறி மாறியோ, முன் பின்னாகவோ, இணைந்தோ அவர்களை ஆட்கொள்ளும், அவர்களுக்கிருக்கும் மூலப்பொருள்களின் இணைப்பைப் பொறுத்தது, அவ்வாட்சி. அம் மூலப் பொருள்கள் பருப்பொருள்களாலும், நுண் பொருள்களாலும்

ஏற்பட்டவையாக இருக்கும். அவைபற்றி யெல்லாம் பிறகு தெரிந்து கொள்ளலாம். அத் தொகுதியமைப்புத் தனியாக விளங்கிக் கொள்ள வேண்டிய பூத நிலைகளாகும். ஓரளவு இங்கும் சொல்லப்படும்.

இயல்பூக்கச் சூழல்கள்

இவ்விடத்தில் இன்னொன்றையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அஃதாவது, ஒருவனுக்கோ ஒருத்திக்கோ இருக்கும் அன்போ அறிவோ அவற்றின் வேறுபடியான படிநிலைகளோ முழுக்க முழுக்க அவர்களாகவே உண்டாக்கி கொண்டன அல்ல. இதனை இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால்தான் நன்கு விளங்கும்.

ஒருவர்க்கு அன்பு மிகுந்தோ குறைந்தோ இருப்பதாக உணருவீர்களானால், அந்நிலை அவர்களாகவே விரும்பிச் செய்து கொண்ட நிலையன்று. அதேபோல் ஒருவர்க்கு அறிவுணர்வு குறைந்தோ மிகுந்தோ இருப்பதாக உணர்ந்தால், அதுவும் அவர்களாகவே விரும்பிச் செய்து கொண்ட நிலையன்று. அவ்வுணர்ச்சிகள் பெரும்பாலும் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்தவையாகும். அவ்வியற்கையமைப்பு என்பது அவர்களின் நுண்பொருள் உணர்வுச் சேர்க்கையும் பருப்பொருள் உணர்வுச் சேர்கையும் என்பதாக மட்டும் இக்கால் அறிந்து வைத்துக்கொள்ளுங்கள். அவற்றின் விரிவுகளெல்லாம் வேறுவகையான அடிப்படை விளக்கங்களைப் பெற்ற பின்னர்தான் விளங்கும். இப்பொழுதைக்கு அவ் வியற்கை அமைப்புகளைச் சூழ்நிலைகள், அஃதாவது இயல்பூக்ககச் சூழல்கள் என்று மட்டும் விளங்கிக் கொள்ளுங்கள். அப்படியென்றால், ஓருயிர் அல்லது மாந்தன் பிறந்து வளரும் சூழ்நிலை, அவன் உள்ளுணர்வுகள் அமைவதற்குக் கரணியமாக உள்ளது என்பதாகும். அவ்வுயிரோ, அவரோ தோன்றி வாழ்கின்ற இடத்தையும், காலத்தையும், பொருட் கூறுபாடுகளையும் பொறுத்தவை அவர்களின் அன்புணர்வும் அறிவுணர்வும். சூழப்பெற்ற இயற்கை நிலைகளால் ஊக்கப் பெறுகின்றவை, அவ் உணர்வுகளாகையால், அவர்களை உருவமைக்கும் அச்சூழல்களுக்கு இயல்பூக்கச் சூழல்கள் எனப்பயர் கொடுத்தோம். அவ்வுயிர்களின் உணர்வு நிலைகளை ஊக்கப்படுத்தி விளங்க வைக்கும் சூழ் நிலைகள் என்று அதற்குப் பொருள்.

எனவே ஒருவரின் மிகுந்த அன்பு முதிர்வுக்கும், அல்லது அறிவு முதிர்வுக்கும் அவர்கள் பெரும்பாலும் தோன்றி வளர்ந்த சூழல்களே கரணியங்களாகும். இவ் விடத்தில் பெரும்பாலும் என்று குறித்ததையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் சிறுபான்மை அவர்களின் தனித்தன்மைகளும் அவ்வுணர்வு நிலைகளில் கலந்துள்ளன என்பது அதன் உட்பொருள். இத் தனித்தன்மைதான் அவரின் நுண்பொருள் சேர்க்கையாகும். மற்றுச் சூழலால் அமையப்பெறும் - அஃதாவது இயல்பூக்கச் சூழல்களால் உருவாக்கப் பெறும் உணர்வு நிலைகளோ, பருப்பொருள் சேர்க்கையாகும். இவற்றைச் சில உவமைகளால் விளக்கினால் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.

இவ் வடிப்படைகளின்படி, மலைகளில் பிறந்து வாழ்கின்றவர்களுக்கு, வெற்று நிலப் பகுதிகளில், அல்லது பாலை நிலப்பகுதிகளில் உள்ளவர்களை விட அன்புணர்வு மிகுந்திருக்கும். அறிவுணர்வு மிக மிகக் குறைந்திருக்கும். ஏனெனில் அவர்கள் ஒருவரையொருவர் சார்ந்தே, அல்லது பலரும் கூடியே வாழ வேண்டியுள்ளது. தனித்த ஒருவரால் அம் மலைப்பகுதிகளில் வாழ்தல் கடினம். விலங்குகளுக்கு அஞ்சியோ, வாழ்நிலைகளுக்குத் துணை வேண்டியோ அவர்கள் இணைந்தே வாழ்வார்கள். அவ்வாறு இணைவதற்கு அவர்களிடத்தில் அன்புணர்வு மிகுந்திருக்க வேண்டுவது இன்றியமையாதது. அறிவுணர்வு அவர்களுக்குள் வேறுபாடுகளை உண்டாக்கக் கூடுமாகலின், அது குறைவாகவே இருக்க வேண்டி உள்ளது. மேலும் அவர்களுக்கு அறிவுணர்வு ஏதோ சூழல்களில் கூடுமானால் அவர்கள் மலைகளினின்றும் கீழ் இறங்கி அதனை அடுத்த பகுதிகளுக்குப் படிப் படியாக வந்து விடுவார்கள். அவர்கள் வாழ்கின்ற சூழல்களே அவர்கள் உள்ளுணர்வுகளின் விளங்கல் தன்மைக்குக் கரணியமாக இருப்பதால் தான், அவற்றை இயல்பூக்கச் சூழல்கள் என்றோம்.

நிலவியல் அமைப்புப்படி மலையும், மலையையடுத்துக் காடும். காட்டையடுத்துச் சமவெளியும், அதனையடுத்துக் கடலும் உள்ளதை நாம் அறிவோம். எனவே மலைகளில் வாழ்ந்திருந்த மக்கள் அறிவுணர்வு பெறப் பெறக் கீழிறங்கி வருவார்களானால் அடுத்து அவர்கள் காட்டுப் பகுதிகளிலேயே வாழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு காட்டுப் பகுதிகளில் வாழ்க்கையைத் தொடங்கும் பொழுது அவர்களுக்கு மலைப்பகுதிகளில்

வாழ்ந்திருந்த நிலைகளைவிட அறிவுணர்வு மிகுந்துவரத் தொடங்கியது. அறிவு தொடங்கியவுடன் பொருள்களை வேறுபட்டுக் காணும் நிலையினை மாந்தன் பெறுவான்.

**தன்பொருள் உணர்ச்சி**

ஒரு குழந்தைக்கு அறிவு வளரா நிலையில் நெருப்பும் ஒன்றுதான், ஒரு கனியும் ஒன்றுதான். ஒரு கல்லைக்கூட உண்பொருளென்று எடுத்து வாயில் வைப்பதையும், எரிந்து கொண்டிருக்கும் சுடரைக் கூட ஒரு குழந்தை பிடிக்கப் போவதையும் நாம் கண்டிருக்கின்றோம். எனவே அறிவற்ற நிலையில் பொருள்களை வேறுபட்டு உணராத குழந்தை, அறிவு வளர வளர, பொருள்களை வேறுபட்டு அறியத் தொடங்குகின்றது. என் பொருள், உன் பொருள் என்ற வேறுபாட்டு உணர்ச்சியையும் அது பெறுகின்றது. ஒரு குழந்தையின் கைகளில் உள்ள ஒரு பொருளை நாம் வாங்கும்பொழுது அஃது அழத்தொடங்குகின்றது. அக்கால் அது **தன்பொருள் உணர்ச்சி** பெற்றுவிட்டதை அறியலாம்.

இனி, அக் குழந்தை சிறிதே வளர்ந்தவுடன், அது தன்னைச் சுற்றியுள்ள பொருள்களின் வேறுபாடுகளைப் படிப்படியாக உணர்ந்து கொள்கின்றது. நெருப்பென்றும், பழமென்றும், கல்லென்றும் அறிந்து கொள்வதுடன், நெருப்பைத் தீண்டக் கூடாதென்றும், தீண்டினால் சுடுமென்றும், பழத்தைத் தின்ன வேண்டுமென்றும், கல்லைக் கடிக்கக் கூடாதென்றும் பொருள்களை வேறுபட்டு அறிவதுடன் அவற்றின் பயன்களையும் வேறுபட்டு உணர்கின்றது.

**உரிமையுணர்வு**

அவ்வறிவு மேலும் வளர வளர, அப்பொருள்களில் அது உடமை கொண்டாடுகின்றது. இந்நிலை அறிவின் அடுத்த படிநிலை. இங்கு அன்புணர்வினின்று அறிவுணர்வு மீறி வளர்கின்ற நிலையை எய்துகின்றது. எனவே, மாந்த நிலையில் தொடக்கத்தே விளங்கிய அன்புணர்வு வளர்ந்து அறிவுணர்வு தோன்றியவுடன், வேறுபாட்டு உணர்வும், அதனையடுத்து **உரிமையுணர்வும்** தோன்றுகின்றன. தன்பொருள் உணர்ச்சிதான் **உரிமையுணர்வை** வளர்க்கும் தன்மையது.

குழந்தை ஒரு பொருளைத் தன்பொருள் என்று பிரித்துணர்ந்தவுடன், அதன்மேல் உரிமையைச் செலுத்துகின்றது. அக்கால் அதன் கையிலுள்ள பொருளை நமக்குத் தர மறுக்கின்றது. அப்பொழுது அதற்கு உரிமையுணர்வு மிகுந்து நிற்பதைப் பார்க்கலாம்.

அதன்பின்னும் நாம் அந்தப் பொருளை அதன் கைகளினின்று பறிக்க முயற்சி செய்வோமானால், அக்குழந்தை அப்பொருளைத் தன் மடியிலேயோ, முதுகுப் புறத்திலோ மறைத்துவைத்துக் கொண்டு, அப்பொருள் தன்னிடம் இல்லை என்று நம் முயற்சியை விட்டுவிடும்படி தெரிவிக்கின்றது. அக்கால் அதற்குக் **காத்தல்** உணர்ச்சி தோன்றுகின்றது என அறிந்து கொள்க.

காத்தல் அறிவு

அக் காத்தல் உணர்ச்சி அக்குழந்தைக்குத் தோன்றும் பொழுது, அது **பொருள் வேறுபாட்டறிவையும்**, **பொருளின் பயனறிவையும்**, அது தனக்கு வேண்டும் எனும் **தன்தேவையறிவையும்**, தான் அப்பொருளை வைத்திருப்பதால் அது தனக்கே உரியதென்னும் **தன்பொருள் உணர்வறிவையும்**, அதைப் பிறர்பறித்துக் கொள்ளவும் முற்படுவார்களாகையால் அதைப் பிறரிடமிருந்து காத்துக்கொள்ள வேண்டுமென்ற **காத்தலறிவையும்** படிப்படியாகப் பெற்றுவிட்டது என்று நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இவ்விடத்து, இவ் வனைத்துப் படிநிலை அறிவுகளுக்கும், அக் குழந்தை அப் பொருளின்மேல் கொண்ட **அன்புணர்வே கரணியம்** என்பதை மறந்து விடுதல் கூடாது. எனவே, மாந்தன் ஒருபொருள்மேல் கொண்ட அன்புணர்வே அவனின் அடுத்து வளரும் அறிவுணர்வுக்கு அடிப்படையாக அமைகின்றது என்பதைத் தெற்றெனத் தெரிந்து கொள்க.

இனி, அவ்வறிவுணர்வு வளர, வளர, தொடக்கத்து அப்பொருளின்மேல் இருந்த அன்புணர்வும் அவ்வறிவுநிலைப் படிநிலைகளுக்கு இணையாக வளரத் தொடங்குகின்றது எனவும் உய்த்துணர்க. எனவே, அறிவு மிக மிக - அன்பும் மிகுகின்றது என்பதையும், அன்பு மிகுதலே அறிவு அடுத்தடுத்து மிகுந்து போதலுக்கு அடிப்படையாம் என்பதையும் உறுதி செய்து கொள்க.

## இணையுணர்வுப் படிநிலை

இனி, காத்தல் படிநிலைவரை இணைந்து வளர்ந்த அறிவும் அன்பும், அதற்கடுத்து வரும் படிநிலைகளில்தாம் மாந்தனுக்கு மாந்தன் வேறுபட வளர்கின்றன. எனவே இக் காத்தல் படிநிலைவரை மாந்த உணர்வு வளர்ச்சியை ஓர் எல்லைப் படுத்தி அதற்கு **இணையுணர்வுப் படிநிலை** என்னும் பெயரைக் கொடுத்துக் கொள்வோம். இவ் **விணையுணர்வுப் படிநிலையின்** எல்லைவரை மாந்தவாழ்வு அமைந்த வகையினை மீண்டும் நுணுகிப் பார்ப்போம்.

## குறிஞ்சியிலிருந்து முல்லைக்கு..

கட்டுமீறிய அன்புணர்வு கொண்டு வாழ்ந்த மலைப்புறத்து மாந்தனின் வாழ்க்கை, அவன் காட்டுப் புறத்தே வந்து வாழ்கையில் ஒரு கட்டுப்பாடு எய்தியிருத்தல் வேண்டும். அஃதாவது **பொருள் வேறுபாட்டு அறிவு** அவனுக்கு விளங்கி, **பொருட் பயன்** விளங்கி, தன் **தேவையறிவு** விளங்கும் வரை மலைகளில் வாழ்ந்து கொண்டிருந்த மாந்தன், அம் மலைகளினின்று இறங்கி வந்து காட்டுப் புறத்தே தன் வாழ்வியலைத் தொடங்குகின்ற நிலையில் **தன் பொருள் உரிமையுணர்வு** அவனுள் தலை தூக்கியது. அக்கால் பொருள்களை உரிமைப் படுத்தும் வேற்றுமை யறிவின் முதனிலையை அவன் எய்துகின்றான். இந்நிலைக்கும் அன்புணர்வே அவனுக்கு அடிப்படியாக இருந்தது.

கட்டுமீறிய அன்பு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவன் ஒரு கட்டுப் பாட்டிற்குள் உரிமை வாழ்க்கை வாழத் தொடங்குகின்றான். அக்கால் அவன் முதன்முதல் விளங்கிக் கொண்ட அன்பையே உரிமைப் படுத்த முனைகின்றான். இவ்விளக்கங்களை ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் வைத்துப் பாகுபாடு செய்து பார்ப்போமாயின் இவை நமக்கு நன்கு விளங்கும். ஏனெனில், ஆண் அறிவுக்கும் பெண் அன்புக்கும் உரியவர்களென்று முன்னர் கண்டோம். இனிப்பு, காரம் என்னும் நுண்சுவை உணர்வுகளை உணர்த்தும் பொழுது, அவற்றை எத்தனை முறை திருப்பித்திருப்பிச் சொன்னாலும் நன்கு விளங்கிக் கொள்ளாத ஒருவன், அவை தோய்ந்த பொருள்களைச் சொல்லி விளக்கினால், எளிதில் விளங்கிக் கொள்வது போல், அன்பையும், அறிவையும் விளக்க, அவ்வுணர்வு நிறைந்து

விளங்கும் பெண், ஆண் இயக்கங்களை வைத்தே விளங்கிக் கொள்ளுதல் சிறந்ததாம் என்க.

மலைப்புறத்து, அறிவு வடிவாகிய ஆணும், அன்பு வடிவாகிய பெண்ணும் அளவிறந்து, கட்டுப்பாடின்றி அன்பென்னும் காதல் வாழ்க்கையில் ஈடுபட்டுக் கிடந்தனர். பின்னர் அவர்கள் அறிவுணர்வுற்றுக் கீழிறங்கிக் காட்டகத்தே வந்து வாழ முற்படும் பொழுது, தன்பொருள் உரிமையுணர்வு அவர்கள் பால் தலைதூக்கியது. அந்நிலையில்தான் அவர்கள் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்னும் கட்டுப்பாடு சான்ற உரிமை வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கலாயினர். இக்கால் அர்களிடத்து அன்புணர்வுடன், அறிவுணர்வும் ஒர சேர வளர்ந்திருந்தது. அவர்களுக்கு ஏற்கனவே விளங்கியிருந்த பொருள் வேறுபாட்டு அறிவும், பொருட் பயனறிவும், தன் தேவையறியும் இன்னும் சிறந்து விளங்கித் தோன்றத் தொடங்கின.

இக்கால் இன்னொன்றையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அன்போ, அறிவோ பல படிநிலைகளில், முறையே தம்தம் கால்களை ஊன்றி வளரத் தொடங்குங்கால், அவை முன்னர் கடந்து வந்த படிநிலைகள், பிந்திய படிநிலைகளுக்கேற்ப மேன்மேலும் விளங்கித் தோன்றும்.

எடுத்துக்காட்டாக, அறிவு - தன் தேவையறிவு நிலையை எய்தும் பொழுது, அதற்கு முந்திய பொருட்பயனறிவு நிலை ஒரு பங்கும், அதற்கு முந்திய பொருள் வேறுபாட்டு அறிவுநிலை இருபங்கும், வளர்ந்திருக்கும்.

இனி, அறிவு - தன்பொருளுரிமை உணர்வுநிலையை அடையும் பொழுது, தன்தேவையறிவுநிலை ஒருபங்கும், பொருட்பயனறிவுநிலை இருபங்கும், பொருள் வேறுபாட்டு அறிவுநிலை மூன்று பங்கும் வளர்ந்திருக்கும்.

இந்நிலைகள் முழுப்பங்குகளேயன்றி, அவரவர் தனிநிலைக்கும், முயற்சிக்கும், இயல்பூக்கச் சூழலுக்கும் தக்கபடி, அரைப்பங்கும், கால்பங்கும், அரைக்கால் பங்குமாகவும் வளரும் தன்மையுடையன. மொத்தத்தில் சொன்னால் அறிவுநிலை பல்லாயிரக் கணக்கான வேறுபாட்டு நிலைகளை உடையது. ஒரு

மலையத்துணை அறிவுக்கு, அம் மலையிலுள்ள மண்ணத்தனை வேறுபாடுகள் இருக்கலாம். எனவே, அவற்றின் பொதுத் தன்மைகளையே நாம் ஒருவாறு விளங்கிக் கொள்ளுதல் இயலுமே அன்றி, அவற்றின் சிறப்புத் தன்மைகளை நாம் மேலோட்டமாக விளங்கிக் கொள்ளுதல் இயலாதாம் என்க. இனி, ஒவ்வொரு படிநிலையும் நுணித்து நோக்கநோக்க, அதனதன் உண்மைகளும் நமக்கு விளங்கவே செய்யும். ஆனால் மற்ற நிலைகள் முன்னறிந்த பொது நிலையறிவுடனேயே நின்றுகொள்ளும் என்க.

ஒரு வண்டியிலேறிச் செலவு மேற்கொள்ளுவான், அவ்வண்டியின் பெரும்பாதை வழியாகவே சென்று கொண்டிருந்தால், இடையிலுள்ள ஊர்களை மேலோட்டமாகவே, அவ்வவற்றின் பெயர்கள், விரிவுகள், அமைப்புகள் முதலிய பொதுநிலைகளை மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும். இனி, அவன் ஓர் ஊரின் முழுச்சிறப்பையும் விளங்கிக் கொள்ள விரும்புவானாகில், அவன் அப்பெரும் பாதையினின்றும், வண்டியினின்றும் இடை விலகி, அவ்வூரின் கண் ஊடறுத்துச் செல்லும் வீதிகளிலும், குறுக்கும் நெடுக்குமாயுள்ள தெருக்களிலும், இடுக்கும் ஒடுக்கமுமாயுள்ள சந்துகளிலும் நடந்து, நின்று, கேட்டு, உசாவி அறிந்து கொள்ளுதல் வேண்டுமன்றோ.

இனி, ஊரின் அகப்புற அமைப்புகளைப்பற்றி மட்டுமன்றி, அவ்வூர் மக்களமைப்பைப் பற்றியும் அவன் அறிந்து கொள்ள வேண்டுமானால், அவன் அவ்வூரிலேயே சிறிது காலம் தங்கியிருந்து அவ்வூர் மக்களொடு படிப்படியாகத் தொடர்பு கொண்டு, அவர்கள் வாழ்க்கை நிலைகள், முன்னேற்ற விருப்பு முயற்சிகள் முதலியவற்றை ஆய்ந்தறிதல் வேண்டுமன்றோ? இனி, அவன் அம் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும், அவர்தம் முன்னோர்களைப் பற்றியும் அறிய வேண்டுமாயின், அவர்கள் பேசுகின்ற மொழியையும், அதன் இலக்கிய இலக்கணங்களையும், அவற்றின் வரலாறுகளையும், அவை தொடர்பான பிறஇன மக்கள் இயல்புகளையும் அறிந்து கொள்ளல் வேண்டுமன்றோ? இனி, இத்துணையளவு முயன்று அவன் அறிந்து கொண்டாலும் அவன் தன்னுடைய உணர்வு

நிலைக்கும் அறிவு நிலைக்கும் எற்றவாறுதானே அறிந்து கொள்ள முடியும். இவ்வுண்மையை ஒருவாறு உணர்ந்து கொள்வீர்களானால் அறிவுநிலைக்கு ஒவ்வொரு துறையிலும் எத்தனைப் படிநிலைகள் உள்ளன என்பதையும், அவை எவ்வாறு மேன்மேலும் விரிந்து கொண்டே செல்கின்றன என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

மக்கள் மலைவாழ்நராய் இருந்தபொழுது குறைந்திருந்த அறிவு அவர்கள் படிப்படியாய்க் கீழிறங்கி வாழத் தொடங்குகையில் மேலும் மேலும் விளக்கமுற்று வளரத் தொடங்கியது. எனவே மலை வாழ்க்கை வெறும் அன்பு வாழ்க்கையாக மட்டும் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் அறிவுக் கிளர்ச்சியுற்றுக் கீழிறங்கி வந்து வாழ்க்கையில், காத்தலறிவு தோன்றி அவர்கள் வாழ்க்கை உரிமை வாழ்க்கையாக மலர்ந்தது. மலைப்புறங்களில் தனித்தனியாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள், காட்டுப் புறங்களில் மணந்துகொண்டு குடும்பம் குடும்பமாக வாழத் தொடங்கினர். அன்பால் பிணைந்த வாழ்க்கையினராக இருந்தவர்கள், அறிவு ஓரளவு கிளரத் தொடங்கியவுடன், பிரிவுற்றுக் குழுகுழுவாக வாழத்தொடங்குகின்றனர்.

ஈட்டலறிவு

பிரிவுற்ற குழு, அஃதாவது உரிமை வாழ்க்கையில் அமைத்துக் கொண்ட குடும்பம் அதன்பின் தனித்தனியாக முன்னேறத் தொடங்கியிருத்தல் வேண்டும். அதுவரை ஒருவனுக்காகத் தேடியுண்டவன், இக்கால் ஒரு குடும்பத்திற்காக - தனக்குற்ற உரிமையர்- உறவுக்காரர்களுக்காகத் தேடி உண்பிக்க வேண்டி வந்தான். உரிமையுணர்வு அவனுக்கு அடுத்த அறிவை ஊட்டுகின்றது. மலைப்புறத்து வாழ்ந்த அன்பினும் காட்டகத்தே அவன் அன்புணர்வு வளர்ந்த பின் தான் உரிமையுணர்வே மலர்ந்தது. அந்த உரிமையென்னும் வளர்ந்த அன்பு, அடுத்தாகிய அறிவு நிலையை ஊக்குகின்றது. அக்கால் அவன் ஈட்டலறிவைப் பெறுகின்றான். அதுவரை இருப்பதைக் காத்து வந்தான்; இப்பொழுதோ இழந்து போனதை ஈட்டத் தொடங்குகிறான்.

### கருவியறிவும் மருதமும்

ஈட்டலறிவு அவனுக்குத் தோன்றியவுடன், அதற்கடுத்தாகிய கருவியறிவு அவனுள் விளங்குகின்றது. எனவே, நிலத்தை விளைவிக்க முற்படுகின்றான். காட்டை யழிக்கின்றான்; கழனியைச் சமைக்கின்றான். குறிஞ்சியில் தோன்றி முல்லையில் வாழ்ந்தவன் மருதத்தில் வாழ முற்பட்ட காலம் அது. குறிஞ்சியும் முல்லையும் இயற்கை நிலங்கள். மருதம் உருவாக்கப்பெற்ற நிலம்.

மாந்தனுக்குக் கருவியறிவு தோன்றி அவன் வினைபடத் தொடங்கிய காலத்துத் தோன்றியது மருதம். அவன் குறிஞ்சியில் கற்றிருந்த வேட்டுவத் தொழிலுக்குப் பிறகு அவன் கற்றுக்கொண்ட முதல் தொழில் உழவுத் தொழில்தான். அக்கால் அறிவு நிலையில் ஈட்டலறிவு தாண்டிய கருவியறிவையும், கருவியறிவு தாண்டிய கரணிய அறிவையும்; அன்பு நிலையில் உணர்வு நிலை வளர்ந்து உரிமை நிலையினையும் அவன் பற்றுகின்றான்.

### கரணிய அறிவு

குறிஞ்சி (மலை) நிலத்தின் கட்டற்ற வாழ்க்கை, முல்லையில் உரிமையொடு கட்டுப்பாடெய்தி, மருதத்தில் நன்கு மலர்ச்சியுற்றிருந்தது. இனி, மருத நிலத்தின் உழவு வாழ்க்கைதான் அவனுக்குத் தொழில் வாழ்க்கைக்கு அடிப்படையாக விருந்தது. தொழிலில்தான் கரணியவறிவு அவனுக்கு விளங்குகின்றது. விதைகளை நிலத்தில் ஊன்றினால் விளைந்து வருகின்ற தன்மை அவனுக்கு அக்கரணிய ஒளியைக் கொடுத்தது. இந்நிலை அவனின் பூதவியல் வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருந்தது.

உழவு வாழ்க்கையில் மலர்ந்த உரிமை வாழ்க்கை, அவனுக்குக் குழுவாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு படிநிலையறிவை உண்டாக்கியதில்லையா? அந்த அறிவுதான் அவனுக்கு அரசியல் வாழ்க்கைக்கும் அடிகோலியது எனலாம். குடும்பத்தலைமையை ஏற்படுத்திக் கொண்ட அவன் குழுத்தலைமையையும், ஊர்த்தலைமையும், பின் நாட்டுத்

தலைமையையும் உருவாக்கிக் கொள்ள அவனுக்கு அது வழிவகுத்துக் கொடுத்தது. அதன் பின்னர்தான் அவன் பரந்துபட்டு வாழத் தொடங்குகின்றான்.

தன் குடும்பத்தை விட்டுத் தொழில் கரணியமாகப் பிரிந்து போகின்ற நிலைகள் அக்கால் குமுகாய அமைப்பில் தோன்றத் தொடங்கின. மாந்தனின் கரணிய அறிவு வளர்ச்சியுறத் தொடங்கியதும். அவன்பால் பல வேற்றுமைகள் வளர முற்பட்டன. இந்நிலை அவன் உள்ளுணர்வு நிலையாகிய அன்புநிலையிலும் வேறு பாட்டைக் கற்பித்தது. தனக்கென அமைந்த குடும்பநிலையிலும் அவன் மனவேறுபாடு புகுந்தது. தன்பால் அன்பு செலுத்தும் மனைவியைத் துறந்து அவன் உழவு வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் ஈடுபட்டதால் தனக்கு உரிமையல்லாத வேறு பெண்டிர்பாலும் அவன் தொடர்பு கொள்ளும் பரத்தமை நிலை அக்கால் தொடங்கியதுதான். எனவே குடும்ப இணைப்புகளில் பிரிவும் பிளவும் தோன்றி, அவன் அன்புணர்வுடனும் அறிவுணர்வுடனும் மோதத் தொடங்கின. கணவனுக்கும் மனைவிக்கும் ஊடல் நிகழ்ந்தது.

ஊர் பெரியதாகி அரசுகள் அமையத் தொடங்கியதும் போர்கள் நிகழத் தொடங்கின. அதன் கரணியமாகவும் ஆண்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்து வாழத் தொடங்கினர்.

### பிரிவுணர்வுப் படிநிலை

ஈட்டலறிவும் அது தொடங்கிய கருவியறிவும், அதன் பின்னர் வளர்ந்த கரணியவறிவும், அவனைப் பிரிவுணர்வுப் படிநிலைக்குக் கொண்டு செலுத்தின. அக்கால் அவன் அன்பு நிலையிலும் அறிவு நிலையிலும் விரிவுற்றுப் பிரிந்து தனித்தனியே இயங்கி வாழ்கின்ற ஓர் இயற்கைப் படிநிலை தோன்றியது.

கரணியவறிவால் உந்தப்பெற்று, மாந்தன் தொழிலியல் வாழ்வை மேற்கொண்டபின், குடும்பங்கள் சிதறுகின்றன, கணவன் மனைவியரிடை வேறுபாடுகள் தோன்றுகின்றன. மக்களிடையே பல்வேறு குழுக்கள் முளையிடுகின்றன. அன்பையும் அறிவையும் தொழில் சார்ந்த பொருளியல் உணர்ச்சி வேறு பிரிக்கின்றது. அன்புக்கும் அறிவுக்கும் பொருள் மதிப்பு சார்கின்றது. அன்பு அறிவை அவாவுவதும், அறிவு அன்பை ஆராய்வதும் நேர்கின்றன. அன்பில் அறிவும், அறிவில் அன்பும்

ஒடுங்கி அன்பியக்கமும் அறிவியக்கமும் தனித்தனியான உந்துணர்வுடன் இயங்கத் தொடங்குகின்றன. இந்நிலை உயிரியக்க வட்டப் பாதையில் எதிரெதிரான சுற்றின் மேனிலை விட்டமாகும். எனவே அன்பும் அறிவும் நேர் எதிராகச் செயல்படத் தொடங்குகின்றன.

நெய்தல் வாழ்க்கை

அறிவு பொருளியலைப் பற்றிப் புறம் போகின்றது. அன்பு அறிவியலைப்பற்றி அகத்தே ஒடுங்குகின்றது. அன்பைப் பிரிந்து இயங்கும் நிலையில் மாந்தன் பாலை வாழ்வை மேற்கொள்கின்றான். அன்புக்குச் சிறந்ததாகிய இல்லறத்தைப் பிரிந்து மிகத்தொலைவான இடங்களுக்கும் செல்லத் துணிகின்றான். பொருளியல் தேவை ஓர் அறிவுத் தேவை. அந்த அறிவுத் தேவைதான் அவனை அன்பைத் துறந்து பொருளியலை நாடித் துரத்துகின்றது. அவன் நிலத்துக்கு எல்லையாகிய கடலையே நெருங்கும் அளவிற்குப் பொருளியலால் துரத்தப்படுகின்றான். கடலையும் கடக்கின்றான். அவனுக்கு நெய்தல் வாழ்க்கைத் தொடங்குகின்றது.

அகம் - புறம்

இத்தகைய நுண்ணிய வாழ்வியல் கூறுபாடுகளை யெல்லாம் இயற்கை வாழ்வினராகிய தமிழ் முன்னோர்கள் கூர்ந்து நோக்கித்தான், வாழ்வை அகம் புறம் என்றும், அவற்றுள் அகத்தை அறம், இன்பம் என்றும், புறத்தை மறம், பொருள் என்றும் பாகுபாடு செய்ததோடன்றி, அவர்களின் வாழ்வியல் துய்ப்புணர்வையும் நிலவியல் சார்ந்த மனவியல் அடிப்படையில், குறிஞ்சி என்றும், முல்லை என்றும், மருதம் என்றும், பாலை என்றும், நெய்தல் என்றும் வகுபாடு செய்து கொண்டனர்.

இனி, அன்பும் அறிவும் வாழ்வியல் சுழற்சியில் ஒன்றைவிட்டு ஒன்று பிரிவது போலத் தோன்றினாலும், அன்பு தனித்து இயங்குங்கால் அதுவே அறிவையும் தோற்றிக் கொள்ளவும், அறிவு தனித்து இயங்குங்கால் அதுவே அன்பையும் தோற்றிக் கொள்ளவும் செய்யும் என்று அறிந்து கொள்க.

ஒரு வட்டத்தினின்று பிரிந்த பல்வேறு துணுக்குகளும் சிறுசிறு வட்டங்களாகவே இயங்குவது போல், அன்பும் அறிவும்

பிரிந்தாலும், ஒவ்வொரு பிரிவின் ஒவ்வொரு நிலையிலும் அன்பும் அறிவுமாகவே உயிர்ச்சுழற்சி இயக்கங் கொள்கின்றது. எனவே அன்பினின்று அறிவைப் பிரிப்பதோ அறிவினின்று அன்பைப் பிரிப்பதோ கூடுவதன்று.

அன்பு தணிவது; குளிர்வுடையது; அடக்கமானது; இணக்கம் கொள்வது; உயிர்மலர்ச்சிக்கு அடிப்படையானது. அறிவு தணல்வது; காய்வது; முடுக்கமானது; பிணக்கம் கொள்வது; உயிர் வளர்ச்சிக்கு அடிப்படையானது. அன்பு அகமுனை நோக்கிப் பாயும்; அறிவு புறமுனை நோக்கித் தாவும். இவ்விரண்டு தன்மைகளும் பெண், ஆண் என்னும் இரண்டு வடிவங்களாகத் தோன்றியிருந்தாலும், பெண்மையுள் ஆண்மையும், ஆண்மையுள் பெண்மையும் இருப்பது போலவே அன்புள் அறிவும், அறிவுள் அன்பும் ஒடுங்கியுள்ளன என்க.

ஒரு தனிப்பட்ட பெண்ணிடமோ ஆணிடமோ கூட அன்பும் உண்டு, அறிவும் உண்டு. அன்பு மழுக்கமான அல்லது அறவே இல்லாத எந்தச் சிற்றுயிரும் உலகத்தில் இல்லை. அதே போல் அறிவு மழுக்கமான அல்லது அறவே இல்லாத எந்தச் சிற்றுயிரும் உலகத்தில் இல்லை. ஒருவருக்கு அன்பில்லை என்பதோ அறிவில்லை என்பதோ அறியாமையின் பாற்பட்டதாகும்.

சமயத்துள்ளும், இறைவனை அன்பாலும் அடையலாம், அறிவாலும் அடையலாம் என்பர். அவர்கள் அன்பு நிலையைப் பத்தி நிலை என்றும், அறிவு நிலையை ஞான நிலை அஃதாவது மெய்யறிவு நிலை என்றும் பாகுபாடு செய்வர். மெய்யறிவுக் கூறுபாட்டில் அறிவைவிட அன்பே இறைப்பொருளை அடையும் எளியவழி என்று சமயக்குரவர்கள் விதந்துரைப்பர். அன்பு உணர்வதற்கும் பற்றுவதற்கும் எளிது என்பதாலும், அறிவு உணர்வதற்கும் பற்றுவதற்கும் அரிது என்பதாலுமே அவ்வாறு அவர்கள் சொல்வர். இஃது ஓரளவு உண்மையே எனினும், மாந்த உயிரூக்கங்கள் வேறுபடுவன என்பதால் இவ்வரையறை பொருந்துவதன்று.

நுண்பொருளுணர்வுச் சேர்க்கையாலும், பருப் பொருளுணர்வுச் சேர்க்கையாலும்; இயல்பூக்கச் சூழலாலுமே ஒருவர்க்கு அன்போ அறிவோ, அல்லது இரண்டுமோ சிறந்து

விளங்கும். ஒருவர்க்கு அன்பு மிகுந்து அறிவு குறைந்திருக்கலாம்; பிறறொருவர்க்கு அறிவு மிகுந்து அன்பு குறைந்திருக்கலாம். சிலருக்கு இரண்டு தன்மைகளும் குறைந்திருக்கலாம்; அல்லது மிகுந்திருக்கலாம். இவற்றுள் எதுவும் தவறு இல்லை. இது தான் சரி; இது தப்பு என்று வரையறுக்கும் இயல்புடையவர்க்கு மாறுபட்ட இணையுணர்வு இருக்கும். அஃதாவது அன்புமிகுந்த ஒருவராக - ஒருவரைக் கண்டால் காணுகின்றவர்க்கு அறிவுணர்ச்சி மிகுந்திருக்கும். அறிவு மிகுந்த ஒருவராக - ஒருவரைக் கண்டால் - காணுகின்றவர்க்கு அன்புணர்ச்சி மிகுந்திருக்கும். இனி, அன்பு குறைந்த ஒருவராக ஒருவரைக் கண்டால் - காணுகின்றவர்க்கு அறிவுணர்ச்சி குறைந்திருக்கும். அறிவு குறைந்த ஒருவராக ஒருவரைக் கண்டால் காணுகின்றவர்க்கு அன்புணர்ச்சி குறைந்திருக்கும்.

### இணைவுணர்வு நுண்மங்கள்

பெரும்பாலும் மெய்யறிவு நிலையில் ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்கின்ற தன்மைக்கு நான்கு இணை உணர்வுகள் அடிப்படையாகவுள்ளன. காண்கின்றவர்க்கு அன்பு, அறிவு எனும் இருநுண்ணுணர்வுகள். இந்த நான்கும் அளவு நிலைகளான் எப்பொழுதும் சமமாக இரா. ஒருவரின் நுண்ணுணர்வுகள் மற்றவரின் எதிர்நிலை நுண்ணுணர்வுகளையே அவாவும் தன்மையன. அஃதாவது ஒருவரின் அன்பு இன்னொருவரின் அறிவையே அவாவும்.

இனி, காண்பவர் காணப்படுபவர் இருவரும் பால் வேறுபட்டிருப்பார்களாயின் அக்கால் எட்டு இணைவுணர்வு நுண்மங்கள் அடிப்படையாகவுள்ளன என அறிதல் வேண்டும்.

| காண்பவர் | | காணப்படுவர் |
|---|---|---|
| ஆண் | - | ஆண் |
| பெண் | - | பெண் |

1) குறைந்த அறிவு - இணைய விரும்புவது - குறைந்த அறிவு.

2) நிறைந்த அறிவு - இணைய விரும்புவது - நிறைந்த அறிவு.

3) குறைந்த அன்பு - இணைய விரும்புவது - குறைந்த அன்பு.

*4) நிறைந்த அன்பு - இணைய விரும்புவது - நிறைந்த அன்பு.*

| காண்பவர் | | காணப்படுவர் |
|---|---|---|
| ஆண் | - | பெண் |
| பெண் | - | ஆண் |

*5) குறைந்த அறிவு - இணைய விரும்புவது - குறைந்த அன்பு (அல்லது) நிறைந்த அறிவு.*

*6) நிறைந்த அறிவு - இணைய விரும்புவது - நிறைந்த அன்பு (அல்லது) குறைந்த அறிவு.*

*7) குறைந்த அன்பு - இணைய விரும்புவது - குறைந்த அறிவு (அல்லது) நிறைந்த அன்பு.*

*8) நிறைந்த அன்பு - இணைய விரும்புவது - குறைந்த அன்பு (அல்லது) நிறைந்த அன்பு.*

-இவ்வெதிர் விரும்பு நிலைகள் சில சூழ்நிலைத் தாக்குதல்களால் ஒரோவொருகால் திரிந்து மாறுபடுவதும் உண்டு.

எனவே, இதுகாறுங் கூறிய அன்பு, அறிவு ஆகிய இருவகை நுண்ம நிலை உணர்வுகளின் தன்மைகளை, இறுதியாகக் கீழ்வரும் ஒப்புமை நிலைகளால் தெற்றென விளங்கிக் கொள்ளலாம்.

| அறிவு | அன்பு |
|---|---|
| *1. ஆண்மை உணர்வினது* | *1. பெண்மை உணர்வினது* |
| *2. கூர்த்துப் பாயும் தன்மையது* | *2. பரந்து பாயும் தன்மையது.* |
| *3. நெருப்புப் போன்றது; சூடானது* | *3. தண்ணீர் போன்றது; குளிர்ச்சியானது.* |
| *4. மனவுணர்வின் ஒரு முனை.* | *4. மனவுணர்வின் மறுமுனை.* |
| *5. அன்பை அவாவும்.* | *5. அறிவை அவாவும்.* |

| | |
|---|---|
| *6.* பெண்மையை வேட்கும். | *6.* ஆண்மையை வேட்கும். |
| *7.* புறம் நோக்கித் தாவும். | *7.* அகம் நோக்கி ஒடுங்கும். |
| *8.* மறவுணர்வையும், பொருளையும் பற்றும். | *8.* அறவுணர்வையும் இன்பத்தையும் பற்றும். |
| *9.* பூதவியக்கத்தில் விசும்பு போன்றது. | *9.* பூதவியக்கத்தில் நிலம் போன்றது. |
| *10.* அறிவுக்குறைவே அன்பு நிறைவைக் குறைவாகக் கொள்ளும். | *10.* அன்புக் குறைவே அறிவு நிறைவைக் குறைவாகக் கொள்ளும். |
| *11.* அறிவு மிகுதியே அன்புக் குறைவை நிறைவாகக் கொள்ளும். | *11.* அன்பு மிகுதியே அறிவுக் குறைவை நிறைவாகக் கொள்ளும். |
| *12.* அறிவற்ற உயிர்த் தோற்றமே இல்லை. | *12.* அன்பற்ற உயிர்த் தோற்றமே இல்லை. |
| *13.* அறிவு அடுத்துக் காணுவது அன்பு. | *13.* அன்பு அடுத்துக் காணுவது அறிவு. |
| *14.* அறிவுக்கு மூன்று வினை : (அ) வெளிப்படுத்தல் (ஆ) காத்தல் (இ) நிலைப்படுத்தல் | *14.* அன்புக்கும் மூன்று வினை : (அ) வெளிப்படுத்தல் (ஆ) காத்தல் (இ) நிலைப்படுத்தல் |
| *15.* அறிவுக்கு மூன்று நிலை. (அ) ஒன்றை அறிதல் (ஆ) ஒன்றுபோல் அறிதல் (இ) ஒன்றால் அறியப்படுதல். | *15.* அன்புக்கும் மூன்று நிலை : (அ) ஒன்றில் இணைதல் (ஆ) ஒன்றுபோல் இணைதல் (இ) ஒன்றால் இணைக்கப் படுதல். |
| *16.* முன்நிலைத் தூண்டுதல் உடையது. | *16.* அன்பும் முன்நிலைத் தூண்டுதல் உடையது. |

| | |
|---|---|
| *(ஒருவரிடம் ஒருவகை அறிவுணர்வு தோன்றினால், அவர்க்கு முன் உள்ளவரிடமும் அதற்கிணையான அறிவுணர்வைத் தூண்டுகின்றது)* | *(ஒருவரிடம் ஒருவகை அன்புணர்வு தோன்றினால், அவர்க்கு முன் உள்ளவரிடம் அதற்கிணையான அன்புணர்வைத் தூண்டுகிறது)* |
| *17. கீழிருந்து மேல் எழும்பும் தன்மையது.* | *17. மேலிருந்து கீழிறங்கும் தன்மையது.* |
| *18) (அ) அறிவுக்கு ஆண்மை, வீரம், துணிவு, விடாப்பிடி, போர்மை (பற்றல் குணம்), ஆக்கலுணர்வு முதலியன மேனிலைத் துணை யுணர்வுகள். இவை அறிவின் எடுத்தல் குணங்கள் எனப்படும்.* | *18. (அ) அன்புக்குப் பெண்மை, அடக்கம், தளராமை, நாணம், ஈகம் (இழத்தல் குணம்) காத்தலுணர்வு முதலியன மேனிலைத் துணையுனர்வுகள். இவை அன்பின் எடுத்தல் குணங்கள் எனப்படும்.* |
| *(ஆ) சினம், பொறாமை, பொருள், அவா, அழித்தல் - உணர்வு, மறவெழுச்சி முதலியன கீழ் நிலைத் துணையுணர்வுகள். இவை அறிவின் படுத்தல் குணங்கள் எனப்படும்.* | *(ஆ) வெறுப்பு, தன்னலம், மனவெழுச்சி, மிகுவேட்கை, பழியுணர்வு முதலியன கீழ் நிலைத்துணை யுணர்வுகள், இவை அன்பின் படுத்தல் குணங்கள் எனப்படும்.* |
| *(இ) இவற்றுள் எந்த ஓர் உணர்வும் எந்த நிலையிலும் அழிந்து போகாது; ஆனால் அடங்கிக் கிடக்கலாம்.* | *(இ) இவற்றுள்ளும் எந்த ஓர் உணர்வும் எந்த நிலையிலும் அழிந்து போகாது; ஆனால் அடங்கிக் கிடக்கலாம்.* |

| | |
|---|---|
| 19. அறிவுக்கு மிகு மேனிலை (Super normal) மெய்யறிவு நிலை. | 19. அன்புக்கு மிகுமேனிலை மெய்யன்பு (அருள்) நிலை. |
| 20. மெய்யறிவு நிலைக்கு முதிர் நிலை (Supernal)தெய்வநிலை. | 20. மெய்யன்பு நிலைக்கும் முதிர்நிலை (Supernal) தெய்வநிலை. |
| 21. அறிவு, விலங்கு நிலையிலிருந்து படிப்படியாக வளர்ந்து, மாந்த நிலைக்கும், பின் மேல்மாந்த நிலைக்கும் பின் தெய்வ நிலைக்கும் வளர்ந்து, இறுதியில் இறை நிலையில் போய் இயக்கமற்றிருப்பது. அதன்பின் மீண்டும் இயக்க நிலையெய்திப் படிப்படியாய்த் துலக்கமெய்தி உயிர்நிலைபெற்று மீண்டும் சுழற்சியில் இயல்வது. | 21. அன்பும் அவ்வாறே சுழற்சி நிலையில் இயங்குவது. |
| 22. உயிரற்றும் உயிர்சுழற்சிக் கொண்டும் இயங்கும் எந்த நிலையலும் தன்னை இழவாத தன்மையுடையது. | 22. அன்பும் அவ்வாறே தன்னை இழவாத தன்மையுடையது. |
| 23. இயக்கமில் நிலையிலும், இயங்கு நிலையிலும் தன் மூவினையைச் செய்து கொண்டேயிருக்கும். (இயக்க மற்ற ஒரு கல்லுக்கும் தன்னை வெளிப்படுத்தல், காத்தல், நிலைப்படுத்தல் ஆகிய தன்மைகள் உண்டு). | 23. அன்பும் அவ்வாறே இயங்கும். |
| 24. அறிவு வெளிப்படும் காலத்து இயல்பூக்கச் சூழலாலும் பெறும். | 24. அன்பும் அவ்வாறே மாறுபாடுகளைப் |

எதிர்வு நிலைச் சிதைவுகளாலும்
குறைதல், மிகுதல், சமப்படுதல்,
அடங்கியிருந்தல் முதலிய
வேறுபாடுகளையும்
மாறுபாடுகளையும் பெறும்.

25. நிலையானது; அழிவற்றது. 25. நிலையானது; அழிவற்றது.

இதுகாறும் கூறிவற்றால் அன்பும், அறிவும் இயற்கைத் தாயின் இரட்டைப் பிள்ளைகள் என்றும், இரண்டுமே இயற்கை வடிவாகி அகத்தும் புறத்தும், சுருங்கியும் விரிந்தும், ஒன்றையொன்று பற்றியும் துறந்தும், ஒன்றினுள் ஒன்று அடங்கியும் விரிந்தும், உயிரல் பொருள்களாகவும் உயிர்ப்பொருள்களாகவும், அண்டமாகவும் பிண்டமாகவும், மண்டிலமாகவும், புடவியாகவும் இடையறாச் சுழற்சியில் உள்ளனவென்றும், அவையே அறியும் பொருளென்றும், அறியப்படும் பொருளென்றும் இரு கூறாகி நிற்கின்றவென்றும், அவை எந்நிலையிலும் அழிவதே இல்லையென்றும், அவையே இறையென்றும் கடவுள் என்றும் ஒரு பெயராலும், சிவம், உமை என்றும், மால், திரு என்றும், பொருள், ஆற்றல் என்றும் ஈரிணைப்பெயர்களாலும் அழைக்கப்பெறுவன வென்றும், அவையே ஒன்றென்றும், ஒன்றே இரண்டென்றும் தெற்றெனவும் முற்றெனவும் கண்டு கொள்க.

ஒரு செடி மண்ணிலிருந்து தோன்றி, வெளிப்பட்டு வளர்ந்து மரமாகி, விண்ணளாவிப் பரந்து நின்றாலும், அதன் வேர் அம்மண்ணொடு தொடர்பு கொண்டிருப்பதுபோல், மாந்தனின் அறிவுணர்ச்சி அவனை எவ்வளவில் வேறுபடுத்தி வளரச் செய்தாலும், தொடக்க நிலையில் அவன் மலர்ச்சிக்கே அடிப்படையாய் இருந்த அன்புணர்ச்சி அவன் மனத்தொடு பின்னிப் பிணைந்து கொண்டேயிருக்கின்றது.

## மெய்யறிவியல்

இனி, அறிவு பொருள் வயத்ததாகலின் அறிவுநிலை உண்மைகளையே மிகக் காணும் அவாவினர், இவ்வுலகைப்

பொருள் உலகமாகவும், இதன் இயக்கத்தைப் பொருள் இயக்கமாகவும்;

அன்பு ஆற்றல் வயத்ததாகலின் அன்புநிலை உண்மைகளையே மிகக்காணும் அவாவினர், இவ்வுலகை அன்புலகமாகவும், இதன் இயக்கத்தை அன்பியக்கமாகவும் காண்பர். முன்னவர் பொருள் முதல் கருத்து உடையவர் (Materialist) ஆகவும், பின்னவர் ஆற்றல் முதல் கருத்து உடையவர் (Theocratist) ஆகவும் பிரிந்த கொள்கையராக இயங்குகின்றனர்.

பொருள் முதல் கொள்கையாளர் இறை நம்பிக்கையற்றவர் (Atheist) ஆகவும், ஆற்றல் முதல் கொள்கையுடையவர் இறைக் கொள்கையினர் (Theist) ஆகவும் காணப்பெறுகின்றனர். இரண்டு கொள்கைகளும் ஒரே அகப்பாட்டின் இரண்டு புறப்பாடுகளே!

உலகை அறிவுணர்ச்சி மட்டும் கொண்டு அறிவது அறிவியல் ஆகும். உலகை அன்புணர்ச்சி மட்டும் கொண்டு அறிவது மதவியல் ஆகும். இருவகை அறிவும் உலகைப் பிரித்தறியும் தன்மையது.

அறிவுணர்ச்சி, அன்புணர்ச்சி இரண்டையும் கொண்டு உலகை இணைத்தறியும் தன்மையே மெய்யறிவியல் ஆகும். அறிவியலில் ஐன்சுடினின் ஒப்புமைக்கொள்கை யென்பது புறநிலைகளை இணைத்தறியும் ஒருவகைக் கோட்பாடே!

பொருளையும் ஆற்றலையும் அவை சார்ந்த அடிப்படை மனவுணர்வுகளுடன் உலகைக்காணும் ஒப்புமைக் கொள்கையின் வளர்ச்சி இனிமேல்தான் விளங்கித் துலங்குதல் வேண்டும். அதுவே அறிவியலில் மிகுநிலை அறிவியல் (Super Science) அல்லது மெய்ப்பொருள் அறிவியல் (Philosophical Science) என்னும் துறையைத் தோற்றுவிக்கும். அக்கால் எல்லாமே ஒன்று, ஒன்றே எல்லாம் எனும் உண்மைநிலை நன்கு மெய்ப்பிக்கப் பெறும். அந்நிலைக்கு நாம் உயர்ந்து விளங்குவோமாக!

# 9. கலையுணர்வும் அறிவுணர்வும்!

கல்வி என்னும் சொல்லுக்கு வேர்ச்சொல் கல் என்பது. கல் என்றால் தோண்டு என்பது பொருள். தோண்டப் பெற்று எடுக்கப்பெறுவதால்தான் கல்லையும் கல் என்று சொல்லுகிறோம். இந்தச் சொல் 'கல்' என்னும் ஒலியாலும் வந்ததாகச் சொல்லலாம். இரண்டு கற்களை ஒன்றோடொன்று அடித்து நெருப்பை உண்டாக்கிய பொழுது, வெளிவரும் 'கல்' என்னும் ஓர் ஒலியாலும் இப் பெயர் உண்டாகியதாகச் சொல்லலாம். எப்படியெனினும், கல் முதலில் ஒலியையும் பின்பு அவ்வொலி செய்யும் கல்லையும் குறித்ததாகல் வேண்டும். பின் கல் தோண்டியயெடுக்கப் பெறுவதால் தோண்டு என்னும் பொருளும் வந்திருத்தல் வேண்டும்.

மண்ணைத் தோண்டக் கிடைப்பது கல். மனத்தைத் தோண்டக் கிடைப்பது கல்வி, அறிவு. இந்த இரண்டு பொருள்களையும்,

> "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு." *(396)*

-என்னும் திருக்குறளிலும் காணலாம். இங்குத் தோண்டக் கிடைப்பதாகக் குறிப்பிடும் பொருள் நீர். நீரும் நிலத்தைத் தோண்டுவதால் கிடைப்பது. இங்கு ஊறுதல் என்னும் வினைக்கேற்ப நீரைக் குறித்தார் திருவள்ளுவர் என்க.

கலை என்னும் சொல்லுக்கும் கல் என்னும் சொல்தான் மூலச்சொல். கற்கப் பெறுவது கலை. கலையும் ஒருவகைக் கல்வியே. மனத்தில் நல்லின்ப உணர்வை உண்டாக்குவது கலை. இஃது ஐம்பொறிகள் வழியாக உள்ளத்திற்கு இன்பம் சேர்ப்பது.

ஓவியம், சிற்பம் முதலியன காட்சி இன்பத்தால் மனத்தை மகிழ்விப்பது; இசை, பாட்டு முதலியவை செவியின்பத்தால் மனத்தைக் கவர்வன. நாட்டியம், நாடகம் முதலியவை காட்சியாலும், கேள்வியாலும் மனத்தை மகிழ்விப்பன. இவை தவிர அழகுக் கலை, உடலின்பக்கலை முதலியன அனைத்துப் புலன்களையும் மகிழ்வு செய்வன. கலைகளுள் பாட்டு, இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைகளுக்கே அனைத்து மக்களும் பெருமதிப்புக் கொடுக்கின்றனர்.

கல்வி அறிவுணர்வை வளர்ப்பது. கலை மனவுணர்வைக் கவர்வது. இருப்பதை உணரச் செய்வது கலை. இருப்பதை ஆராய்வது அறிவு.

கலை மனத்தைக் கவர்வது; கல்வி அறிவுணர்வைக் கவர்வது.

அறிவை விட கலைக்கே கவர்ச்சி அதிகம் ஆகலின், கலையுணர்வையே அனைத்து மக்களும் விரும்புவர். கலை மற்ற கவலைகளிலிருந்து மனத்தை விடுவிக்கச் செய்யும்.

அறிவு அனைத்துப் பொருள்களிலு ஈடுபாடு காட்டி மனத்தை ஊன்றுவிக்கச் செய்யும்.

மனமானது உலகப் பொருள்கள் அனைத்தின் புறத்தோற்றங்களிலும் நாட்டங்கொள்வதற்குக் கலையுணர்வு பயன்படுகின்றது. இயற்கையைச் சுவைப்பதற்குக் கலையுணர்வு துணை செய்கிறது.

இயற்கையை ஆராய்வதற்கு அறிவுணர்வு துணை செய்கிறது.

வானத்து நிலவின் அழகிலும், குளிர் ஒளியிலும் மனத்தை ஈடுபடச் செய்வது கலை.

அந்த நிலவு என்பது என்ன, அஃது எவ்வளவு தொலைவில் உள்ளது என்பது பற்றி வினாக்களை எழுப்பி ஆராய்ச்சியில் மனத்தை ஈடுபடுத்துவது அறிவுணர்வு.

ஒருவன் மகிழ்ச்சியுடன் வாழக் கலையுணர்வும் வேண்டும், அறிவுணர்வும் வேண்டும். இரண்டும் வாழ்வை நன்கு சுவைக்கவும் விளங்கிக் கொள்ளவும் உதவுகின்றன.

கலை கற்பபனையை உண்டாக்கும்; அறிவு ஆராய்ச்சி செய்யும். கலைவுணர்வுடைய உள்ளம் கண்டபடி அலையும் தன்மை வாய்ந்தது. அறிவுணர்வுடைய உள்ளம் அப்படி அலைகின்ற உள்ளத்தைக் கட்டுப்படுத்தி, அதை ஒரு பொருளில் நிலை நிறுத்தும்; பின்னர், அப்பொருளின் நன்மை தீமையை உணர்த்தும்; அதன்பின் தீமையில் மனம் ஈடுபடாதவாறு காத்தும், நன்மையில் ஈடுபடும்படி ஊக்கியும் நிற்கும். மனம் வண்டியை ஓட்டுகின்ற விசையைப் போன்றது; அறிவு அவ் வண்டியை வேண்டிய திசையில் திருப்பவும், தேவையான இடத்தில் நிறுத்தவும் உதவுகின்ற வலசை (Steering) போன்றது.

இதனால்தான் திருவள்ளுவர்,

"சென்ற விடத்தான் செலவிடாது தீதொரீஇ,
நன்றியின்பால் உய்ப்பது அறிவு." *(422)*

என்று கலையுணர்வால் பற்றப்படும் மனவுணர்வையும் அறிவுணர்வையும் வேறு பிரித்துக் கூறுவார்.

கலையுணர்வு அன்புக்கு அடிப்படையானது; இணைப்பை உருவாக்குவது; வேற்றுமைகளைத் தகர்ப்பது; ஒற்றுமையைத் தோற்றுவிப்பது; வாழ்வில் சுவையை உண்டாக்குவது; பற்றைத் தருவது;

ஆனால் அறிவை மழுக்குவது; நெறிமுறைகளைச் சீர் குலைப்பது; அவ்வுணர்வு மிகுந்தால் ஒழுக்கம் குறையும்; உழைப்பு கெடும்; முயற்சி தளரும்; சோம்பல் மிகும்; மனம் எப்பொழுதுமே கள்குடித்தவன் போல் இன்பநினைவில் நாட்டங்கொண்டு அலையும்.

அறிவுணர்வு அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையானது; பிரிவை உண்டாக்குவது; வேற்றுமைகளை வளர்ப்பது; வாழ்வில் விளக்கத்தை, வளர்ச்சியைத் தருவது;

ஆனால் அன்பைக் கெடுப்பது; மிகுந்த சட்டதிட்ட நெறிமுறைகளை அமைத்துக் கொள்வது. இவ்வுணர்வு மிகுமானால் கொடுமை மிகும்; உழைப்பில் அளவு கடந்து ஈடுபடச் செய்யும்; ஓய்வு ஒழிவு இல்லாத முயற்சியை உண்டாக்கும்; மனம் எப்பொழுதும் கத்தி பிடித்த போர்வீரன் போல வீர உணர்வில் நாட்டங்கொண்டு அலையும்.

இவ் விரண்டு உணர்வுகளுமே மாந்தனுக்குத் தேவையான இயற்கை உணர்வுகளே! ஆனால் அவை சம அளவில் இயங்குதல் வேண்டும். ஒன்றையொன்று விஞ்சுதல் கூடாது. ஒன்று விஞ்சினால் அது மற்றொன்றை அழித்து விடும்; இரண்டும் மாட்டு வண்டியில் கட்டப் பெற்ற இரண்டு காளை மாடுகளைப் போல ஒத்து நடைபோட வேண்டும். ஒன்றை ஒன்று விஞ்சினால் மாந்தர்களின் வாழ்க்கைப் போக்கில் தடுமாற்றம் உண்டாகும்.

இக் காலத்தில் நம் வாழ்க்கையில், அறிவுணர்வை விட, கலையுணர்வு மீறி - மிகுந்து - நிற்கிறது. எனவேதான் ஒழுக்கச் சீர் குலைவுகளும், சட்ட மீறல்களும், நேர்மைக் குலைவுகளும் சில இடங்களில் ஏற்படுகின்றன. சில நேரங்களில், கலையுணர்வை விட அறிவுணர்வு விஞ்சி நிற்கின்றது. எனவேதான் அப்பொழுதெல்லாம் கொடுமைகளும், கொலைச் செயல்களும், கொள்ளைகளும் நிகழ்கின்றன. இரண்டு உணர்வுகளையும் ஒன்றையொன்று விஞ்சக் கூடாதபடி நாம் சமநிலைப்படுத்த வேண்டும். ஒன்றுக் கொன்று எதிர்த்துப் போகாமல் இணைந்து போகும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நம் வாழ்க்கை அச்சமற்றதாகவும் அன்புடையதாகவும் அறிவுப்பயன் உடையதாகவும் மகிழ்வாகவும் இருக்கும்.

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

# 10. உடன்பாடும் முரண்பாடும் (மனம், அறிவு, உடல்)

இவ்வுலகியல் நடைமுறைகளுக்கு நம்முடைய கருத்தும், சொல்லும், செயலுமே மூன்று அடிப்படைக் கூறுகளாக உள்ளன என்பதை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இனி, இம்மூன்று கூறுகளுக்குமே மனம், அறிவு, உடல் ஆகிய மூன்றும் காரணக் கூறுகளாக இருப்பதையும் நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

கருத்தால் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் செயல்படுகிறோம். கருத்தைச் சொல்லால் வெளிப்படுத்திப் பிறரைச் செயலுக்கு உள்ளாக்குகிறோம். (சொல், ஒலியாகிய உரைக்கும், ஒளியாகிய எழுத்துக்கும் பொருந்தும்.)

கருத்தைத் தழுவிச் சொல் தோன்றுகிறது, சொல்லைத் தழுவிச் செயல் நிகழ்கிறது.

(இனி, தோன்றும் கருத்து முழுவதையும் சொல்லாக வெளிப்படுத்த முடியாமற் போவதும், வெளிப்படுத்திய சொற்கள் முழுவதையும் செயலாகச் செய்ய முடியாமற்போவதும், வேறு வேறு.)

கருத்து, சொல், செயல் மூன்றுக்கும் மனம், அறிவு உடல் மூன்றும் காரணங்கள். கருத்து, சொல், செயல் மூன்றும் கருமியங்கள். காரணின்றிக் கருமியம் நிகழாது.

இனி கருத்து, சொல், செயல் ஆகிய மூன்று கருமியங்களும் முழுமையாக, நிறைவாக நிகழ்வுற வேண்டுமானால், மனம், அறிவு, உடல் மூன்று காரணங்களும் முழுமையாக ஒத்து இயங்குதல் வேண்டும்.

மனம், அறிவு ஆகிய இரண்டு காரணங்கள் மட்டுமே செயல்பட்டால், கருத்து மட்டுமே தோன்றும்; சொல்லும் செயலும் நிகழா. மனம், அறிவு இரண்டுடன் உடல் சேர்ந்து இயங்கினால் மட்டுமே சொல், செயல் நிகழும். இவ்விளக்களங்களைக் கீழ்வரும் சமன்பாட்டால் குறிக்கலாம்.

மனம் + அறிவு → கருத்து.

மனம் + அறிவு + உடல் → கருத்து → சொல் → செயல்

இனி, மனவுணர்வு கூடியும் (+). அறிவுணர்வு குறைந்தும் (-) கருத்தும் சொல்லும் தோன்றுவதும் உண்டு. அதே போல் மனவுணர்வு குறைந்தும் (-) அறிவுர்ணவு கூடியும் (+) கருத்தும், சொல்லும், தோன்றுவதும் உண்டு. ஆனால் எவ்வாற்றானும் இவ் விருவழியாகத் தோன்றும் கருத்தும் சொல்லும் குறைவுடையனவாகவே இருக்கும்.

| மனம் | x | அறிவு | → | கருத்து, | சொல். |
|---|---|---|---|---|---|
| (+) | x | (-) | → | (-), | (-) |
| (-) | x | (+) | → | (-), | (-) |
| (+) | x | (+) | → | (+), | (+) |

இவ் வுணர்வியல் சமன்பாடுகளுடன், கணக்கியல் சமன்பாட்டில் வரும் ஒரு கூறான (-) x (-) → (+), என்பது பொருந்தாது.

அஃதாவது, மனமோ அறிவோ சேராமல் சொல்லோ கருத்தோ தோன்றா.

நம் ஒவ்வொருவரிடம் தனித்தனியாக, மனமும், அறிவும் செயலும் உண்டு. இவற்றை நம் அளவாக இயக்கும் ஆளுமைப் பரப்பும் உண்டு.

இவ்வாறு எண்ணிப் பார்த்தால் நாம் அனைவரும் தனித்தனி உலகத்தைப் போன்றவர்கள். ஆனாலும் தனித்தனியாக இயங்கமுடியாது; இயலாது. சேர்ந்து ஒரே மக்கள் குமுகமாகத்தான் இயங்க முடியும். அப்படி இயங்கும்போது தான் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்னும்

இயங்கியல் கோட்பாட்டை நாம் கடைப்பிடித்து வாழவேண்டியுள்ளது.

நாம் உருவம், தோற்றம், பொலிவு, உணர்வு, பண்பு, குணம் (பண்பு வேறு; குணம் வேறு. பண்பு இவ்வுலகியல் தன்மை உடையது. குணம் உயிரியல் தன்மை உடையது. பண்பை மாற்றிக் கொள்ளமுடியும்; குணத்தை மாற்றிக் கொள்ள முடியாது.)

அறிவு, ஆசை, பாசம், விருப்பு, வெறுப்பு, உணவு, உடை, இயக்கம், ஈடுபாடு, கொள்கை, முயற்சி - முதலிய அத்தனை நிலைகளிலும் வேறுபட்டவர்கள். இருப்பினும் நாம் ஒன்று பட்டுத்தான் மக்களுடன் மக்களாய், உடன் பிறப்புகளாய், கணவன், மனைவியராய், உறவினர்களாய், உற்றார்களாய், ஊரினராய், நாட்டினராய், உலகத்தினராய், - வாழ வேண்டியிருயிருக்கிறது. இவற்றுள் இன்னும் புறநிலை வேறுபாடுகளான, சாதிகள், மதங்கள், இனங்கள், மொழிகள், நடைமுறைப் பழக்கங்கள், கொள்கைள், கட்சிகள், வாழ்வியல் முறைகள் என்பவை வேறு, நம்மை மேலும் பல்வேறு பிரிவுகளுக்கு உள்ளாக்கி நம்முள் வேற்றுமைகளை வளர்த்திருக்கின்றன. வளர்த்து வருகின்றன. இவ் வேற்றுமைகளிடையில்தாம் நாம் ஒருவரோடொருவர் உறவும் நட்பும் கொண்டாடி வாழ்ந்து வர வேண்டியுள்ளது. இந்நிலையில் நம் போல் இவ்வருடைய ஈடுபாட்டில், இணைந்து இயங்கும் இயக்கத்தில், சில நேரங்களில் நமக்குள் பெரும்பாலும் ஒன்றிய உணர்வுகளால் உடன்பாடும், பெரும்பாலும் வேறுபட்ட உணர்வுகளால் மாறுபாடும் தோன்றுவது இயற்கை.

அன்பு, நட்பு, உறவு, உதவுதல்தன்மை, இரக்கம், விருந்தோம்புதல், பணிவுடைமை, பொறுத்தல்தன்மை, நன்றியறிதல், பொறாமைப்படுதல், பகை கொள்ளுதல், வெறுத்தல், விரும்புதல், எதிர்த்தல், நல்லன பேசுதல், எரிச்சல் கொள்ளுதல், தீயவை செய்தல், நல்லவை செய்தல், இணக்கமுடன் இருத்தல், பிணக்கம் கொள்ளுதல், ஈதல்தன்மை, அருளுணர்வு, சினம் கொள்ளுதல், கொலை, களவு, துறவு இன்னோரன்ன பல்வேறு வகையான உணர்வுகள் மனவுணர்வின் பாற்படும்.

கல்வி, கேள்வி, பேதைமை, கல்லாமை, அறியாமை, குற்றம் காணுதல், பெரியோரை மதித்தல், ஆசிரியர்க்கு அடங்குதல், பொருள்களைப் பற்றியறிதல், பிறரைப் பற்றி அறிதல், இடம், காலம், நாடு, வரலாறு பற்றியறிதல், தொழிலறிவு, செயலறிவு, உறவுணர்வை வளர்த்தல், நேர்மை, ஞாயம், துன்பத்தை விரும்பாமை, இன்பத்தை விரும்புதல், ஆளுதல் தன்மை, சொல்வன்மை, பதவி ஏற்றல், பொருள் விரும்புதல், பொருளீட்டுதல், அறிவு நாட்டம், தொண்டுணர்வு, மொழி, இன, நாட்டுப் பற்றுகள், குழுக்கூடுதல், படை சேர்த்தல், போர் செய்தல், அல்லவை தவிர்த்தல், நல்லவை நாடல், பொழுது போக்கு, விளையாட்டுணர்வு, உடற்பயிற்சி செய்தல், சூதாடுதல், போட்டிகளில் பங்கேற்றல், கலைகளை அறிதல், மானவுணர்வு, பெருமையுணர்வு, பண்புணர்வு, நாணவுணர்வு, குமுகாய உணர்வு, ஒழுக்கம், ஒழுக்கக்கேடு முதலிய இன்னோரன்ன உணர்வுகள் அறிவுணர்வின் பாற்படுவன.

உடலின்பம், பசி, தூக்கம், சோம்பல், பேசுதல் காற்றில் தோய்தல், மழையில் நனைதல், வெயிலில் காய்தல், சொறிதல், புலன் நுகர்ச்சி (கண்டு, கேட்டு, உண்டு, நக்கி, குடித்து, ஒத்தி, தேய்த்து, தட்டி, நீவி, இடித்து, குத்தி - மகிழ்கின்ற உணர்வுகள்) போன்ற இன்னோரன்ன உணர்வுகள் உடலுணர்வின் பாற்படும்.

இம் மூன்று வகையான உணர்வு எழுச்சிகளும் நம் ஒவ்வொருவரிடத்தும், இவ் வுலகியல் ஈடுபாடுகளுக்கும் இடம், பொருள், கருவி, காலம், சூழல் ஆகியவற்றுக்கும் ஏற்ப, மாறி, மாறி எழுந்தும், விழுந்தும், அடங்கியும், அடங்காமல் ஆர்த்தும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. இதில் நாம் இன்னும் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இவ்வுணர்வுகள் தனித்தனியாக இயங்குவதில்லை. ஒன்றுடன் ஒன்று கலந்தும், உறழ்ந்தும் (அளாவியும்), உடன்பட்டும், மாறுபட்டும் இயங்கிக் கொண்டு உள்ளன. அவற்றை நாம் பிரித்துணர்தலும், அளவறிதலும், வலிவு அறிதலும், தவிர்த்தலும் கடினம், கடினம் மிகக் கடினம். குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒருவர் நாம் எதிர்பார்க்கும் உணர்வுடன் இருப்பார் என்று கூற முடியாது.

இனி, இம் மூவகை உணர்வுகளும் ஒருவரிடம் ஒரே அளவாக இருக்கும் என்றும் சொல்ல முடியாது. பொதுவாகவும், தெளிவாகவும், மிகச் சரியாகவும் சொன்னால், இந்த உணர்வுகளால் ஒவ்வொருவரும் எப்பொழுதும் எந்த நிலையிலும் ஆட்டிவைக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார். எந்த உலகியல் வேறுபாடும் இன்றி, அரசன், ஆண்டி, அறிஞன், மூடன், நல்லவன், கெட்டவன், ஆண், பெண், அலி, சிறுவர், குழந்தை, இல்லறத்தான், துறவறத்தான், நோயாளி, நோயின்றி யுள்ளவன், நாட்டிலிருப்பவன், காட்டிலிருப்பவன், நிலத்தில் உள்ளவன், நீர்மேல் செல்பவன், தூங்குபவன், விழித்திருப்பவன், கூட்டத்திற்கிடையில் உள்ளவன், அவை இல்லாதவன் - எனப் பெறும் அனைவரும் இம்மூவகை உணர்வுகளுக்கும் எப்பொழுதும் ஆட்பட்டே இருக்கின்றனர் என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒருவன் தன் தாயுடன் பேசியபடி அன்பாயிருப்பான்; ஆனால் பசியுடன் இருப்பான்; அத்துடன் அவன் மக்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டுமிருப்பான். ஒரே சமையத்தில் அவன் தாயுடன் பேசிக் கொண்டுள்ள அன்புணர்வு மனத்தில் பாற்பாட்டது; பசியுணர்வு உடலின் பாற் பட்டது; மக்கள் பற்றிய குமுகாய உணர்வு அறிவின் பாற் பட்டது! இவ்வாறாகத்தான் நாம் அனைவரும் ஒரே சமையத்தில் பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளுடன் இயங்கிக் கொண்டு இருக்கிறோம்.

ஒருவன் தன் காதலியுடன் பேசிக் கொண்டிருப்பான்; அந்த நேரத்தில் அவன் தந்தையின் கண்டிப்பு பற்றிய நினைவுவரும்; அதே பொழுது தன் காதலியின் தலைமுடியை அவன் தன் கையில் நீவிக் கொண்டிருப்பான்.

இங்கு, காதலியுடன் பேசிக் கொண்டிருப்பது மனவுணர்வு; தந்தையைப் பற்றிய சிந்தனை அறிவுணர்வு; காதலியின் தலையை வருடிக் கொண்டிருப்பது உடலுணர்வு. இம்மூன்று உணர்வுகளையும் வேறு பிரித்து அறிய முடியாதபடி அவன் இயங்கிக் கொண்டிருப்பான்! இதுதான் உலக இயற்கை!

தெளிவாகச் சொன்னால், நாம் ஒவ்வொருவரும், இம் மூன்று உணர்வு அலைகளிலும் சிக்கிச் சுழன்று கொண்டு தவித்தும்

தத்தளித்தும் கொண்டும் உள்ளோம். என்றும் எந்த நேரத்தும் எந்த நிலையிலும் நாம் தனித்தே இருந்ததில்லை. உடலால் நாம் கூட்டத்துடன் இருப்போம்; மனத்தால் நாம்நோயாளியான மனைவியைப் பற்றிச் சிந்தித்தவாறு இருப்போம்; அறிவால் நாம் நாளை கொடுக்கப்பட வேண்டிய கடனுக்கான பொருளைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்போம். இப்படித்தான் நாம் இருக்கவேண்டி உள்ளது.

இனி, ஒருவர்க்குள் மூன்று உணர்வுக் கூறுகளாகிய மனம், அறிவு, உடல் ஆகிய ஒவ்வொரு கூறும் மும் மூன்று பிரிவுகளாகப் பிரிவு படக்கூடியது. அவை வருமாறு:

| | | |
|---|---|---|
| மனம் → நேர் மனம் | எதிர் மனம் | நடுமை மனம். |
| அறிவு → நேர்அறிவு | எதிர் அறிவு | நடுமை அறிவு. |
| உடல் → நேர் உடல் | எதிர் உடல் | நடுமை உடல். |

இவற்றுள்,

நேர் மனம் ஒன்றை உடன்பட்டுச் சிந்திக்கும்.

எதிர் மனம் ஒன்றை முரண்பட்டுச் சிந்திக்கும்.

நடுமை மனம் ஒன்றைப் பகுதி உடன்பட்டும்,

பகுதி முரண்பட்டும் சிந்திக்கும்.

அதேபோல், அறிவும், உடலும், நேர், எதிர், நடுமை என்னும் அளவில், உடன்பட்டும், முரண்பட்டும், பகுதி உடன்பட்டும், பகுதி முரண்பட்டும் சிந்திக்கும் தன்மை உடையன.

இந்த வகையில் மூவகைக் காரணக் கூறுகளும், ஒன்பது வகையாகப் பிரிந்து இயங்கிக் கொண்டே இருக்கும். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒன்பது ஒன்பது பிரிவுகளாக இயங்கும் காரண உணர்வுக் கூறுகளை அவர்கள் பிரித்துணர்வதும் உய்த்துணர்வதும் கடினம். ஆனால், அவை கருமியக் கூறுகளில் படிந்து இயங்குவதை நாம் கவனித்து உணரலாம். அவற்றைக் கீழ்வரும் கருமிய (செயல்) எடுத்துக் காட்டுகளால் அறியலாம்.

மனம் என்னும் காரணக் கூறின் அடிப்படையில், ஒரு கருத்தை,

அகரன் என்பவன் உடன்பட்டுச் சிந்திக்கலாம்;

மகரன் என்பவன் முரண்பட்டுச் சிந்திக்கலாம்;

இகரன் என்பவன் பகுதி உடன்பட்டும்

பகுதி முரண்பட்டும் சிந்திக்கலாம்.

அதே போல், அறிவு என்னும் காரணக் கூறின் அடிப் படையில் ஒரு கருத்தை,

மல்லி என்பவள் உடன்பட்டுப் பேசலாம்;

அல்லி என்பவள் முரண்பட்டுப் பேசலாம்;

வல்லி என்பவள் பகுதி உடன்பட்டும்

பகுதி முரண்பட்டும் பேசலாம்.

அதே போல், உடல் என்னும் காரணக் கூறின் அடிப்படையில், ஒரு செயலை,

கதிரன் நிலவுக்கு உடன்பட்டுச் செய்யலாம்;

கதிரவன் அல்லிக்கு முரண்பட்டுச் செய்யலாம்;

கதிரவன் தாமரைக்குப் பகுதி உடன்பட்டும்

பகுதி முரண்பட்டும் செய்யலாம்;

இம் மூவகைக் கூறுகளிலும் ஒன்பது பிரிவுகளிலும் வெவ்வேறு இருவர்க்கிடையில் வெவ்வேறு விழுக்காட்டு அளவில் எண்ணம், சொல், செயல் ஆகியவை அமைவதுண்டு.

இவற்றுள், மனத்தால் உடன்பட்டுச் சிந்திக்கும் - இருவர் அறிவால் முரண்பட்டுச் சிந்திக்கலாம்; உடலால் வேறுபட்டு இயங்கலாம். அவர்கள் மனத்தால் அன்பு கொண்டு நட்புடன் உறவாடலாம்; ஆனால் அறிவால் ஒருவர் கருத்தை ஒருவர் ஏற்றுக் கொள்ளாமல் முரண்பட்டுப் பேசுவார்கள்; செயலால் வேறுபட்டு இயங்குவார்கள். மனத்தால் உடன்பட்டு அன்புள்ளவர்கள் என்பதாலேயே இருவர் அறிவால் உடன்பட்டுவிட மாட்டார்கள்; இனி, மனத்தாலும் அறிவாலும் உடன்பட்டுப் பேசுபவர்களே செயலால் உடன்பட்டு விடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது.

மனம், அறிவு, உடல் மூன்றாலும் உடன்பட்டும், முரண்பட்டும், பகுதி உடன்பட்டும், பகுதி மாறுபட்டும் இயங்குகின்ற இருவர் நிலைகளை மட்டும் கீழே பிரித்துக் காட்டியிருக்கிறோம். அவர்களின் இயக்கம் எத்தனை வேறுபாடுகள் கொண்டிருக்கின்றன என்பதை ஆழ்ந்து பாருங்கள்.

இங்கு, உடன்பாட்டைக் கூட்டல் (+) குறியாலும், முரண்பாட்டைப் பெருக்கல் (x) குறியாலும், பகுதி உடன்பாட்டையும், பகுதி முரண்பாட்டையும் கூட்டல், பெருக்கல் (+x) ஆகிய இரண்டு குறிகளாலும் காட்டியிருக்கின்றோம். அவ்விருவரும் சேர்ந்து இயங்கும் இயக்கத்தின் விளைவும் இங்கே கூறப்பெற்றுள்ளது.

| முதலிருவர்: | மனம் | அறிவு | உடல் |
|---|---|---|---|
| அகரன் | x | x | x |
| இகரன் | x | x | x |

இயக்கம் : இருவரும் மூன்று காரணக் கூறுகளாலும் முரண்பட்டிருப்பதால், இருவரும் எதிலும் சேர்ந்து இயங்கவே இயலாது. எனவே இணையவே கூடாது. இணைந்தால் பகைதான் எஞ்சும்.

"கனவினும் இன்னாது மன்னோ சொல்வேறு
செயல்வேறு பட்டார் தொடர்பு" (குறள் : 819)

2. ஆம் இருவர் :

| | | | |
|---|---|---|---|
| நள்ளி | + | x | x |
| முள்ளி | + | x | x |

இயக்கம் : அவர்கள் இருவரும் அவ்வப்பொழுது பேசிக் கொள்கின்ற அன்பர்களாக மட்டும் இருக்கலாம். நட்புக் கொள்ள இயலாது. அதிகமாக நெருங்கினால் பிணக்கு வரலாம். செயலில் இணைய முடியாது.

"மனத்தின் அமையா தவரை எனைத்தோன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று" (குறள் :825)

**3.** ஆம் இருவர் :

| | | | |
|---|---|---|---|
| வல்லி | + | + | x |
| அல்லி | + | + | x |

இயக்கம் : இருவரும் நல்ல நண்பர்களாக இருக்க முடியும். பேச்சிலும் இணைந்தே மகிழ்வார்கள். ஆனால், செயலில் இணைந்தால் தொடர்ந்து இயங்க முடியாது. பிரிந்து விடுவார்கள்.

''எனைவகையான் தேறியக் கண்ணும்
வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்'' (குறள் : 514)

**4.** ஆம் இருவர் :

| | | | |
|---|---|---|---|
| கிள்ளி | + | + | + |
| வள்ளி | + | + | + |

இயக்கம் : இருவரும் உயிர் நட்புக் கொள்ளலாம் மகிழ்வுடன் எந்தக் கருத்தையும் பற்றிப் பேசி, அளவளாவி உடன்பாடு கொள்ளலாம். முரண்பாடு என்பதே இவர்களிடம வராது. இருவரும் ஒத்த உளத்தினராய், ஒரே கருத்தினராய், ஒரே வினையில் ஈடுபட்டுப் பயன் பெறலாம். இவர்கள் நட்புக்குத் தொடக்கந்தான் உண்டு; பிரிவில்லை. இருவரும் எந்தச் செயலிலும், வணிகத்திலும் இணைந்து ஈடுபட்டு வெற்றியும் பெறலாம். இவ்விருவரும் ஆண், பெண்ணாக இருப்பின் தாராளமாக மணம் செய்து கொள்ளலாம். இவர்கள் இல்லற வாழ்க்கை முழு மகிழ்ச்சியுடையதாய் முழு வெற்றி பெறும். எண்ணத்தாலும் கருத்தாலும் செயலாலும் இவர்களுக்கு இறுதி வரை இன்பமே நிகழும்.

''நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை'' (குறள் : 789)

''தெரிந்தே இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்'' (குறள் : 462)

''நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையார் யாளர் தொடர்பு'' (குறள் : 783)

இனி, இம் மூவகை அடிப்படைக் காரணக் கூறுகளும், வேறு வேறு வகையாக மாறுபட்டு, பல்வேறு உணர்வு மாற்றங்களையும் செயல் மாற்றங்களையும் உருவாக்குவதைக் கணக்கியல் அறிந்தவர்கள் எளிதில் உணர்ந்து கொள்வீர்.

சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்வதானால், மக்களிடம் எத்தனைக் கோடி உருவ வேறுபாடுகள் இருக்கின்றனவோ, அத்தனைக் கோடி மன வேறுபாடுகளும், அறிவு வேறுபாடுகளும் இருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இனி, மனவுணர்வால் உடன்பட்டுப் போகின்ற இருவர், அறிவுணர்வால் முரண்பட்டு இயங்கினாலும், அவர்கள் அடிப்படையான மனவுணர்வு ஒன்றியுள்ளவர்கள் ஆதலால், ஒருவர்பால் ஒருவர் அன்பு கொள்வதற்கும் நட்பாடுவதற்கும் இடம் உண்டு. இந்த நிலையை அவர்கள் மேலும் மேலும் உறவாடி வலுப்படுத்திக் கொள்வார்களானால், நாளடைவில் அறிவுணர்வாலும் உடன்பட்டுப் போகின்ற நிலை தானே உருவாகி விட வழியமைந்துவிடும். எவ்வாறெனில் மனம் பொருந்தப் பொருந்த அறிவும் முரண்பாடுகளைப் படிப்படியாகத் தணிவித்துக் கொண்டு, உடன்பாடு காணமுடிந்த நிலைகளில் ஒன்றிக் காலூன்றிக் கொள்ளும். அதன்பின் இருவருள் வலிந்த அறிவுணர்வு எவர்பால் வெளிப்படுகின்றதோ, அவர், மெலிந்து தோன்றும் அறிவுணர்வுள்ள மற்றவரைச் சிறிது சிறிதாகத் தன்வயப்படுத்தி அவரைச் சிந்திக்கச் செய்கிறார். அச் சிந்தனை வளர வளர வலிந்த அறிவுணர்வு உள்ளவர்பால் மெலிந்த அறிவுணர்வு உள்ளவர் ஆட்பட்டு அவர் அறிவாளுமைக்கு உடன்பட்டுப் போகிறார். இஃது எடுத்த எடுப்பிலேயே நிகழாமல் காலத்தால் நிகழ்வது.

இதுபோலவே, மனவுணர்வும் அறிவுணர்வும் பொருந்திய நிலையுள்ள இருவர் செயலால் (அஃதாவது உடலால்) முரண்படுவதுண்டு. இவ்வாறு செயலால் முரண்படும் இருவர், தொடர்ந்து ஒருவருடன் பழகப் பழக, மனவுணர்வும் அறிவுணர்வும் வலிந்து இறுகலாகி, இருவரையும் செயலுணர்விலும் அஃதாவது உடலுணர்விலும் உடன்பாடு

உள்ளவர்களாக ஆக்கி விடுவதும் நிகழக்கூடியதே! அந்நிலையில் மனவுணர்வாலும் அறிவுணர்வாலும் வலிந்து நிற்பவர், அவற்றில் மெலிந்து நிற்பவரைத் தன் வயப்படுத்தி, தன்னுடைய செயலாளுமைக்கு அவரை ஆட்படுத்தி விடுவார். அக்கால் அவ்வுணர்வுகளில் குறைந்த திறமுடையவர் தன்னாளுமையை இழந்து வாடுவார். அத்துடன் அவர் வாழ்வின் இறுதி நிலைவரை மற்ற முதலாமவர்க்கு அடி(மை)ப்பட்டு இயங்க வேண்டியதுதான்!

இனி, இதையும் போலவே, அறிவுணர்வாலும், உடலுணர்வாலும், அஃதாவது செயலாலும் உடன்பட்டுப் போகின்ற இருவர் மனவுணர்வால் முரண்படுவதும் உண்டு. அக்கால் ஊமைகள் இருவர் போல் ஒருவர்க்கொருவர் ஒன்றிய உணர்வின்றி, அறிவாலும் அதன் வழியமைந்த செயலாலும் ஒருங்கே இணைந்தவராய் இயங்கிக் கொண்டிருப்பார். இஃது, அண்ணன் தம்பியர் ஒரே பணியை, மனவிருப்பமின்றி, தன் குடும்ப நிலைப்பாட்டுக்கென ஈடுபாடு கொள்வதைப் போன்றது. இவர்களும் காலப்போக்கில் முரண்பாடற்ற அறிவுணர்வும் உடலுணர்வும் கொண்டு இயங்குவதனால், மனவுணர்வில் படிப்படியாய் ஒன்றி முரண்பாடு நீங்கப்பெற்று உடன்பாடு கொள்ளுவதும் உண்டு. இவர்களின் முந்தைய நிலை தாமரையிலை மேல் உருளும் தண்ணீர் முத்துகளைப் போன்றிருந்து, பின், மணலுள் தெறித்த நீர் போல் ஒன்றையொன்று ஈர்த்துக் கொள்வது போலாகும்.

எஃது, எவ்வாறிருப்பினும், உடன்பாட்டுணர்வும், முரண்பாட்டுணர்வும் எதிரும் புதிருமான உணர்வுகளாம். இவ்விரண்டு வேறுபட்ட உணர்வுகளாலும் நிரம்பப் பெற்ற மாந்த இனம். ஒருவரால் மற்றவரும், மற்றவரால் அவ்வொருவரும், முட்டிமோதி, உருண்டு, புரண்டு, ஊடலும் கூடலுமான இயக்கங்களை ஏற்படுத்திக் கொண்டு, மனத்தாலும் அறிவாலும் உடலியக்க உணர்வாலும் படிப்படியாய் மேம்பட்டுக் கூர்தலற முறைப்படி, விளங்க வேண்டும் என்பதே இயற்கையின் இயங்கியல் நோக்கமாகத் தெரிகின்றது. இவ்வாறின்றி, இவ்வுலகின்கண் மாந்தப் பிறப்பெடுத்த அனைவரும், ஒரே வகையான மனவுணர்வும், அறிவுணர்வும்,

உடலுணர்வும் கொண்டு இயங்குவார்களாயின், அவர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்ளவும் வாய்ப்பிராது; அதனால் மொழி தேவையில்லாமற் போகும்! அஃதாவது ஒருவர் பேச விரும்பும் ஒரு கருத்தை அவர்க்கு எதிரில் உள்ளவரும் ஏற்கெனவே தெரிந்திருப்பார். ஆகையால், அவ்வாறு ஒன்றிய மனவுணர்வு கொண்டிருப்பவர்கள் பின் எதற்காகப் பேசிக் கொள்ளப்போகிறார்கள்? இனி, மொழி தேவையில்லாமற் போகவே கருத்தும் தேவையில்லாமற் போகும். அக்கால் அறிவுணர்வும் ஒரே நிலைப்பட்டதாக இருக்கும்; அறிவில் வளர்ச்சியிராது; அறிவில் வளர்ச்சியில்லாமற் போமாயின், மாந்த உயிரியக்கமும் தேவையிராது; அதனால் உடலும் தேவையிராது. பிறகு பிறப்புக்கும் வேலையில்லாமற் போகும். எனவே, உடன்பாடு எவ்வாறு தேவையான ஓர் உணர்வோ, முரண்பாடும் அவ்வாறு தேவையான ஓர் உணர்வுதான்!

## நமக்கு நாமே முரண்படுதல்

இனி, உடன்பாடும், முரண்பாடும் புறவுணர்வுகளாக மட்டுமன்றி, அகவுணர்வுகளாகவும் உள்ளதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அஃதாவது, இவ்விரண்டு உணர்வுகளும் குறைந்தது இரண்டு பேர்களிடத்துத்தான் வெளிப்படும் என்றில்லை. ஒருவரிடமே கூட இவ்விரு உணர்வுகளும் செயல்படுவன. எவ்வாறெனில் ஒவ்வோரிடத்தும், ஒவ்வொரு காலத்தும், ஒவ்வொரு நிலையிலும் நமக்கு நாமே உடன்பட்டும் முரண்பட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு செயல் செய்ய முற்படும் பொழுது இது நமக்கு நன்கு புலப்படும். எந்த நிலையிலும் நமக்குள் இரு உணர்வுகள் செயல்படுகின்றன. எண்ணத்திலும், செயலிலும் நம் இருவுணர்வுகளும் எதிரும் புதிருமாகச் செயல் ஆற்றுகின்றன. ஒரு செயலுக்கு நம்மில் உள்ள இருவுணர்வுகளில் ஒன்று உடன்பட்டும், இன்னொன்று முரண்பட்டும் இயங்குவதை நாம் உணரலாம்.

வீட்டை விட்டு வெளியே புறப்படும் தேவை ஒன்று நமக்கு வந்ததாக வைத்துக் கொள்வோம், அப்பொழுது நம் உணர்வுகளுள் ஒன்று நாம் புறப்படலாம் என்று உடன்படுவதையும், ‘இப்பொழுது வேண்டாம் பிறகு

புறப்படலாம்' என்றும் அல்லது 'புறப்படத் தேவையில்லை' என்றும், முரண்பட்டு இயங்குவதையும் நாம் அறியலாம். இவ்விருவகை உணர்வுகளும் எப்பொழுதும் நம்முள் செயல்பட்டுக் கொண்டே இருப்பதால்தான், நமக்கு நாமே ஒருவகையில் நடுநிலைமையாகவும், வேகக் கட்டுப்பாட்டுடனும், அமைவாக (நிதானமாக)வும், சிந்திக்கும் திறனுடனும் இயங்க முடிகிறது. இல்லெனில், நாம் படபடவென்றும், சிலநேரங்களில் தவறாகவும், ஏதத்திற்கும் சேதத்திற்கும் ஆட்பட்டும், முட்டாள் தனமாகவும், மெத்த சோம்பலாகவும் இருந்து செயல்பட்டு விடுவோம் - என்பதை எண்ணிப் பார்த்து உணர்ந்து கொள்க.

இன்னும் நுட்பமாகக் கூற வேண்டுமெனில், இவ்விருவகை உணர்வுகளும் நமக்குள் செயல்பட வில்லையெனில், மனப்போராட்டமும், அறிவுப் போராட்டமும், செயல் போராட்டமும் நமக்குள் இல்லாமற் போகும். நம்மை வாழச் செய்வதும், இவ்வுணர்கள் தாம்! வாழ விரும்பாமல் வாழ்வை வெறுக்கச் செய்வதும் இவைதாம்! நமக்குத் துணிவை உண்டாக்குவதும், கோழைமையை ஏற்படுத்துவதும், இவைதாம்! ஒன்றை விரும்பச் செய்வதும் வெறுக்கச் செய்வதும் இவைதாம்! மொத்தத்தில் நமக்கு நாமே ஒருவகையில் நட்பாகவும், பகையாகவும் நடந்து கொள்கிறோம்.

இவ்விருவகை உணர்வுகளும் நம்முள் செயல் படவில்லையானால், நாம் அடித்து வைத்த பிள்ளையார் போல இயக்கமின்றி ஓரிடத்தில் அமர்ந்து விட வேண்டியிருக்கும். நமக்கு ஓர் எதிராளன் புறத்தே தோன்றவில்லையெனில், நம் அகத்துக்குள்ளிருந்தே அவன் தோன்றி விடுவான். இயற்கை நமக்குக் கொடுத்துள்ள வாழ்வியல் உணர்வுகளுள் இவ்வுணர்வுகளும் மிக முகாமையானவை என்று நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒன்றைச் செய்ய நம் மனம் துணிவடையும் பொழுது, நம் அறிவு அதனை எதிர்த்து நமக்கு அமைவான (நிதானமான) சிந்தனையைத் தோற்றுவிக்கிறது. ஒரு செயலில் அறிவுணர்வு

துணியும் பொழுது, மனம் அதை எதிர்க்கிறது. இரண்டும் துணிவு கொள்கிற பொழுது, உடலுணர்வு அவற்றை எதிர்க்கிறது. இவ்வாறு நமக்குள் நாமே உடன்பட்டும் முரண்பட்டும் நடந்து கொள்வது நமக்கு ஒரு வியப்பான செய்தியேயாகும்.

### உணர்வுக்கு மூன்று கால்கள்

இவ்வகையில், நம் மனம் துணியும் செயலுக்கு நம் அறிவும் உடலும் ஒப்புதல் தந்தால்தான் அச் செயல் தொடங்கும்; நடைபெறும். அது போலவே நம் அறிவு துணியும் செயல்களுக்கு நம் மனமும் உடலும் ஒப்புதல் தர வேண்டும். அது போவே, நம் உடல் துணியும் செயல்களுக்கு நம் மனமும் அறிவும் ஒப்புதல் தரவேண்டும். இம்மூன்று உணர்வுகளிலும் பெரும்பான்மையான இரண்டு உணர்வுகளின் ஒப்புதல் கிடைத்தால்தான் நாம் எதையும் செய்யத் துணிகின்றோம். அஃதாவது நமக்கு இரண்டு கால்கள்; ஆனால் நம் உணர்வுக்கு மூன்று கால்கள், இம் மூன்று கால்களும் தம்முள் உடன்பட்டு ஒரு முடிவுக்கு வந்தால்தான் நாம் ஒரு செயலைச் செய்ய முனைகிறோம்; செய்கிறோம். இந்த நிலையில் இம்மூன்று அடிப்படை உணர்வுகளும் ஒரு குடியரசு அமைப்பைப் போலவே இயங்கி, நம் வாழ்க்கையை வழி நடத்துகின்றன என்பதை நாம் நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். சில நேரங்களில் இவ்வுணர்வுப் பெரும் பான்மையுடன் நாம் செயல்பட நேர்கிறது. ஆனால் மிகச் சில நேரங்களில் இம்மூன்று உணர்வுகளும் உடன்பட்டே இயங்குகின்றன. இவ்வாறு இயங்கும் செயல்களைத்தாம் நாம் மூவுணர்வுச் செயல் - மூவுரச் செயல் - முவ்வுரச் செயல் - மும்முரச் செயல் - என்றவாறு மதிப்பிட்டுச் சொல்லிக் கொள்கிறோம். இம்மூவுணர்வுகளும் இணைந்து செய்யும் செயல் மிக வலிவானதாக மும்முரமாக இயங்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இவ்வாறு நம் அறிவுணர்வு, மனவுணர்வு, உடலுணர்வு, ஆகிய இம்மூன்று உணர்வுகளும் ஒன்றுபட்டு இயங்குகின்ற நிலையிலேயே, நாம் எண்ணுகின்ற எண்ணம் உறுதியாக அமைகின்றது; செயல் வலிவாக நிகழ்கின்றது; அறிவு தெளிவாக இயங்குகின்றது; உள்ளம் மகிழ்வாக இருக்கின்றது.

இப்படி இயங்காத நிலையில் நம் மனம் குழம்பும்; அறிவு மயங்கும்; உடல் ஊக்கம் இழக்கும். சிற்சிலகால், நாம் ஒன்றைச் செயப் பிறரால் ஏவப்படும் பொழுது, நம் மனத்திற்கு அச்செயல் பொருந்தாமல் இருப்பதை அறியலாம். அல்லது அறிவுக்கு அச் செயல் உடன்பாடில்லாமல் இருப்பது போல் உணரலாம். அல்லது நம் உடல் அச் செயல் செய்வதற்குப் பின் வாங்கலாம். ஆனால் அதைச் செய்ய நம்மைப் பிறர் கட்டாயப் படுத்துகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, நாம் அவர்களிடம், "இதைச் செய்ய என் மனம் இடந்தரவல்லை" என்கிறோம். அல்லது, "இதைச் செய்வதற்கு இப்பொழுது என் உடல் நிலை பொருந்தி வரவில்லை" என்று சொல்லி விடுகின்றோம். இந்த நிலைகளில் பிறர்க்கும் நாம் முரண்படுகிறோம்; நமக்கும் நாமே முரண்படுகின்றோம் - என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவே, ஒரு செயலைச் செய்வதற்கு நம் மூன்று உணர்வுகளும் ஒத்து உடன்பட்டுப் போதல் வேண்டும். அப்பொழுதுதான் அச்செயலைச் செய்ய நமக்கு விருப்பம் வரும்; துணிவு பிறக்கும்; அதைச் செய்யும் தெளிவும் நமக்கு உண்டாகும்; உடலிலும் ஊக்கம் தோன்றும். அப்பொழுதுதான் நாம் முவ்வுரத்துடன்- மும்முரத்துடன்- அச் செயலில் ஈடுபட முடியும். இந்த நிலையல்லாமல் நமக்கு நாமே முரண்படுவதானாலும், அல்லது பிறர்க்கு நாம் முரண்பாடு கொள்வதானாலும் அச்செயலை நாம் செய்யும் துணிவு தோன்றாது.

எஃது எப்படியேனும் உடன்பாடும் முரண்பாடும் எதிரெதிரான இரண்டு உணர்வுகள் என்பதையும், அது நமக்குள்ளும் பிறர்க்குள்ளும் தோன்றி எந்நிலையிலும் எவ்விடத்தும் வெளிப்படலாம் என்பதையும் நாம் நன்கு தெளிவுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

### மனச்சான்றும் முரண்பாடும்

இனி, இவ்விரண்டு உணர்வுகளும் நமக்குள் தோன்றும் பொழுது, அவற்றுள் ஓர் உணர்வைச் சிலர் நம் மனச்சான்று (மனச்சாட்சி) என்று கூறுவர். ஆனால், நுட்பமாக நோக்குகின்ற பொழுது 'மனச்சான்று' என்பது வேறு; நமக்குள் தோன்றும்

முரண்பாடு என்பது வேறு என்பதையும் நாம் நன்கு வேறு பிரித்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒரு செயலை நாம் துணியும் பொழுது, முதலில் அஃது அறிவால் ஏற்பட்ட துணிவா, அன்றி மனத்தால் ஏற்பட்ட துணிவா, அதுவுமன்றி உடல் வலிவால், நலத்தால் ஏற்பட்ட துணிவா என்பதையும் நாம் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்விடத்தில் இன்னொன்றையும் நாம் தெளிவு படுத்திக்கொள்ளுவது, நாம் இக்கருத்தை முழுமையாக உணர்ந்து கொள்வதற்குத் துணை செய்யும்.

எப்பொழுதுமே நம் மனத்துணிவு ஆசையினால் தோன்றும்; ஆசைக்குத் தன்னலம் அடிப்படை. எனவே நாம் நம் தனிநல நோக்கில் மட்டும் எண்ணம் கொண்டு ஒரு செயலைச் செய்யத் துணிகின்றோம் என்றால், அதற்கு அச் செயலால் கிடைக்கும் பயன்மேல் கொண்ட ஆசையே காரணமாக இருத்தல் முடியும். ஆசை மனவுணர்வை மட்டும் அடிப்படையாகக் கொண்டது. எனவே, அவ்வாசையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டே மனம் துணிவு கொள்ளுகிறது.

### அறிவும் துணிவும்

இனி, ஒரு செயலைச் செய்வதற்கு அறிவு துணிவு கொள்ளுகிறது என்று கொண்டால், அது தேவையினால் ஏற்பட்ட துணிவாக இருக்கலாம். ஒருவர்க்கு ஒரு பொருள் அல்லது ஒரு விளைவு தேவைப்படுகிறது என்று வைத்துக்கொள்ளலாம். அந்தப் பொருள் தேவையை அறிவு உணர்ந்து கொண்டு, அதன் மேல் நாட்டத்தையும் அதனடிப்படையில் துணிவையும் நமக்குக் கொடுக்கிறது.

இவ்விரண்டு உணர்வுகளையும் ஓர் எடுத்துக் காட்டின் வழியாக நாம் வேறுபடுத்தி அறிந்து கொள்வோம்.

நாம் நம் பணியிடத்திற்குச் சென்று வர நமக்கு ஒரு மிதிவண்டி தேவைப் படுவதாக வைத்துக் கொள்வோம். இத் தேவையை அறிவினால் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால், நம் கையிலுள்ள பணத்தைக் கொண்டு ஒரு

மிதிவண்டி வாங்க விரும்புவோம். நம் கையில் பணம் இல்லையானால், பிறரிடம் கடன் வாங்கியேனும் மிதிவண்டி வாங்கி விட்டுப் பிறகு நமக்குற்ற கடனை நம் வருவாயைக் கொண்டு சிறிது சிறிதாக, அடைத்து நிறைவு செய்வோம். இது முற்றிலும் அறிவின் பாற்பட்ட செயல்! இதன் வழியாகத் துணிவு கொண்டுதான் கடன் வாங்கியாகிலும் மிதிவண்டி வாங்க முற்படுகிறோம்.

ஆனால், நம்மிடம் மிதிவண்டி வாங்கப் பணம் இல்லை; அதே பொழுது நமக்கு ஒருவரும் கடன் கொடுக்கவும் முன் வரவில்லை என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது எவ்வாறேனும் நமக்கு மிதிவண்டி தேவையென்றாலும், நம்மிடம் அதை வாங்கப்பணம் இல்லையென்றாலும், பிறரும் நம்மை நம்பாமலோ அல்லது அவர்களிடம் இல்லாமையாலோ கடன் கொடுக்கவில்லை யென்றாலும், நம் தேவையை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் அறிவு அமைந்து விடுகிறது; துணிவு ஏதும் கொள்வதில்லை. ஆனால், நம் மனம் மட்டும் அத் தேவையை ஆசையாக மாற்றுகிறது. அதனால் மிதிவண்டி தேவை என்னும் உணர்வு மாறி எப்படியாகிலும் அது வேண்டும் என்று மனம் அவாவுகிறது; ஆசை கொள்ளுகிறது. அதனால் எவ்வாறேனும், அண்டை அயல் ஊர் சென்றாவது, ஒரு மிதி வண்டியைத் திருடிக் கொண்டு வந்து விட மனம் எண்ணுகிறது என்று வைத்துக் கொள்வோம். இதுவே ஆசை.

அஃதாவது நம் தேவையை அறிவு வழியில் பெறமுடியாமல், மன வழியில், நேர்மையல்லாத முறையில் நிறைவேற்றிக் கொள்ளுவது. அப்பொழுது அது பிறர்க்குரியது என்று நினையாமல் தன்னல நோக்கினால், அதை நமக்குரியதாக ஆக்கிக் கொள்ள மனம் எண்ணுகிறது. இதுதான் ஆசையின் வடிவம். அஃதாவது நமக்கு வேண்டும் என்று தேவையின் அடிப்படையில் எண்ணுவது, நிறைவேற்றுவது அறிவு. அதை எப்படியேனும், தவறான வழியில் சென்றேனும், அடைந்து விடவேண்டும் என்று நினைப்பது, அதைச் செய்யத் துணிவது ஆசை.

எனவே, ஒரு செயலுக்கான துணிவு அறிவின் பாற்பட்டதா, மனத்தின் பாற்பட்டதா என்று நாம் பிரித்துணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இவ்விடத்தில், ஆசையின் அடிப்படையில் ஒன்றைத் தவறான வழியில் செய்ய முற்படும் பொழுது, அத்தேவையை முன்னரே உணர்ந்த அறிவு, நம் மனத் துணிவைக் கண்டிக்கும் இதைத்தான் ஒரு வகையில் நாம் மனச் சான்று என்றும் கூறுகிறோம். ஆனால் மனச் சான்று என்பதற்கான முழு வடிவமும் இதுவன்று.

ஒரு செயலை நாம் தவறான நோக்கத்துடன், தவறான நோக்கத்திற்காக, தவறான வழியில் சென்று நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறோம். இது, நம் ஆசையின் துணிவு. ஆனால் அந்தச் செயலை நாம் நல்ல நோக்கத்துடன் செய்வதாகப் பிறர் நம்பும்படி சொல்கிறோம். அங்கு தான் நம் மனமே நமக்குச் சான்றாக அமைகிறது. நாம் ஒன்றை நினைத்துக் கொண்டு, வேறொரு செயலை நாம் வெளியில் உள்ளவர்களுக்குச் செய்து காட்டுகிறோம். இவ்வாறு மனம் வேறு, செயல் - வினை வேறாக இயங்கும்பொழுதுதான், நம் மனமே நமக்கு உண்மைச் சான்றாக இருக்கிறது. இதுவே மனச்சான்று. இதற்கு மாறாக நாம் நடக்கும் பொழுது தான், நாம் நம் மனச் சான்றுக்கு மாறாக நடக்கிறோம் என்று பொருளாகிறது. இப்படி மனச் சான்றை மதியாதவர்களுடன், அல்லது மனச்சான்றுக்கு மாறாக இயங்குபவர்களுடன் நாம் கனவிலும் தொடர்பு கொள்ளக்கூடாது; அவர்களால் நமக்கு என்றும் துன்பமே என்று திருக்குறள் நமக்கு அறிவுறுத்துகிறது.

> கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
> சொல்வேறு பட்டார் தொடர்பு - **(குறள் : 819)**

அறிவுக்கு இலக்கணம்

முன்பு காட்டப் பெற்ற மிதிவண்டி எடுத்துக்காட்டில், அதைத் தவறான வழியில் பெற மனம் துணிவு கொள்வதை அறிவு தடுத்துக் கூறும் உணர்வை நாம் மதித்தல் வேண்டும். ஆசையின் பாற்பட்ட துணிவு தீங்கு தருவது; துன்பம் தருவது;

அதனால் அதை அறிவு விழிப்பாக இயங்குதல் வேண்டும். அதுதான் அறிவுக்கு இலக்கணம்; அதுதான் அதற்கு அழகு.

சென்ற விடத்தான் செலவிடா தீதொரீஇ,
நன்றின்பால் உய்ப்பது அறிவு - **(குறள் : 422)**

-என்னும் திருக்குறளில் இவ்வுணர்வு விளக்கப் பெறுகிறது.

இனி, மனம், அறிவு என்னும் இரண்டு இயற்கை உணர்வுகளுக்கும் வேறாக, உடல் நலத்துடனும் வளத்துடனும் உள்ள ஒருவர், உடல் வலிவினால் மட்டும் ஊக்கம் பெற்று, ஒரு செயலைச் செய்யத் துணிவு கொள்ளலாம். இக்கால், அச்செயலை மனத்துணிவினால் செய்ய முற்பட்டோமா, அறிவுத் துணிவினால் செய்ய முற்பட்டோமா, இவையல்லாமல்

மூன்று துணிவுகள்

வெறும் உடல் வலுவினால் மட்டும் செய்ய முற்பட்டோமா - என்றவாறு பிரித்து உணரவும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். வெறும் உடல் துணிவினால் மட்டும் ஒரு செயலைச் செய்ய நாம் முற்படுவதாக வைத்துக் கொள்வோம். அக்கால் நம் உடலைவிட வலிவில் மிக்க ஒருவர் நம்மை முறியடித்து, அதைச் செய்யவிடாது நம்மைத் தடுத்துவிட்டு, அவர் செய்துவிடலாம். எனவே, மனம் துணியாமல், அறிவும் துணியாமல், வெறும் உடல் துணிவினால் மட்டும் ஒரு செயலைச் செய்ய நாம் முற்பட்டு விடுதல் கூடாது. இவையெல்லாம் நம்முடைய உடன்பாட்டையும் அதற்கெதிரான முரண்பாட்டையும் நாமே விளங்கிக் கொள்வதற்கு உதவுவதாகும்.

# 11. உங்களுக்குப் பேசத் தெரியுமா? (அறிவுச்செல்வத்தைத் தேடுங்கள்)

*நம் எல்லாருக்கும் நன்றாகப் பேசத்தெரியும்; ஆனால் நாம் எல்லாரும் ஒரே முறையாகப் பேசுவதில்லை. நம்மில் சிலர் மிகவும் நன்றாகப் பேசுகிறார்கள்; சிலர் கவர்ச்சியாகப் பேசுகிறார்கள்; சிலர் திறமையாக பேசுகிறார்கள்; இன்னும் சிலர் 'வழவழ' வென்று பேசுகிறார்கள்; சிலர் பேசுவது நமக்கு எரிச்சலைத் தருகிறது; சிலர் பேசுவது நமக்கு நகைச்சுவையாக இருக்கிறது; இன்னும் சிலர் பேசும் பொழுது நாம் அறிவு பெறுவதாக உணர்கிறோம். இன்னும் சிலர் போசும்பொழுது நாம் உணர்விழந்து, மெய்மறந்து, வேறு எதிலும் நம் கவனத்தைச் செலுத்த விடாமல், மணிக்கணக்காகக் கேட்டுக் கொண்டே உள்ளோம். இப்படி நம்மில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகப் பேசுகின்ற நிலை ஏன்? ஏன் நாம் எல்லாரும் ஒரே வகையாகப் பேசுவதில்லை? இதற்குக் காரணம் என்ன தெரியுமா? நம் எல்லாருக்கும் உள்ள அறிவும், உணர்வும் ஒரே அளவாக வளர்ந்திருக்கவில்லை.*

*நம் எல்லாருக்கும் கண், காது, மூக்கு, வாய், மெய் முதலிய ஐம்பொறிகளும் சரியாகவே அமைந்துள்ளன. நம்மில் ஒருவருக்கேனும், ஒரு காதோ, இரண்டு மூக்குகளோ, மூன்று கண்களோ, நான்கு காதுகளோ இருப்பதில்லை. எல்லாருக்குமே இரண்டு கண்கள்; இரண்டு காதுகள்தாம்! இருப்பினும் நாம் அவற்றைச் சரிவரப் பயன்படுத்துவதில்லை. நம்மில் ஒவ்வொருவருக்கும் நமக்குள் ஒவ்வொரு பொறியையும் ஒவ்வொரு வகையாகப் பயன் படுத்துகின்றோம்.*

சிலர் எதையும் சரிவரப் பார்ப்பதில்லை; மேலோட்டமாகவே பார்க்கின்றனர். சிலர் பிறர் சொல்வதை அரை குறையாகவே செவிகளில் வாங்கிக் கொள்கின்றனர். சிலர் கண்டதையும் வெறும் சுவைக்காகவே வாங்கி உணர்கின்றனர். இன்னும் சிலர் தம்மிடம் உள்ள எந்தப் பொறியையும் சரிவரப் பயன்படுத்தாமல் அதன் அதன் பெருமை, சிறப்பு, தேவை, பயன் இவற்றை உணராமல் வீணே சீரழிய விட்டு விடுகின்றனர். நம்மிடம் உள்ள ஒரு பூட்டையோ, ஒரு தூவலை (பேனாவை)யோ சரிவரப் பயன்படுத்த வில்லையானால் அவை கெட்டுப் போகின்றன. தம்தம் செயல் திறமைகளை இழக்கின்றன. அவை போலவே நம்மிடம் உள்ள பொறிகளையும் சரிவரப் பயன்படுத்த வில்லையானால் அவை தத்தமக்குள்ள நுட்ப உணர்வுகளை இழந்து சீரழிந்து போகின்றன. இந்த ஐந்து பொறிகள்தாம் நாம் இவ்வுலகில் உள்ளவற்றைச் சரிவர அறிந்துகொள்ள உதவும் உயர்ந்த, விலைமதிப்பற்ற கருவிகள்; கண்கள் குருடாகப் போனால்தான் கண்களின் பயன் நமக்குத் தெரியவரும்; காதுகள் செவிடாகப் போனால்தான் நமக்கு அவற்றின் பெருமை தெரியும்; நம் வாயிலோ, நாக்கிலோ ஏதோ நோய் வந்து, உண்ண முடியாமலும் பேச முடியாமலும் போனால்தான் நாம் வாயின் சிறப்பையும், நாக்கின் பயனையும் உணரமுடியும்.

ஆனால், நாம் நன்றாகப் பேசுவதற்கும் இவற்றிற்கும் என்ன தொடர்பு என்று தெரியாமல் விழிக்கின்றீர்கள் இல்லை? நாம் நமக்குள்ள ஒவ்வொரு பொறியின் வழியாகவும் பெறுகின்ற அறிவெல்லாவற்றையும் சேர்த்த மொத்தம்தான் நமக்குள்ள அறிவு ஆகும். இந்த மொத்தம் நம் எல்லாருக்கும் ஒரே அளவாக இருப்பதில்லை. நம் வகுப்பில் உள்ள பிள்ளைகளில் எல்லாருக்கும் தேர்வில் ஒரே மதிப்பெண்ணா கிடைக்கின்றது? ஒவ்வொருவனும் ஒவ்வோர் எண் பெறுகின்றான். ஒரு பாடத்தில் இருவருடைய எண் ஒன்றாக இருந்தாலும் பிற பாடங்களில் வேறுபடுகின்றன. மொத்த எண்களைப் பொறுத்தமட்டிலோ நிறைய வேறுபாடு. இவற்றைப் போலவேதான் நமக்குள்ள மொத்த அறிவும் வேறுபட்டே

இருக்கின்றன. அந்த மொத்த அறிவுக்குத் தக்கபடி தான் நாம் பேசுகின்றோம்; செய்கின்றோம்; பிற எல்லாவற்றிலும் ஈடுபடுகின்றோம்.

பெரும்பாலும் நாம் பேசுகின்ற பேச்சு வழியாகவே தான் நாம் பிற பொறிகளின் வழியாகப் பெற்ற அறிவின் அளவு, திறன் முதலியன வெறிப்படுகின்றனவாகையால், நம் ஒவ்வொருவருடைய பேச்சு அமைப்பும், திறனும் முறையும். இனிமையும் வேறுபாடாகவே இருக்கின்றன. எனவே ஒருவன் பேசுகின்ற பேச்சைக் கேட்டே அவன் அறிவுள்ளவனா, அல்லது மூடனா என்றும், பண்புள்ளவனா அல்லது பண்பற்றவனா என்றும், சுறுசுறுப்புள்ளவனா அல்லது சோம்பேறியா என்றும் நாம் கண்டு கொள்ளலாம். இனி, நம்மினும் மிக்க அறிவுள்ளவர்கள் நாம் பேசாமல் இருப்பினும் நம்மை யார் என்று கண்டுகொள்ள முடியும்.

நாம் ஒரு பையனைக் கடைக்கு அனுப்பிக் "கத்திரிக்காய் விற்கிறதா; பார்த்துவா" - என்று கூறுகிறோம். அவர் உடனே போய் வந்து, "இல்லை" என்று சொல்லுகின்றான். அவனை "அப்படியானால் முருங்கைக்காய் விற்கிறதா?" என்று கேட்கின்றோம். அவர், "நான் அதைப் பார்க்கவில்லையே" என்று விடை கூறுகின்றான். நாம் அவன் கெட்டிக்காரன் இல்லை என்று முடிவுகட்டி விடுகின்றோம். ஏன்? அவன் கத்திரிக்காயைத் தேடுகின்ற பொழுதே முருங்கைக்காயோ பிற காய்களோ அவன் கண்களில் படலாம் இல்லையா? அவ்வாறு கண்களில் பட்ட காய்கறிகளை அவன் மூளையில் பதிய வைத்துக் கொள்ளவில்லை. அதனால்தான் அவனுக்குக் கத்தரிக்காயைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை.

அவனை அவ்வாறு கேட்டுக்கொண்டிருக்கும் பொழுதே அவன் மாமன் அங்கு வந்து, "என்னடா, வென்றி! காய்கறிக்கடையில் உன்னைப் பார்த்தேன்; பலமுறை 'வென்றி, வென்றி' என்று கூப்பிட்டேன், திரும்பிப் பாராமல் வந்து விட்டாயே!" என்கிறார். அவனைப் பற்றி இன்னும் என்ன நினைப்போம். காய்கறிக்கடையில் உள்ள பொழுது அவன் கண்களும் சரியாக வேலை செய்யவில்லை; காதுகளும் சரியாக

வேலைசெய்யவில்லை, என்றுதானே நினைப்போம். அதனால்தானே வென்றியின் மூளையில் செய்திகளே நிறையப் பதியவில்லை! நம் மூளைதான் நமக்குப் பணப்பெட்டி, கருவூலம். அந்தப் பெட்டியில் நம் முன் எதிர்ப்படும் செல்வங்களையெல்லாம் வாரிப்போட நமக்கு ஐந்து வேலைக்காரர்கள், அவர்கள்தாம் கண், மூக்கு, காது, வாய், மெய்! இவர்கள் வாரி வாரி மூளைப்பெட்டியில் போட்டால்தான் மூளை நிறையும். மூளை நிறைந்தால்தான் அதில் உள்ள செல்வங்களை நாமும் பயன்படுத்த முடியும்; பிறர்க்கும் கொடுக்க முடியும். வெறும் காலிப்பெட்டியாக இருந்தால், நம் தேவைக்கும் பயன்படாது; பிறர் தேவைக்கும் கொடுக்க முடியாது. இனி, காலிப் பெட்டியாக இருக்கக்கூடாதே என்பதற்காக, கல், மண், செத்தை, சருகு இவற்றையெல்லாம் வாரிப்போட்டு நிரப்புவோமா? அதுவும் கூடாது. தேவையான விலை மதிப்பற்ற காட்சிகளையோ, கருத்துகளையோதாம் நம் மூளைப்பெட்டியில் போட்டு நிரப்பலாம். அவைதாம் நமக்கு உதவும். நமக்கு எதிர்ப்படும் செய்திகள். கருத்துகள் சில காசுகள் போன்றவை; சில உருபாக்கள் போன்றவை; இன்னும் சில பொன் போன்றவை, அவற்றில் மிகச் சிலவோ விலைமதிப்பற்ற முத்து, பவழம், காழம் (வைரம்), மாணிக்கம் போன்றவை. உருபாக்கள் மிக மிகக் காசுகளை அகற்றிவிடவேண்டும். பொன் மிக மிக உருபாக்களை அகற்றிவிட வேண்டும். மணிகள் மிகமிக, பொன்னையும் அப்புறப்படுத்திட வேண்டும். இந்த வகையில் நம் மூளைப்பெட்டியை நாம் பாதுகாத்து வந்தால், நாம் அறிவுச் செல்வம் படைத்தவர்கள் ஆவோம் இல்லையா?

தேடிய அறிவுச் செல்வத்தை நாமே வைத்துக்கொள்ளாமல் அவற்றைத் தேவையான பிறருக்கும் கொடுக்க வேண்டும். நல்ல முத்துபோன்ற கருத்துகள் இருக்க, காசுகளை மட்டும் கொடுக்கக்கூடாது. நாம் இப்படிக்கொடுக்கும் அளவுக்கு வளர வேண்டுமானால், நாம் எவ்வளவு மிகுதியாகச் சேர்க்கவேண்டும் தெரியுமா? இப்படிச் சேர்க்காதவன் மூளை வறுமை உள்ளவன்; அறிவு ஏழை. அவனால் நன்றாகப் பேசமுடியாது. பேசினாலும் கல், மண், சருகுபோல அவற்றால் யாருக்கும் பயன் விளையாது.

அவனால் இவ்வுலகில் எந்த வினையையும் நன்றாகச் செய்ய முடியாது. அவன் நிலத்துக்குக் கனம், மக்களுள் பதர்; காய்க்காத மரம்; நடைபிணம். இருந்தும் ஒன்றுதான்; இறந்தும் ஒன்றுதான். அவனால் அவனுக்கும் பயனில்லை; பிறர்க்கும் பயனில்லை.

எனவே மூளைப் பெட்டியைச் சுறுசுறுப்புடன் அறிவுச் செல்வத்தைத் தேடி இப்பொழுதிலிருந்தே நிரப்பிக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் சிறந்த பேச்சாளனாக முடியும்; எழுத்தாளராக முடியும்; பாவலராக முடியும்; எடிசனாக முடியும்; ஐன்சுடின் ஆக முடியும், இல்லையானால் நீங்கள் ஒரு கல்; மரம்; கழுதை; குதிரையாகத்தான் இருப்பீர்கள்!

# 12. நம் அளவில் நாம்!

உலகம் இன்று ஓர் ஆரவாரமான சூழலில் வளர்ந்து கொண்டு இருக்கிறது. அறிவியல் வளர்ச்சி என்பது எங்கும் எதிலும் ஊடுருவி வருகிறது. இப்பொழுதுள்ள புறச்சூழ்நிலைகள் நம் அறிவையும் மனத்தையும் கலக்கமுறச் செய்கின்றன. நாம் கற்றுக் கொள்வது வேறு; நடப்பது வேறாக இருந்து வருகின்றது.

*கற்பதும் நடப்பதும்*

நாம் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்று கற்பிக்கப் பெறுகிறோம். ஆனால், உலக நடைமுறையில் உண்மைக்கும் நேர்மைக்கும் வரவேற்பு இருப்பதாகத் தெரிவதில்லை.

ஒழுக்கமுடனும் பண்புடனும் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பெறுகிறோம். ஆனால் ஒழுக்கமுடனும் பண்புடனும் எவரும் நடந்து கொள்வதை நாம் பார்க்க முடிவதில்லை. அவரவர்கள் போக்கிலேயே அனைவரும் நடந்து கொள்வது போல் தெரிகிறது.

பொய் பேசுவது, பிறர் பொருளைத் திருடுவது குற்றம் என்று உணர்த்தப் பெறுகிறோம்; ஆனால், எல்லாரும் பொய் பேசுவதாகவும் பிறர் பொருளுக்கே ஆசைப்படுவதாகவும் நாம் உணர்கிறோம். கற்றுக் கொள்வது, பிறருக்கு அறிவுறுத்துவது ஒன்றாக உள்ளது; ஆனால் அனைவரும் நடப்பது வேறாக இருக்கிறதாக நாம் அறிகிறோம்.

*அறிவுத் தடுமாற்றம்*

இந்தச் சூழ்நிலைகளால் நம் அறிவு தடுமாறிப் போகிறது, மனம் சாம்பிப் போகிறது ! சோர்வு அடைகிறது ! எனவே, நாம் உலக

நடைமுறைகளில் நம்பிக்கை இழக்கிறோம்; வெறுப்புக் கொள்கிறோம். நம்மையறியாமல் நாமும் நடை தளர்கிறோம். நேர்மையை விட்டு விலகுகிறோம். உண்மைக்கு மாறாக நடந்து கொள்ள முற்படுகிறோம். ஒழுக்கமாகவும் பண்பாடாகவும் நாம் மட்டும் ஏன் நடந்து கொள்ள வேண்டும் என்று நம் மனத்தில் ஓர் உறுத்தல் ஏற்படுகிறது. இந்த உறுத்தலால், எண்ணத் தளர்ச்சியால், என்றைக்கோ ஒரு நாள் படிப்படியாக, நாம் நம்மை நிலைப்படுத்திக் கொள்ள முடியாமல், நாமும் இந்த ஆரவாரமான உலகியல் சூழலுக்கு ஆட்பட்டு விடுகிறோம்; பொய்யாக நடக்கத் தொடங்குகிறோம்; நேர்மையாக உண்மையாக இருக்க முடியாமல் குறுக்கு வழிகளில் பாய்கிறோம்.

இவ்வாறு நம் தனி மாந்த நல்லுணர்வுகள் சூழ்நிலைகளால் கெடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்கிறோம். உலகச் சூழ்நிலைகளில், திறந்த அறிவியல் கண்ணோட்டத்தில், நம் நோக்குகளும் போக்குகளும், தட்டுத்தடுமாறித் தடம் வேறுபட்டுப் போய் விடுகின்றன. ஆனால், இதற்கும், நம் மேல் நாம் குறை கூறிக்கொள்ள விரும்பாமல், அல்லது ஒப்பாமல், இவ்வுலகத்தையே குறை சொல்லிப் பழியை அதன் மீதே போட்டு விடுகிறோம். இந் நிலை, நம் அனைவர் வாழ்விலும் நிகழ்ந்து வருகிறது.

### தீர்வு என்ன ?

“இவற்றுக்குத் தீர்வு என்ன ? வளர்ந்து வரும் இத்தகைய அறிவுத் தாக்கமும் மனத்தாக்கமும் ஏற்படுகின்ற சூழ்நிலைகளில், நாம் எப்படித்தான் நடந்து கொள்வது ? இன்றைய நிலையில் நாம் நேர்மையாகவும், பண்புடனும், உண்மை யாகவும், ஒழுக்கத்துடனும் இருக்க இயலுமா ? அவ்வாறு வாழ்வது நடைமுறைக்குப் பொருந்தி வருமா ?” என்றெல்லாம் நம் சிந்தனை அலைபாய்கிறது. பெரியவர்களை விடச் சிறுவர் சிறுமியரிடம், குறிப்பாக மாணவ - மாணவியரிடம் இவ்வெண்ண அலைவுகள் தலையோங்கி நிற்கின்றதை - நாம் நேரடியாக இல்லையேனும் மறைமுகமாகவாவது காண்கிறோம். இந்நிலை அப்படியே வளருமானால் உலக நிலைகள் என்னாவது?

*சான்றோரின் அறிவுரைகள்*

இப்படிப்பட்ட மன அசைவு நிலைகளில்தாம் நாம் நமக்கு முன்வாழ்ந்து சென்ற சான்றோர்களின் அறிவுரைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதுடன், அவற்றை வழிகாட்டியாகவும் கொள்ளுதல் வேண்டும்.

உலகம் இன்று மட்டும் இவ்வாறில்லை. அதன் மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப, அதன் நன்மை, தீமைகளும் வளரவே செய்யும். முன்னர் இவை அக்கால மக்களின், அறிவு, பொதுப்பண்பு, மனவளர்ச்சி ஆகியவற்றின் நடைமுறைகளுக்கேற்ப, குறைந்திருந்தன போலும், இப்பொழுதோ அவை அளவுக்கு மீறி வளர்ந்து விட்டன போலும் நமக்குப் படுகின்றன. ஆனால், உண்மை அதுவன்று. உலகிலுள்ள மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப அவையும் வளர்ந்திருக்கின்றன. அவ்வளவுதான்!

உலகில் எப்பொழுதும் தீமைகள் மிகுந்தே தோன்றும். நன்மை உணர்வுகள் குறைந்தே இருக்கும். இதனால் மருட்சியடையவோ, மனம் மயக்கம் கொள்ளவோ தேவையில்லை. உலகில் நெல் விளைவைவிடப் புல்விளைவே மிகுதி. செடிகளில் மலர்களை விட, இலைகளே மிகுதியாக இருப்பது போலும், உலகில் விளைநிலங்களை விட விளையாத களர் நிலங்களே மிகுதியாக இருப்பது போலும், உலகில் தீமையுணர்வுகளே மிகுதியும் இருக்கும். ஆனால், அவை, இப்பொழுதுள்ள அறிவு வளர்ச்சிக்கு ஏற்பவும், உணவுப் போட்டிகளுக்கு ஏற்பவும் மிகுந்திருப்பன போலும் நமக்குத் தெரிகின்றன. மிகுந்து தோன்றுவதாலேயே தீமைகள் என்றும் நன்மைகளாகி விடா. பால் விளைவு குறைந்து விடுவதாலேயே நஞ்சு என்றும் பாலாகி விடாது என்பதை நாம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

கடைகளில் அனைத்துக் காய்கறிகளும் விற்கும். அவற்றுள் பருவ நிலைகளுக்கு ஏற்ப, சில காய்கறிகள் மிகுதியாகவும் விற்பனைக்கு வரும். காய்கறிகள் மிகுந்தும் குறைந்தும் விளைந்து விற்பனைக்கு வந்துள்ளன என்பதால், நமக்கு ஏற்ற காய்கறிகளை விட்டுவிட்டு, ஏற்காத நம் உடலுக்குப் பொருந்தாத காய்கறிகளை நாம் வாங்குவோமா என்பதை

எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்குத் தீராத தண்ணீர் விடாய்(தாகம்) என்பதற்காகச் சாய்கடை நீரையோ கடல் நீரையோ குடித்து விடுவோமா?

## நமக்கென்று தனித்தன்மை

இவற்றிலிருந்து இயற்கையான ஒரு மனவியல் உண்மையை நாம் உணர்ந்து கொள்வது எளிது. அஃதாவது, நம்மைச் சுற்றிலும் உள்ள சூழ்நிலை எவ்வளவுதான் நமக்கு மாறுபட்டதாக இருந்தாலும் நமக்கென்று உள்ள தனித்தன்மையை, மனநிலையை நமக்குச்சரியென்று படும் அறிவு நிலையை விட்டுவிட மாட்டோம். அவ்வாறு நம் மனம் இசைந்து விடுவதில்லை.

எனவே, தாறுமாறாக வளர்ந்துவரும் அறிவியல் வளர்ச்சியிலும், போலி நாகரிகக் கூறுகளாலும், மாந்தக் கேடுகளாலும் கால நிலையும், இடநிலைகளும், செயல் நிலைகளும் எவ்வளவுதாம், மாறுபட்டனவாக விளங்கினாலும், நம் உள்ளுணர்வுகளையே தாக்குகின்ற அளவுக்கு வலிந்து நின்றாலும், நாம் நமக்கென்று உள்ள நல்ல தன்மைகளை அழித்துக் கொள்ள மாட்டோம். அவ்வாறு அழித்துக் கொள்ளவும் வேண்டியதில்லை. இதைத்தான் திருக்குறள் வேறு எந்த நூல்களையும்விட நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது.

## ஒழுகத்தின் ஒல்கார்

சுற்றுச் சூழல்களும், காலச் சூழலும் நமக்கு மாறுபட்டனவாகவே இருப்பினும், நாம் கடைப்பிடித்து வரும், அல்லது நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கற்பிக்கப் பெற்ற நல்ல நடைமுறைகளை, ஒழுகலாறுகளைத் தவிர்த்து அல்லது கைநெகிழ விட்டு இழுக்கமான அல்லது தீய அல்லது நமக்கும் பிறர்க்கும் கேடுதருகின்ற நடைமுறைகளை நாம் கடைப்பிடிக்க முயன்றால், அதனால் பெரிய தீங்குகளே நேருமேயன்றி, நன்மைகள் வரா. எனவே உறுதியான உள்ளமுடைய உரவோர்கள், எந்தச் சூழ்நிலையிலும் அவ்வொழுகலாறுகளைக் கைவிட மாட்டார்கள்- என்பது திருக்குறள்.

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர், இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து. (குறள் : 136)

இனி, மேலே கூறிய திருக்குறள், மனமயக்கத்தால், 'தீயவை பெருகியுள்ளனவே' என்னும் மனக்கோட்டத்தால் எழுகிற உணர்வுபற்றியது.

இந்நிலை போலல்லாமல், நேர்மை, உண்மை, ஒழுக்கம், ஆகியவற்றை, நம்மைச் சுற்றியுள்ள மாறுபட்ட சூழ்நிலைகளில் கடைப்பிடிக்கும் பொழுது நமக்குப் பலவாறான எதிர்த்தாக்கங்களும் துன்பங்களும் வரும். ஆனால், அவற்றுக்காகக் கூட, தாம் மேற்கொண்ட நல்லியல்புகளைத் தெளிவான அறிவுடையவர்கள் கைவிட்டுவிட மாட்டார்கள் - என்பது இன்னொரு திருக்குறள் கருத்து.

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்குற்ற காட்சி யவர். (குறள் : 654)

எனவே, உலகம் எப்படியிருந்தாலும், நம்மைச் சுற்றிலும், எவ்வகையான நடைமுறைக் கோளாறுகள் ஏற்பட்டாலும், நாம் அவற்றால் எவ்வகையான அறிவு, மனத் தாக்கங்களைப் பெற்றாலும், அவ்வாறான சூழல்களில் நாம் கடைப்பிடிக்கின்ற கொள்கை, நேர்மை, உண்மை, ஒழுக்கம், பிற நற்பண்பியல்புகள் முதலியவற்றால், துன்பங்களே விளைந்தாலும், நமக்குள்ள மனச்சிறப்பியல்புகளையும், அறிவுத் தெளிவு நலன்களையும் நாம் கைவிட்டு விடவும் கூடாது.

### நாம் நாமாகவே இருத்தல்

ஏனெனில் என்றும் உயர்ச்சி உயர்ச்சிதான்! தாழ்ச்சி தாழ்ச்சிதான்! அதேபோல் எந்தக் கால, இட, ஆரவாரச் சூழல்களிலும் நாம் நாமாகவே இருத்தல் வேண்டும்; அஃதாவது எப்பொழுதும் நம் அளவில்நாம் தாம்; பிறராக ஆகிவிடக்கூடாது - என்பவற்றை என்றென்றும் நம் உள்ளத்தில் அறிவில் நிலையாக இருத்தி வைத்து கொள்ள வேண்டும்!

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (குறள் : 964)

# 13. நாணம் – வெட்கம்!

உலகம் என்பது பல செயற்பாடுகளை நிலைக்களனாகக் கொண்டது. இங்குப் பலவகையான நன்கு வளர்ச்சி பெறாத சிற்றுயிர் இனங்களும், நன்கு வளர்ச்சி பெற்ற - சிந்தனையாற்றல், செயலாற்றல் மிகுந்த - மாந்தர்களான பேருயிர் இனங்களும் உயிர் வாழ்ந்து கொண்டிருப் பதாலேயே வாழ்க்கை முறைகளும் அவற்றுக்கான செயற்பாடுகளும் பல்வேறு வகைப்பட்டனவாக உள்ளன.

## அறிவு, மனம், உடல்

ஒரே உயிரினத்துள்ளே கூட, நன்கு வளர்ச்சியுற்ற - அஃதாவது அறிவு நிலையிலும், மனநிலையிலும், உடல் இயக்கத்திலும் மேம்பட்டு விளங்கும் - உயிர்களும் உள்ளன; அவற்றில் வளர்ச்சியுறாத உயிர்களும் உள்ளன. குறிப்பாக, மாந்தர்க்குள்ளேயே இம்மூன்று வகையாலும் சிறந்தும் சிறவாமலும் விளங்குகின்றவர்கள் பலரும் மிகப்பலரும் ஆவார்.

மக்களும், மேற்சொன்ன அறிவு, மனம், உடல் ஆகிய முக்கூறுகளிலும் சிறப்புற்று விளங்குகின்றவர்களுக்கும், அவை சிறப்புற்று விளங்காதவர்களுக்கும் இடையில் உள்ள பல்வேறு வகைப்பட்ட வேறுபாடுகளுக்கும் ஓர் அடிப்படையான மனவுணர்வு உண்டு என்பார் திருவள்ளுவர். அந்த மனவுணர்வுதான் மாந்தருடைய சிறந்த வளர்ச்சிக்கும் வளர்ச்சியின்மைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு என்பது அவர் கருத்து. ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால் அவர் கருத்து மிகச் சரியாகவே இருப்பதை நாம் உணரலாம். அவர் கருத்துப்படி அந்த அடிப்படை வேறுபாடு என்ன? அதுதான் நாணம் - வெட்கம்!

## நாணமும் வெட்கமும்

நாணம் - வெட்கம் - என்னும் உணர்வைப் பொதுவாக ஏதோ ஒருவகை எளிய மனவுணர்வு என்றே நாம் கருதுகிறோம். சிலர் நாணத்தைப் பற்றியே கவலைப் படுவதில்லை. இன்னும் சிலர் அது தேவையற்ற உணர்வு என்று கூடக் கருதுவார்கள். பலர் அது பெண்களுக்கான உணர்வு என்றே கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் திருவள்ளுவப் பொருமான் அவ்வுணர்வுதான் நம்மை மேற்கூறிய மூவகைக் கூறுகளிலும் மேம்பாடடையச் செய்கின்ற ஓர் உணர்வு என்று சிறப்பித்துக் கூறுவார்.

*ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;*
*நாண்உடைமை மாந்தர் சிறப்பு.* **(குறள் : 1012)**

இனி, இத்துடன் நில்லாது, நாணம் இல்லாதவர் எவரேனும் இருப்பார்களாயின், அவர்கள் உயிரில்லாமல், வெறும் நூலினால் கட்டி இயக்கப்படும் பாவை (பொம்மை) போன்றவர்கள் என்பார். (இக்காலத்தில், கம்பிச் சுருளால் (Spring action) ஆடும், அசையும், ஓடும், பேசும் விளையாட்டுப் பொம்மைகளைப் போன்றவர்கள் எனலாம்.).

*நாண்அகத் தில்லார் இயக்கம், மரப்பாவை*
*நாணால் உயிர்மருட்டி யற்று.* **(குறள : 1020)**

## அனைவருக்கும் நாணம் வேண்டும்!

இனி, நாணம் என்னும் உணர்வு ஆண்களுக்குத் தேவையில்லை; பெண்களுக்குத்தான் தேவை - என்பதாகச் சிலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் திருவள்ளுவப் பெருந்தகை அதையும் விளக்கிப், பெண்களுக்கு இருக்க வேண்டிய நாணம் - வெட்கம் என்பது வேறு; ஆண், பெண் ஆகிய மக்கள் அனைவர்க்குமே சிறப்பாக இருக்கவேண்டிய நாணம் என்பது வேறு-என்று கூறுவார்.

*கருமத்தால் நாணுதல் நாணு; திருநுதல்*
*நல்லவர் நாணுப் பிற.* **(குறள் : 1110)**

இத் திருக்குறளில், செயலால் நாணுவதே நாணம் என்றும் அஃது செயலுக்குரிய எல்லாரிடத்திலும் இருக்கவேண்டுவதே -

என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறுவதோடு அமையாது, பெண்கள் நாணத்திற்கும், ஆண், பெண் அனைவர்க்கும் இருக்கவேண்டிய நாணத்திற்கும் உள்ள வேறுபாட்டையும் விளக்குகிறார். பெண்களிடத்தில் இருக்கவேண்டிய நாணம் கூட, பெண்கள் அனைவரிடமும் இருப்பதில்லை; நல்ல பண்புள்ள பெண்களிடம்தான் இருக்கிறது; பண்பற்ற பெண்களிடம் அதைக் காண இயலுவதில்லை என்கிறார்.

### மனத்தின் அளவானது

பெண்களுக்கே உரிய நாணம் என்பது உடல் அளவானது. ஆனால் அனைவர்க்கும் இருக்கவேண்டிய நாணம் என்பது மனத்தின் அளவானது. எனவேதான், நாணமற்றவர்களைப் பற்றிக் கூறும் பொழுது, நாண், அகத்தில் இல்லாதவர்கள்- என்று குறிப்பிடுகிறார். இதனால், பெண்களுக்குரிய நாணம் உடலில் தோன்றியிருக்கும் தன்மையது என்பதை உணர்த்தாமல் உணர்த்துகிறார், பேராசான்!

இனி, மாந்தர் எல்லாருக்கும் இருக்க வேண்டியதாக மட்டும் இன்றி, மக்களுக்கும் வேறு உயிர்களுக்கும் இருக்கின்ற உயிருணர்வுகளில், பிறவற்றுக்கில்லாமல், மக்களினத்துக்கே உள்ள ஒரே சிறப்பான உணர்வு நாணமே என்று அவர் ஏன் குறிப்பிடுகின்றார்?

பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் நாணம் என்னும் உணர்வு இல்லை. அவை உடலாலும், உள்ளத்தாலும் நாணுவது, வெட்கப்படுவது இல்லை. அவற்றுக்கு உடலைப்போல் உள்ளம் வளர்ந்திருக்க வில்லையானாலும், உடலால் கூட அவை நாணுவதில்லை. இஃது, அவை உடை உடுக்காமையாலும், எல்லாருக்கும் இடையிலும் அவை எல்லாச் செயல்களையும் செய்வதாலும் விளங்குகிறது. உடலால் நாணாத ஒருவர் உள்ளத்தால் எவ்வாறு நாண முடியும்? இனி, அதற்கு மேலும் அறிவால் எவ்வாறு நாணுவது?

### வெட்கம் - நாணம் வேறுபாடு

உடலால் நாணுவது வெட்கம். அஃது இயற்கையாகவே நல்ல பெண்களிடம் காணப்பெறுவது. ஆண்களிடம்

காணப்பெறாதது; காணக்கூடாதது. அவர்களுக்கு இவ்வுடல் வெட்கம் வேண்டாதது; காரணம் அவர்கள் வெளியுலகத் தொடர்பும் வீரமும் கொண்டு வினையாற்ற வேண்டியிருப்பதால் - அவ்வுணர்வு அவர்களுக்கு ஒரு செயல் தடையாக இருக்கும் என்பதால், இயற்கையிலேயே அவ்வுடல் அளவான வெட்கம் தேவையில்லை என்றாயிற்று.

இனி, உள்ளத்தால் வெட்குவது நாணம். இஃது மக்கள் உயிர்களுக்கே பொதுவானதும், சிறப்பானதும், அவர்களை வளர்ச்சியுறாத கீழ்நிலை உயிர்களினின்று வேறு பிரிப்பதும் ஆகும். எனவே நாணமுறாதவர்கள் மக்கள் உயிர்களிலேயே சிறப்பற்றவர்கள். இனி, இவ் வுள்ள நாணுதலும் தாம் செய்யும் அல்லது செய்யாமல் விடும் கருமத்தின் - செயலின் - பொருட்டாகவே உள்ளத்தில் தோன்றும் என்க.

அறிவால் நாணுவது அழகு

இனி, அறிவால் நாணுவது சான்றாண்மை. சான்றாண்மை உடைய அறிவாளர்கள், அறிவால் நாணுவது அவர்களுக்கு ஓர் அழகு, பெருமிதம் என்பார் திருவள்ளுவர்.

> அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு; அஃதின்றேல்
> பிணியன்றோ பீடு நடை ? (குறள் : 1014)

நாணுடைமை அறிவுடைய சான்றோர்க்கு அழகும், பெருமிதமும் மட்டும் அன்று; அப்படிப்பட்டவர்கள் தம் செயலுக்கு நாணாமற் போவார்களாயின், அவர்களுக்கு அந்நிலை ஒரு நோயும் ஆகியும், அவர்களின் பெருமிதத்தால் ஏற்படும் பீடுக்கு ஓர் இழுக்கையும் சேர்த்துவிடும் என்கிறார், அப் பேராசான். ஒரு பிணியாளி எவ்வாறு மற்றவர்க்கு மருத்துவனாக ஆக முடியாதோ, தானும் நலமாக இருக்க முடியாதோ, அவ்வாறே, அறிவுள்ளவர்கள், அறிவு நாணம் கொள்ள முடியாமற் போனால், பிறருக்கும் நலம் செய்விக்க முடியாது; தாமும் நலத்தோடு வாழ முடியாது என்பது அவர் கூறும் கருத்து.

பிறர் செயலால் நாணமடைவது.

இனி, அறிவுடைய சான்றோர்கள், அறிவால் நாணம் உடையவர்களாக இருப்பதால், இன்னொரு சிறப்பும் உள்ளது. அஃதென்ன வெனில், மற்றவர்கள் தங்கள் தவறான செயல்களுக்கு மட்டுமே நாணுவார்ககள். அறிவுள்ள வர்களோ, தம்முடன் சேர்ந்த பிறருடைய செயல்களுக்காகவும் நாணுவார்கள், என்கிறார், பேராசான். அஃதாவது, பிறர் தவறான, அல்லது வெட்கங்கெட்ட செயல்களைச் செய்வார்களாயின், தாம் அவர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கையில், அவர்களை அவ்வாறு தவறு செய்யும் படி - கீழ்மையைச் செய்யும்படி விட்டு விட்டோமே என்று அறிவுள்ளவர்கள் நாணுவார்களாம். ஆசிரியர் கண்முன்னரேயே மாணவன் தவறு செய்தால், அத் தவறு எப்படி ஆசிரியரை நாணச் செய்யுமோ, சான்றோர்கள் - அறிஞர்கள் உள்ள இடத்தில், காலத்தில், கூட்டத்தில் - அவர்களுடன் சேர்ந்திருப்பவர்கள் செய்யும் தவறு, அவ்வறிஞர்களையும் நாணும்படி செய்யும் என்கிறார், திருவள்ளுவப் பெருந்தகை!

> பிறர்பழியும் தம்பழியும் நாணுவர், நாணுக்(கு)
> உறைபதி என்னும் உலகு. (குறள் : 1015)

அறத்தின் நாணம்

திருவள்ளுவர் இதோடு நிற்கவில்லை. அவ்வாறு பிறரும் நாணவில்லை. தானும் நாணவில்லை. அப்பொழுது என்ன நடக்கும்? அறம் நாணும் என்கிறார் ஆசான்.

> பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
> அறம்நாணத் தக்க துடைத்து. (குறள் : 1018)

இவ்விடத்தில் அறம் என்பது இயற்கையின் நடைமுறையை - அஃதாவது படைத்துக் காத்து, அழிக்கும் இயற்கையை. இயற்கையறம் எதற்கு நாணுதல் வேண்டும்? ‘ஐயகோ, இப்படிப்பட்ட நாணமற்றவர்கள் - வெட்கமில்லாத கடையரைப்போய், நாம் மக்களாய்ப் படைத்தோமே’ என்று நாணும் என்கிறார் பேராசான்.

இவ்வாறு உடலாலும், உள்ளத்தாலும், அறிவாலும் நாணத்தக்க நாண உணர்வு ஒருவர்க்கு ஏன் வேண்டும்? அதனால்

என்ன பயன்? யாருக்கு நன்மை? வெறும் உயிர்க் கட்டுப்பாட்டுக்காக மட்டும் நாணம் வேண்டும் என்கிறாரா, திருவள்ளுவர்? இல்லை. நாணம் தான் வளர்ந்த - மலர்ச்சியுற்ற உயிர்களுக்கு அடையாளமாக விளங்கும் ஓர் உயிர் உணர்வு. மக்கள் உயிர்ப்பிறவியைச் சிறப்படையச் செய்கின்ற ஒரு நல்லுணர்வு. எப்படி?

'நாம் இம் மக்களினத்துக்குப் பொருந்தாத செயலைச் செய்கின்றோமே, - என்றும்,

'இவ்வாறு பயனற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றோமே' - என்றும்,

'பிறர்க்கு நம்மால் ஏதும் பயனின்றிப் பறவைகள் விலங்குகள் போல், உண்பதும், திரிவதும், உடுப்பதும், உறங்குவதுமாக இருக்கின்றோமே' - என்றும்,

'நம்மையொத்த பிறரும் கல்விகற்று, முயன்று, வாழ்க்கையைப் பொருளுடையதாக்கி, ஒரு கொள்கைக்காக வாழ்ந்து கொண்டிருக்கையில் - நாம் மட்டும், எவ்வகை நோக்கமுமின்றி, வறிதே நாள்கள் கழியுமாறு, இவ்வரிய வாழ்வைப் பாழாக்குகின்றோமே' - என்றும்,

உள்ளத்தாலும் அறிவாலும் நாம் நாணினால் தான், நமக்கு முயற்சி தோன்றும்; ஊக்கம் பிறக்கும்; வீரம்வரும்; பிறருடன் நாமும் பலவாறான அரிய செயல்களைச் செய்யும் ஆர்வம் சுரக்கும்; பெருமை மிகும்; வினை செய்கின்ற பெருமிதம் குமிழியிடும்.

அந்த நாணம் தோன்றவில்லையெனில் எவ்வகையான நல்லுணர்வும் முகிழ்க்காது; நல்வினையும் முளைவிடாது. பிறகு, கல்போல், புல்போல், செடிகொடிகளைப் போல், இன்னும் கொஞ்சம் உயர்வாகச் சொல்ல வேண்டுமானால், பறவையைப்போல், அல்லது விலங்குகளைப் போல், நாமும் வாழ்ந்து சாக வேண்டியது தான்.

*பிறகு மக்கள் வாழ்க்கை எதற்கு, நாம் அவர்களுடன் வந்து பிறந்ததற்காக, நம் இனம் நம்மை ஏசும்; 'வெட்கம் கெட்ட இவன் எதற்குத்தான் நம் இனத்தில் வந்து பிறந்தானோ? எங்கோ பிறக்க வேண்டியவன் இங்கு வந்து பிறந்தானே! நாணமற்ற இவன் தற்கொலை செய்து கொண்டு சாக வேண்டியதுதானே! எதற்காக கூறுகெட்டு, கொள்கையின்றி வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்?' என்று "நம்மைச் சேர்ந்தவர்கள் ஏசிப்பேச, நாம் எந்தக் கவலையும் இன்றி நம் முன்னோர்கள் தேடிவைத்த பெருநலத்திலும் வளத்திலும் வாழ்விலும் திளைத்து மகிழ்ந்தாலும், அந்த வளமும் நலமும் கூட நம் உள்ளத்தைச் சுடும்; நம் அறிவையும் சுடும்; வாழ்வையும் சுடும்" என்கிறார் திருவள்ளுவப் பேராசான்;*

*குலம்சுடும் கொள்கை பிழைப்பின்; நலம்சுடும்*
*நாணின்மை நின்றக் கடை. (குறள் : 1019)*

*எனவே, செயல் நிலைகளுக்காக நாணமற்றவர்களாக, வெட்கம் கெட்டவர்களாக நாம் வாழ்தலினும், சாவதே மேல்.*

*நாணால் உயிரைத் துறப்பர்; உயர்ப்பொருட்டால்*
*நாண்துறவார் நாணாள் பவர். (குறள் : 1017)*

## 14. எதிர்காலம்
## (அறிவுப்புரட்சிக் காலம்)

இஃதோர் அறிவுப் புரட்சிக் காலம். அறிவு மிகுதியாக வளர்ந்து வருகின்றது என்று எல்லாரும் பேசிக் கொள்கின்றனர். நாமும் பேசுகின்றோம். வானைமுட்டும் கட்டடங்கள் கட்டப் பெறுகின்றன. பெரிய பெரிய வயல்களை எந்திரங்கள் பாய்ந்து உழுகின்றன; விதைக்கின்றன; எருவிடுகின்றன; நீர்பாய்ச்சு கின்றன; களைபறிக்கின்றன; கதிர் அறுக்கின்றன; குத்திப் புடைத்துத் தீட்டிக் கொடுக்கின்றன. இவையெல்லாம் அறிவு வளர்ச்சிதானே! இவை மட்டுமா? நெடுந்தொலைவிலிருக்கின்ற நாடுகளுக் கிடையில் அன்றாடம் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. உலகில் ஒரு மூலையில் நடக்கும் செய்திகள் உடனுக்குடனே எல்லாப் பகுதிகளுக்கும் அறிவிக்கப் பெறுகின்றன.

பஞ்சாடை கட்டியிருந்த நாம் நார்ஆடை கட்டுகின்றோம். தாளாடையும் புழக்கத்திற்கு வந்து கொண்டுள்ளது. சாரமற்ற உணவை உண்டது போய் நல்ல சாரமுள்ள உணவு செய்யப் பெறுகின்றது. இப்படி உண்ணல், உடுத்தல், உறைதல் என்ற இவற்றில் மட்டுமா அறிவு முன்னேற்றம் பெருகியுள்ளது? இல்லை, பொழுதுபோக்கு, களியாட்டங்கள், ஆடல், பாடல் முதலிய எல்லாவற்றுள்ளும் இக்கால மாந்தன் முற்கால மாந்தனைவிட எவ்வளவோ முன்னேறியுள்ளான்.

எதிர்காலத்தில் இன்னும் வியப்பான செய்திகளெல்லாம் நடைபெறப் போகின்றன. வாய்நிறையச் சோற்று உருண்டைகளைப்போட்டு மென்று கொண்டிருக்க நேரமிராது.

இலை நிறையும்படி காய்கறிகளைச் சமைத்துண்ண ஓய்வு கிடைக்காது. உயிருடன் இருக்கச் சாரக்குளிகைகள் நிறையப் புழக்கத்திற்கு வரும். ஒரு மணி நேரம் இரண்டுமணி நேரத்திற்கொரு தடவை, அல்லது ஒருநாளைக்கொருமுறை ஒரு குளிகையும் ஒரு குவளை நீரும் போதுமென்று வரும். அக்காலத்தில் ஒரு கட்டடமே ஓர் ஊர் என்று நினைக்குமளவில் மக்கள் நெருங்கி வசிக்கலாம். கட்டிடங்கள் அகன்றிரா. மிக உயர்ந்து இருக்கும், உச்சி மாடியிலிருந்து அடிமாடிக்கு வர, சிறு சிறு உந்துகள் பயன்படுத்தப் படலாம். பெரும்பாலும் மக்கள் கீழே வரப்போகத் தேவையில்லாதபடிகூட எல்லா அமைப்புகளும் அங்கங்கேயே வைக்கப் பெற்றிருக்கும்.

இத்தனை முன்னேற்றங்கள் இருந்தும் ஒன்றே ஒன்று அம் மக்களிடத்து இல்லாமற்போகலாம். அதுதான் பண்பாடு-ஒழுக்கம். அந்த நிலையின் முன்னோடியாகத்தான் இப்பொழுதுள்ள உலகம் செயற்பட்டு வருகின்றது. இதை நினைத்தால் அச்சமாகவும் அருவருப்பாகவும் இருக்கின்றது; இல்லையா? ஆமாம் அப்பொழுதுள்ள உலகம் அச்ச உலகமாகவும் அருவருப்பு உலகமாகவும்தான் இருக்கும். ஒருவருக்கும் ஒருவரும் காவலாக இருக்க முடியாது. அவரவர் தாம் அவரவரைக் காத்துக் கொள்ளும்படி இருக்கும். குடும்பம் இருக்காது; தாய்தந்தைகள் யாரென்று தெரியாது குழந்தைகள் இருக்கும். அரசாட்சி இருக்கும்; அதிகாரம் இருக்காது. குத்துக் கொலைகள் மிகுந்திருக்கும்; வழக்குகள் இரா. ஒருவனை ஒருவன் குற்றஞ்சாட்ட முடியாது. கல்வி இருக்கும்; கட்டுப்பாடுகள் இரா.

இவையெல்லாம் கற்பனை என்று எண்ணாதீர்கள். நடக்கப் போகின்றன; நடக்கத்தான் போகின்றன. எண்ணிப்பாருங்கள். ஆனால் ஒன்று. இவை கட்டாயம் நடக்கும் என்பதும் நடவா என்பதும் நம் கைகளில்தாம் உள்ளன. ஆமாம். நாம் இன்றைக்கு விதைப்பதுதானே நாளைக்கு வளர்கிறது. நாளை மறுநாள் பயன் தருகின்றது. இன்று அவரை விதை போட்டு நாளைக்குக் கத்திரிக்காய் அறுக்க முடியுமா? முடியாது. அதுபோல்தான் இன்று நாம் நடந்து கொள்வதைப் பொறுத்துத்தான் நாளைய மக்கள் குலம் அமையவிருக்கின்றது. இந்த உண்மை இன்றுள்ள

எல்லாருக்கும் புரியும், விளங்கும். ஆனால் இதைப் பற்றி எவரும் கவலைப்படவில்லை. இன்றுள்ள மக்களைப் பற்றியே எவரும் கவலைப்படவில்லை என்றால் நாளைவரும் மக்களைப் பற்றி யார் கவலைப்படுவார்கள்? அதனால், நாளைய உலகம் மிகவும் அஞ்சத் தக்கதாகவும் அருவருக்கத் தக்கதாகவும் இருக்கும்.

இதைப் பற்றி எல்லாருமே கவலைப்படாமல் நாம் மட்டும் கவலைப்படுவதால் என்ன பயன் விளையப்போகின்றது? இல்லையா? அதுதான் தவறு. நாம் ஒன்றைப்பற்றிக் கவலைப் படப்பட நம் அருகில் உள்ளவர்களும் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கவும் கவலைப்படவும் தொடங்குகிறார்கள். அவர்கள் கவலையும் எண்ணமும் மற்றவர்களையும் பற்றுகின்றன. சாவு வீட்டில் ஒருவர் அழ, நாமும் அழுது வருகின்றோம் இல்லையா? அது போல, வலுவான எண்ணம் உடையவர்கள் எண்ணினால் அந்த எண்ணம் ஈடேறியே தீரும். முன்னால் போகின்ற ஆட்டைப் பின்பற்றித்தானே பின்னால் வரும் ஆடுகள் நடைபோடுகின்றன. எறும்புகளைப் பாருங்கள். முன்னால் உள்ள எறும்பு எப்படி வளைகின்றதோ அப்படியே பின்னால் உள்ள எறும்புகளும் சாரைசாரையாகப் போகின்றன அல்லவா?

மக்களினமும் அப்படித்தான். “வல்லான் வகுத்தது வாய்க்கால்”. பொதுமக்கள் எப்பொழுதும் ஒருவரைப் பின்பற்றிப் போவதையே விரும்புகின்றார்கள். ஆனால் யாரைப் பின்பற்றுவது என்பதில்தான் குழப்பம் அடைகின்றார்கள். இந்தக் குழப்பத்தைத்தான் ஏமாற்றுக்காரர்களும் அரசியல்காரர்களும் நன்றாய்ப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். அதனால் மக்கள் பலவாறு திசைமாறிச் சிதறுண்டு இழிந்து போகின்றார்கள். இந்நிலையில் முன்னே குறிப்பிட்டவாறு இனி வரப்போகும் பண்பாடற்ற உலகை, அஞ்சத்தக்க உலகை, அருவருக்கத்தக்க உலகை நாம் முயன்றால் வராமல் தடுத்துவிட முடியும்.

### எது முன்னேற்றம் ?

மாந்தன் மிகவும் முன்னேறியுள்ளான் என்பது மெய். ஆனால் எதில் முன்னேறியுள்ளான் என்பதைக் கொஞ்சம் எண்ணிப்பார்த்தால் விளங்கிவிடும். பஞ்சு உடைபோய் பட்டுடை வந்தது. பிறகு அதுவும் போய் நார்உடை வந்தது. பிறகு

இதுவும் போய் பளபளப்பான மெல்லிய ஞெகிழிக் குழம்பால் செய்த உடைகள் வரலாம். ஆனால் இவற்றால் நமக்கு, நம் அறிவுக்கு, மனத்துக்கு என்ன ஊதியம் வந்தது? இத்தகைய உடைகள் போடுவதால் நமக்கு நோய்கள் வராமலா போய்விட்டன? நாம் முதுமை எய்தி இறக்காமலா போய்விட்டோம்? இதை விட்டு விடுவோம்.

நாம் பூசிக்கொள்ளவும் மினுக்கிக் கொள்ளவும் வகைவகையான மணப்பொடிகளும், வண்ணப் பூச்சுகளும் வந்து கடைத்தெருவெல்லாம் நிரம்பி வழிகின்றனவே, இவற்றால்தான் என்ன பயன்? ஒவ்வொருநாளும் இவற்றைப் பயன்படுத்தி என்ன பயன் கண்டோம்? காசு செலவு. பலவகையான புதுப்புது நோய்கள்! அவற்றிற்கான புதுப்புது மருந்துகள்! ஊசிகள்! குளிகைகள்! இவைதாமே பயன்கள். எண்ணிப்பாருங்கள் இவையா முன்னேற்றம்? இயற்கையாக வாழ்ந்து கொண்டிருக்கும் பறவைகளையும், விலங்குகளையும் பாருங்கள். அவற்றுக்கு அன்றிலிருந்து இன்றுவரை இருக்கும் அழகிய பளபளப்பான வண்ணச் சிறகுகளையும் மேனிகளையும் பாருங்கள்.

செயற்கையாக நாம் புனைந்து கொள்வதில் தீமைகள்தாம் மிகுதியாக முன்னேறியுள்ளனவே யன்றி நன்மைகள் மிகுந்துள்ளன என்று நம்மால் கூறமுடியுமா? நாம் அன்றாடம் பயன்படுத்தும் மிகுந்த மணமுடைய வழலை (சோப்பு)க் கட்டிகள் நம் மேனியை எத்துணையளவு பாழடித்து விட்டன. நம் உடல் பளபளப்பு போய்விட்டது! இளமை எழில் மங்கி விட்டது. சொரசொரப்பான வறண்ட பாதையைப் போல் நம் பொன்னுடல் கருகி வனப்பிழந்து விடவில்லையா? நம் முகத்தில் ஒளி இல்லையே! இவை யெல்லாம் எப்படி முன்னேற்றம் ஆகும்?

### அன்றும் இன்றும்

புதிது புதிதாக நாம் உண்ணும் சுவைமிக்க உணவுகள்தான் நமக்கு எந்த வகையில் பயன் தந்துவிட்டன? நம் முன்னோர் எத்துணை வலிவு படைத்தவர்களாக இருந்தனர்? அவர்களின் கால்கள் தூண்களைப்போல் எப்படிப் பருத்திருந்தன! அவர்கள்

தோள்கள் எவ்வளவு அழகாக மதர்மதர்த்துப் பொங்கி யெழுந்து குன்றுபோல் விளங்கியிருந்தன! நம்மைப் பாருங்கள். நம் கால்கள் தட்டுக் குச்சியைப்போல், கொக்கின் கால்களைப்போல் மெலிந்து வலிவற்றுப்போய்விட்டன, கைகள் கொழகொழத்துப் போய்விட்டன. தோள்கள் சூம்பலுற்று மூங்கில் தண்டைப்போல் நொள நொளத்துப் போய்விட்டன. தலை வழுக்கை! முகம் பொலிவிழந்து விளங்கவில்லையா? உதடுகள் கறுத்து வெடிப்புற்றுத் தோன்றுவது எத்துணை அருவருப்பு! நமக்குத்தாம் எத்தனை வகையான நோய்கள்! எங்கே நம் முன்னேற்றம்?

ஊர்திகள் பெருகப் பெருக நம் கால்கள் சூம்பிப்போயின. பொறிகள் மிகமிக நாம் செயலிழந்து போய்விட்டோம். புனைவும், மேனி மினுக்கலும் மிகுதியாகப் போகப்போக நாம் ஆண்மை குறைந்து போனோம். இக்கால் உள்ள பெண்களுக்குப் பெண்மையும் இல்லை; ஆண்களுக்கு ஆண்மையும் இல்லை. அஃதாவது நம் முன்னேற்றம் அத்தனையும் கூட்டிப் பெருக்கிக் கழித்துப் பார்த்தால் நாம் நமக்கே பயன்படாதவர்கள். நம் நாகரிகம் நம்மை அழித்து வருகின்றது. இறுதியில் நம் நாகரிகப் பொருள்களால் இவ்வுலகமே அழிந்து போவது உறுதி!

### ஏற்றத்தாழ்வுகள்

இவ்வளவு முன்னேற்றம் அடைந்து விட்டதாகப் பீற்றிக்கொள்கிறோம். நம் இழிவைப் போக்கிக் கொண்டோமா? நிலாக்கோளுக்கும், செவ்வாய்க் கோளுக்கும் நம் செலவை நீட்டித்துக் கொண்டதாகக் கூறிக் கொள்கிறோமே. நம் இனத்தையே நாம் தாழ்த்துகின்ற அறியாமையினின்றும் நாம் விடுபட்டோமா? அப்பப்பா! கறுப்பன் என்றும் வெள்ளையன் என்றும் எத்தனை நிற வேறுபாடு! சீச்சீ! நாம் விலங்குகளினும் கீழானவர்கள். நம் இழிவுகள் பலப்பல. ஆனால் பெருமை பேசுவது குறையவில்லை.

நாம் முன்னர்க் கண்ட அருவருப்புலகமும் அச்ச உலகமும் வராமல் நாம் காக்கவேண்டுமானால் முதலில் உண்பதிலும் உடுப்பதிலும், உறைவதிலும் மட்டும் முன்னேற்றம் காண்பது போதும் என்ற கொள்கையை நாம் விட்டுவிட வேண்டும். நமக்கு

வாயும் வயிறும் எவ்வளவு முகாமை ஆயினவோ, அவ்வளவு இன்றியமையாதவை அறிவும் மனமும்., அறிவு வளர வளர மனமும் கூடவே வளரவேண்டும். அல்லாக்கால் அறிவு பயனற்றுப் போய்விடும்.

### பொதுவுடைமை

இனத்தாலும் குலத்தாலும் பிறப்பாலும் செல்வத்தாலும் ஒருவன் மட்டும் உயர்ந்தவனாகவும், ஒருவன் தாழந்தவனாகவும் இருக்கக்கூடாது. எல்லாரும் ஒரே பிறவியாகக் கருதப்படவேண்டும். எவருக்கும் தனியான உடைமையே இருக்கக்கூடாது; இவ்வுலக உருண்டையின் மண்ணும் நீரும் விளைவும் எல்லாருக்கும் பொதுவானவையாக இருக்கவேண்டும். எல்லாரும் உழைக்க வேண்டும். ஒருவன் உழைக்கவும், ஒருவன் உழைக்காது உண்ணவும் உள்ள குள்ளநிலையைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். சாதி, குலம் பேசுபவர்களை மக்களினத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். தாழ்வு, உயர்வு சொல்பவனைத் தூக்கிக் கடலில் வீசவேண்டும். அவனால் இந்த உலகத்திற்கு எத்தனைக் கேடுகள்? பயிர்கள் வளரக் களைகளை அழித்துத்தானே ஆகவேண்டும். பொதுமை உணர்வு என்று நம் உள்ளத்தில் தோன்றுகின்றதோ, அன்றே நாம் முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைக்கின்றோம் என்று பொருள். மற்றபடி பொறிகளும் கட்டங்களும் ஊர்திகளும் உடைகளும் நம் முன்னேற்றங்கள் ஆகா!

# 15. தெரிந்து தெளிதல்!

திருக்குறளில் 'தெரிந்து தெளிதல்' என்றோர் அதிகாரம் உண்டு. அரசர்க்கு உரியனவாகக் கூறப்பெறும் பல்வேறு உணர்வுக் கூறுகளில், இதையும் ஒன்றாகக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்.

இந்த அதிகாரத்தின் பொருள், அரசாட்சியில் அமர்த்தப் பெறுகின்ற பதவியாளர்களை அரசன் முழுமையாகத் தெரிந்து அவரவர்களின் தகுதியறிந்து, இன்னின்னவர் இன்னின்ன பணிகளைச் செய்யப் பொருத்தமுடையவர்கள் என்று தெளிதல் வேண்டும் என்பது.

*கருத்துகள்*

இனி, எந்தக் கருத்தையும் அறிவுத்திறம் உள்ளவர்கள் முழுமையாக, அஃதாவது, ஒரு கருத்து, அதன் வேர்க்கருத்து, அதன் மூலக் கருத்து, அதன் அடிநிலைக் கருத்து, அதன் பக்கக் கருத்து, அதன் சார்புக் கருத்து, அதன் கிளைக் கருத்து, அதன் பயன், அது விளையும் காலம், அக் கருத்துக்கு எதிராக அல்லது தாக்கமாகப் புறப்படும் கருத்து முதலியவற்றைத் தீர்மானமாகக் கணித்தறிந்து, அக் கருத்து மொத்தத்தில் எத்துணை வலிவுடையது, பயன் தரக் கூடியது, எதிர் கருத்துகளை வெல்லும் தன்மையுடையது என்பன பற்றியெல்லாம் தெளிய வேண்டும் என்பது பற்றியதாகும்.

*மூலக்கருத்து*

பெரும்பாலும் நாம் மேற்கொள்ளும் கொள்கைகளுக்கு நம் மூலக் கருத்தே ஊற்றமாக நிற்கும். மூலக்கருத்தையும் அதன் பிற உறுப்புகளாக உள்ள துணை, கிளை, பக்கநிலை, எதிர்க் கருத்துகளையும் சரியாக, திட்டவட்டமாக, ஒருவர் தெரிந்து கொள்ளவில்லையானால். அவர் தம் கொள்கையிலும் திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வர முடியாது. அதனால் அவருடைய கொள்கையில் தளர்ச்சியும், நெகிழ்ச்சியும்

கொண்டவராகி அதில் உறுதிப்பட்டு நிற்க முடியாமல், அடிக்கடி அதனை மாற்றிக் கொண்டு, ஒன்றிலும் காலூன்றாமல், அல்லது வெற்றி கொள்ள முடியாமல் தடுமாற, அல்லது இடர்ப்பட்டு நிற்க வேண்டியிருக்கும்.

இப்படிப் பட்டவர்கள் இடையிடையே தொய்வடைந்தும் விடுவர். ஒன்றிலும் உறுதிப்பாடுடையவர்களாக இல்லாமல், ஐயத்திற்குரியவர்களாகவும், பிறர்க்குத் தெளிவான வழி காட்டுவதற்குத் தகுதியற்றவர்களாகவுமே இருப்பர்.

### இன்றைய இளைஞர்

இன்றைய நிலையில் நம் நாட்டு இளைஞர்களின் நிலை இவ்வாறுதான் உள்ளது. அவர்கள் துடிப்பு உள்ளவர்களாக இருக்கின்றார்களே தவிர, எதிலும் காலூன்றியவர்களாகவோ உறுதியுடையவர்களாகவோ இருப்பதில்லை. தங்களுக்கென்று ஒரு தெளிவான கொள்கை உடையவர்களாக இருக்கும் இளைஞர்களை இக்காலத்தில் காண்பது மிகவும் அரிதாக இருக்கிறது. வேளைக்கொரு கொள்கை, நாளைக்கொரு கோட்பாடு என்று அவர்களின் போக்கு உள்ளது இஃது எதிர்காலத்திற்கு நல்ல அறிகுறியாகாது.

இளைஞர்களின் உணர்வு எரிந்து கொண்டிருக்கிற நெருப்புப் போன்றது. அ'து அடங்கி எரிகின்ற பொழுதுதான் ஏதாவது பயனுடைய வழியில் அஃது இயங்க முடியும். இல்லெனில் அது மக்களுக்கும் நாட்டுக்கும் அல்லது அவர்களுக்குமே பயன்படாததுமன்றி, அனைத்துக்கும் கேடாகவே முடியும்.

> "இளமையோ எச்செயலும் செய்யும்!
> இளமை அறிவோ இயைந்தால்
> நாட்டுக்கு விளைவதெல்லாம் நன்மையே!"

என்பார் பாவேந்தர்.

### பெற்றோரின் வளர்ப்பு

இக்கால இளைஞர்களுள் பெரும்பாலார், நல்ல சூழ்நிலையில் வளர்வதில்லை, வறுமையும், அடிமைத் தாக்கமும், நிறைந்த சூழலில் ஏதாமொரு கொள்கை நோக்கமும் அற்ற பெற்றோரால் அவர்கள் வளர்க்கப் பெறுகிறார்கள். அடுத்து, அவர்களின் இளமை, சிறப்பற்ற கல்வியாலும், சிதைவுற்ற

இழிவுக் கலை, காட்சிகளாலுமே வார்த்தெடுக்கப் பெறுகிறது. இத்தகைய அருவருப்பான மனவளர்ச்சியும், அழிவான அறிவு முதிர்ச்சியும் கொண்ட அவர்களிடத்தில் ஒரு கொள்கை தழுவிய வாழ்வியல் முறை எவ்வாறு அமைய முடியும்? எண்ணிப் பாருங்கள்.

*ஆசிரியர் நிலை*

இனி, இன்னும் அவர்கள் தங்கள் இளமைக் காலத்தில், நாட்டிலுள்ள நூற்றுக கணக்கான அரசியல் அல்லது பொருளியல் அல்லது குமுகாயக் கட்சிகளுள் விளம்பரம் பெற்றதும், ஆரவாரம் நிறைந்ததும், கவர்ச்சி மிகுந்ததும், போலித்தனம் மிக்கதுமான ஒரு கட்சியால், அவர்களின் முதிர்ச்சியின்மைக்கு ஏற்ப, ஈடுபாடு கொள்ளவும் இயங்கவும் வேண்டியுள்ளது. இளைஞர்களை நெறிப்படுத்துபவர்களாக அமைய வேண்டிய அவர்களுக்கு அமைந்த ஆசிரியர்களும் பெரும்பாலும் முது இளமைப் பருவம் கொண்டவர் களாகவே உள்ளதால், அவர்களுடைய நிலையும் நாம் மகிழுமாறு இல்லை.

*கற்றுத் தெளிக ?*

இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு மிக அன்பாகவும் அக்கறையோடும் நாம் சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம், அவர்கள் தங்கள் அறிவு நிலையையும் உள்ள உணர்வுகளையும் சிதறவிட்டுக் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று இல்லாமல், தங்கள் கல்வித் தொடர்பானவற்றிற்கும் பொருத்தமான, நூல்களைக் கற்றுத் தெளிதலும், பின் தங்கள் சிந்தனையாற்றலை வளர்த்துக் கொண்டு நன்கு சிந்தித்துத் தாங்கள் கடைப்பிடிக்க வேண்டுவது, வாழ்க்கையானாலும், தொண்டானாலும், கட்சியானாலும், கலையானாலும், அவை தொடர்பான கூறுகளை நன்கு தெரிந்து, தெளிந்து, தக்கவற்றைக் கொள்கையாகக் கொண்டு தங்கள் எதிர்காலத்தைச் செப்பமாகவும் உறுதிப்பாடு உடையதாகவும் அமைத்துக் கொள்ளவும் வேண்டுமென்பதே!

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும். (குறள் : 435)*

★ ★ ★